24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 30
பக்கங்கள்: 28

சுடர் 33 கதிர் 317 புரட்டாதி 23ஆம் நாள் செவ்வாய்க்கிழமை 09 ஒக்ரோபர் 2018 வள்ளுவர் ஆண்டு 2049

குருப்பெயர்ச்சி பலன்கள் - 2018
பக் - 18

*பலாலிக்கான*

## வானூர்திப் பாதை வரையும் பணி பூர்த்தி

யாழ்ப்பாணம், ஒக். 9
பலாலி வானூர்தி நிலையத்திலிருந்து வெளிநாடுகளுக்கான வானூர்திச் சேவை ஆரம்பிக்கப்படவுள்ளதால், பலாலி வானூர்தி நிலையத்துக்கு வானூர்திகள் வருகை தரும், வெளிச் செல்லும் பாதை வரைபடத்தை வரையும் பணி முழுமையடைந்துள்ளது. பலாலி வானூர்தி நிலையத்தை பிராந்திய வானூர்தி நிலையமாக >> 25

## ஓய்வுபெற்றோர் அரசியலுக்கு வரக்கூடாது

*சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஒக்.9
ஓய்வு பெற்ற அரச உத்தியோகத்தர்களை அவர்களது துறை சார்ந்த விடயங்களில் ஆலோசனைக்காகவும் பக்கபலமாகவும் ஈடுபடுத்த யோசனைகளை முன்வைக்க வேண்டிய தேவை உள்ளது. ஒய்வு பெற்றவர்கள் அவர்களின் துறையை விட்டு அரசியலுக்கு வரக்கூடாது.
இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.
தேசிய ஓய்வூதியர் தின விழா யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் தலைமையில் நேற்று நடைபெற்றது.
நிகழ்வில் முதன்மை >> 25

*தீருவில் தூபிக்கு எதிரான*


## பொலிஸாரின் மனு மன்றால் நிராகரிப்பு

வடமராட்சி, ஒக்.9
வல்வெட்டித்துறை, தீருவில் பொதுப் பூங்காவில் குமரப்பா, புலேந்திரன் உட்பட 12 போராளிகளுக்கு அமைக்கப்படவுள்ள நினைவுத் தூபிக்குத் தடை விதிக்க வேண்டும் என்ற வல்வெட்டித்துறைப் பொலிஸாரின் கோரிக்கையை பருத்தித்துறை நீதிவான் மன்று நேற்று நிராகரித்தது.
பொலிஸாரால் கோரப்பட்ட தண்டனைப் பிரிவு 120 கீழ் >> 25

## விஜயகலா கைதாகிப் பிணை; வெளிநாடு செல்லவும் தடை!!



கொழும்பு, ஒக்.9
குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் நேற்றுக் காலை கைதுசெய்யப்பட்ட முன்னாள் இராஜாங்க அமைச்சரும் ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான விஜயகலா மகேஸ்வரன், கொழும்பு தலைமை நீதிவான் நீதிமன்றத்தால் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார். எனினும், அவருக்கு வெளிநாடு செல்லத் தடை விதிக்கப்பட்டது.
தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு மீண்டும் உருவாக வேண்டும் எனக் கருத்து வெளியிட்டிருந்த விஜயகலா மகேஸ்வரனை அது தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காக திட்டமிட்ட குற்றத் தடுப்புப் >> 25



## அதிகாலை வீடு புகுந்து நகை. பணம் கொள்ளை

*மீசாலையில் வாள்களுடன் வந்த குழு அட்டகாசம்*

யாழ்ப்பாணம், ஒக்.9
வீட்டொன்றுக்குள் அதிகாலை வேளை புகுந்த கொள்ளையர்கள், வீட்டிலிருந்தவர்களை அச்சுறுத்தி பணம் மற்றும் நகைகளைக் கொள்ளையடித்துத் தப்பிச் சென்றனர். >> 25

# இலங்கை மீதான கண்காணிப்பை நீடிக்கும் வரைவு 2019 ஆண்டு வரும்

*பிரிட்டன் அமைச்சர் கொழும்பில் தெரிவிப்பு*



யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 9
இலங்கை மீதான ஐ.நாவினதும் பன்னாட்டுச் சமூகத்தினதும் கண்காணிப்பு அடுத்த ஆண்டு மார்ச் மாதத்துடன் முடிவுறும் நிலையில், அதனை மேலும் 2 ஆண்டுகளுக்கு நீடிக்கும் தீர்மான வரைவு ஐ.நா. மனித உரிமைகள் சபையின் ஜெனிவாக் கூட்டத் தொடரில் கொண்டு வரப்படும் என்று, இலங்கைக்கு கடந்த வாரம் பயணம் மேற்கொண்ட பிரிட்டனின் ஆசிய மற்றும் பசுபிக்குக்கான அயலுறவுத்துறை பணியகத்தின் இராஜாங்க அமைச்சர் மார்க் பீல்ட் தெரிவித்துள்ளார். >> 25

*அரசியல் கைதிகள் விவகாரம்*

## சந்திப்புக்கு நேரம் ஒதுக்காது வெளிநாடு பறந்தார் மைத்திரி

கொழும்பு, ஒக். 9
தமிழ் அரசியல் கைதிகள் தொடர் உணவு ஒறுப்புப் போராட்டத்தை முன்னெடுத்துள்ள நிலையில், அவர்களின் விடுவிப்புத் தொடர்பில் பேச்சு நடத்துவதற்கு அரச தலைவரிடம் கூட்டமைப்பு கோரியிருந்த நிலையில், சந்திப்புக்கு நேரம் ஒதுக்காது அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன >> 25



## அரசியல் கைதிகளுக்கு ஆதரவாக கவனவீர்ப்பு

யாழ்ப்பாணம், ஒக்.9
சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை விடுவிக்கக் கோரியும், உணவு ஒறுப்பில் ஈடுபட்டுள்ள அரசியல் கைதிகளுக்குப் பலம் சேர்க்கும் வகையிலும், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கக் கோரியும் நேற்று யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்துக்கு முன்பாவும், அச்சுவேலி பேருந்து நிலையத்துக்கு முன்பாகவும் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன.

**யாழ். பல்கலைக் கழகம்**
யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்துக்கு முன்பாக பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தால் ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.
சுமார் 45 நிமிடங்கள் கழக நுழைவாயிலில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.- ஆர்ப்பாட்டத்தில் மாணவர்கள், விரிவுரையாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். >> 25



## வீட்டுத் திட்டங்களை ஆராய கிளி. வந்தது இந்தியக் குழு

கிளிநொச்சி, ஒக்.9
வீட்டுத் திட்டம் வழங்குவது தொடர்பில் ஆராய்வதற்காக இந்தியக் குழு ஒன்று நேற்று கிளிநொச்சி மாவட்டத்துக்கு வந்தது.
இந்தக் குழு முற்பகல் 10 மணியளவில் கிளிநொச்சி மாவட்டச் செயலரைச் சந்தித்தது. கிளிநொச்சி மாவட்டத்தில் இதுவரை முன்னெடுக்கப்பட்ட வீட்டுத் திட்டங்கள், அவை முன்னெடுக்கப்பட்ட வகைகள், >> 25

## விடுதலையை வலியுறுத்தி அ'புரத்துக்கு நடைபயணம்

யாழ்ப்பாணம், ஒக்.9
அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி யாழ்ப்பாணத்தில் இருந்து அநுராதபுரம் நோக்கிய நடைபயணம் நேற்று ஆரம்பிக்கப்பட்டது.
யாழ்ப்பாணப் பல்கலைக் கழக நுழைவாயிலில் நேற்று >> 25

# உள்ளூராட்சி சபைகளிடம் வீட்டுத் திட்டப் படிவங்கள்

## அமைச்சர் சஜித் பிரேமதாச கையளித்தார்

தென்மராட்சி, ஒக். 9

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையால் நடைமுறைப்படுத்தப்படும் வீடமைப்புத் திட்டச் செயற்பாடுகள் உள்ளூராட்சி சபைகள் மூலம் மேற்கொள்ளப்படவுள்ளன. இதற்கான படிவங்கள் நேற்றுமுன்தினம் வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாசவினால் உள்ளூராட்சி சபைகளின் தவிசாளர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

உள்ளூராட்சி உறுப்பினர்கள் தமது வட்டாரத்தில் பொருளாதார நிலையில் பின்தங்கிய குடும்பங்களில் வீடு தேவையானவர்களுக்கு வீடுகள் அமைக்க 5 லட்சம் ரூபாவும் சேதமடைந்த வீடுகளைச் சீரமைக்க 50 ஆயிரம் ரூபாவும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் பங்களிப்புடன் வங்கிகள் ஊடாக கடனாக வழங்கவென படிவங்கள் வழங்கப்பட்டுள்ளன.

பொருளாதார நிலையில் பின்தங்கிய குடும்பங்களில் பிரதேச செயலகத்தினால் புள்ளிகள் அடிப்படையில் தெரிவுசெய்யும்போது வீடுகள் கிடைக்கத்தவறுபவர்கள் மற்றும் வீடமைப்புத் திட்டங்களுக்குத் தெரிவு செய்யப்படாதவர்கள் தமது வட்டார உறுப்பினருடன் தொடர்பு கொண்டு உரிய படிவத்தினைப் பெற்று முழுமைப்படுத்தி வழங்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. உள்ளூராட்சி உறுப்பினர்கள் பயனாளிகள் பெறும் கடன் தொகையில் வீடு அமைப்பதைக் கண்காணிக்கவும் பெற்ற கடனைத் திருப்பிச் செலுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

இலங்கை வங்கி, மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி ஆகியவற்றின் ஊடாகக் கடன்கள் வழங்கப்பட்டு குறைந்தவட்டியுடன் மீளப்பெறப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

தற்போது மறுவாழ்வு அமைச்சு மற்றும் நல்லிணக்க அலுவலகம் போன்றவற்றினால் மீளக் குடியேறிய மக்களுக்கு 12 லட்சம் ரூபா செலவில் வீடுகள் அமைக்கப்பட்டுவரும் நிலையில் வீடு அமைக்க தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் வழங்கப்படும் ஐந்துலட்சம் ரூபா நிதிபோதாது என மக்கள் கடன்பெறுவதற்கு பின்னடித்து வருகின்றனர் எனவும் இந்தத் தொகை விரைவில் அதிகரிக்கப்படுமென வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாச மந்துவிலில் இடம்பெற்ற நாவலர் கோட்ட வீடமைப்புத் திட்டத் திறப்பு விழாவில் தெரிவித்திருந்திருந்தார்.

(21.9.159.62)

# தீயில் எரியுண்ட மாணவி சிகிச்சைபயனின்றிச்சாவு

யாழ்ப்பாணம். ஒக். 9

பெற்றோல் ஊற்றி எரிந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட 14 வயது மாணவி சிகிச்சை பயனின்றி எட்டு நாள்களின் பின்னர் நேற்று உயிரிழந்தார்.

கோண்டாவில் தொடருந்து நிலைய சாலையைச் சேர்ந்த ஜெயக்குமார் சத்தியா என்ற மாணவியே இவ்வாறு உயிரிழந்தார்.

எரிந்த நிலையில் கடந்த முதலாம் திகதி யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்துள்ளார் சத்தியா. எனினும் நேற்றுக் காலை சிகிச்சைபயனின்றி உயிரிழந்தார்.

மாணவியின் இறப்புத் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட யாழ்ப்பாணம் பொலிஸார் யாழ்ப்பாணம், நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்திருந்தனர். அறிக்கையினைப் பார்வையிட்ட நீதிவான் பிரதேச திடீர் இறப்பு விசாரணை அதிகாரி மூலம் சாவு விசாரணைகளை நடத்தி அறிக்கை தாக்கல் செய்யுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டிருந்தார்.

(21.9.159)

# மகிந்த ஆட்சிக்கு வந்தால் நெருக்கடியைத் தீர்ப்பார்!

## அஜித் நிவாட் கப்ரல் கூறுகிறார்

கொழும்பு, ஒக். 9

நாடு மிக மோசமான பொருளாதார நெருக்கடி நிலையைச் சந்தித்துள்ளது. அதைத் திறமையாக எதிர்கொள்ளும் தலைமைத்துவம் முன்னாள் அரசதலைவர் மகிந்தராஜபக்சவிடமே உள்ளது.

இவ்வாறு தெரிவித்துள்ளார் மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட்கப்ரல்.

தற்போது நாட்டில் நிலவும் பொருளாதார நிலைமை மற்றும் அதனால் நாடு எதிர்கொள்ளவுள்ள பாரதூரத் தன்மை போன்ற விடயங்கள் குறித்துத் தெளிவுபடுத்தும் வகையில் நேற்றுக் கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவித்தாவது

கடந்த ஆட்சியில் அவருடன் இணைந்து பணியாற்றிய அனுபவத்தின் மூலம் இந்தகைய சூழ்நிலைகளைச் சூட்சுமமாகக் கையாளும் திறன் அவரிடம் உள்ளது என்பதை அறிவேன்:

மீண்டும் மகிந்த தலைமையில் நாம் தலைமைத்துவத்தைக் கைப்பற்றினால் தற்போதைய பொருளாதார நெருக்கடிகளுக்கு விரைந்து தீர்வு காண முடியும். என்றார்.

# பெற்றோர் தமது பெருமைக்காக மாணவர்களைத் திணிக்கின்றனர்

## சாவகச்சேரிப் பிரதேச தவிசாளர் தெரிவிப்பு



கொடிகாமம், ஒக். 8

பெற்றோர்கள் தமது மதிப்புக்காக பிள்ளைகளின் கல்வியில் தொடரும் அழுத்தம் காரணமாக ஏற்படும் வெறுப்பால் மாணவர்கள் பலர் மந்தகதிக்குத் தள்ளப்படுகின்றனர். அவர்களை சுயமாகக் கற்கவழிவிடுங்கள் என்று சாவகச்சேரிப் பிரதேச சபைத் தவிசாளர் க.வாமதேவன் தெரிவித்தார்.

சாவகச்சேரி, அல்லாரை ஐங்கரன் முன்பள்ளிச் சிறார்களின் ஆக்கப் பொருள்கண்காட்சி நிகழ்வு நேற்று நடைபெற்ற போது அதில் விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது

ஆரம்பப் பிரிவில் மாணவர்களுக்கு அழுத்தம் கொடுக்கும் பெற்றோர் இடைநிலை வகுப்புக்களில் அவ்வாறான அழுத்தங்கள் கொடுக்காததால் அவர்கள் சுயமாகக் கற்று அடுத்து வரும் பரீட்சைகளில் அதி சிறந்த பெறுபேறுகள் பெற்றுக் கொள்வதைக் காணக்கூடியதாக உள்ளது.

பிள்ளைகள் சுயமாக கற்கக் கூடிய வகையில் பெற்றோர்கள் செயற்பட்டால் ஐந்தாம் தரப்புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெறும் மாணவர்களின் எண்ணிக்கை பெருமளவு அதிகரிக்கும். கடந்த வாரம் வெளியான ஐந்தாம் தரப்புலமைப் பரிசில் பரீட்சையில் தேசிய நிலையில் முன்னணி பெற்ற மாணவர்கள் தாம் சுயமாக்க கற்றதால் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளை அடையக்கூடியதாக இருந்ததென அவர்களின் செவ்வியில் தெரிவித்ததை சுட்டிக் காட்ட விரும்புகின்றேன்

மாணவர்களுக்கு படித்த மக்கள் தொடக்கம் பாமர மக்கள் வரை படிபடி என அழுத்தம் கொடுக்காமல் அவர்களைச் சுயமாகக் கற்க விடுவதால் பெற்றோரின் மதிப்புக்குப் பங்கம் ஏற்படாதவகையில் மாணவர்கள் பரீட்சையில் சித்தி பெறக் கூடியதாக இருக்கும். பிரதேசசபையினால் நடத்தப்படும் இந்த முன்பள்ளியின் வளர்ச்சிக்கு பிரதேச சபை முழுமையான பங்களிப்பை வழங்கும் என்றார்.

கச்சாய் உப அலுவலக பிரதேச சபையின் பொறுப்பதிகாரி பர்சனா கிருஷ்ணகுமார் தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது. இந்த நிகழ்வில் விருந்தினர்களாக அ.அ.க வித்தியாலய ஓய்வு பெற்ற உப அதிபர் செ.சிவபாதசுந்தரம், அல்லாரைக்கிராம அலுவலர் மோ.பிரகாஸ், ஐங்கரன் சனசமூக நிலையத்தின் தலைவர் சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர், அல்லாரைக் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் சி.துரைராஜா, முன்பள்ளி ஆசிரியர், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

(21.9.159)

# 8 தேங்காய்கள் பறித்தவருக்கு எட்டு நாள்கள் விளக்க மறியல்

சாவகச்சேரி, ஒக். 9

அடுத்தவரின் தென்னந்தோட்டத்தில் 8 தேங்காய்கள் திருடிய நபரை எட்டுத் தினங்கள் விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்று நேற்று உத்தரவிட்டது.

மட்டுவில் சிவன் கோவில் பகுதியில் உள்ள தென்னந்தோட்டமொன்றில் அனுமதியின்றி தேங்காய்கள் பிடுங்கினார் என்றகுற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட ஒருவர் சாவகச்சேரி நீதிவான் மன்றில் நேற்று முற்படுத்தப்பட்டார். வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது சந்தேகநபரை எதிர்வரும் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிவான்மன்று உத்தரவிட்டது.

(21.9)

# அரசு பெற்ற கடன்களை பகிரங்கப்படுத்துங்கள்

## ரத்னாயக்க எம். பி. வலியுறுத்து

கொழும்பு, ஒக். 9

அரசு இதுவரை பெற்றுள்ள அரச முறைக் கடன்கள் மற்றும் மீள் செலுத்தியுள்ள கடன் மற்றும் வட்டி தொடர்பான விடயங்களை நிதியமைச்சர் மங்கள சமரவீர பகிரங்கப் படுத்த வேண்டும்.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் சி.பி.ரத்னாயக்க வலியுறுத்தியுள்ளார்.

பொதுஜன பெரமுனக் கட்சியின் கொழும்பு அலுவலகத்தில் நேற்று நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கடந்த அரசு பெரும் முறையற்ற கடன்களைப் பெற்றுள்ளது என்று கூட்டரசு குற்றஞ்சாட்டுகின்றது. ஆனால் குறுகிய காலத்தில் கூட்டரசு கடந்த அரசை விடக் கூடிய கடன்களைப் பெற்றுள்ளது என்றும் அவர் குற்றஞ்சாட்டினார். (ற)

# ஐ.தே.கவுக்கும் கூட்டமைப்புக்கும் வேறுபாடுகள் எவையும் இல்லை

## சாடுகின்றார் பீரிஸ்

கொழும்பு, ஒக். 9

ஐக்கியதேசியக்கட்சிக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் கொள்கை ரீதியில் எந்த வேறுபாடும் கிடையாது. இரு தரப்பினரும் ஊழல் மோசடிகளுக்குத் துணை போகின்றனர்.

இவ்வாறு சாடியுள்ளார் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ்.

பொதுஜன பெரமுனவின் அலுவலகத்தில் நேற்றுத் திங்கட்கிழமை நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவித்தாவது

வடக்கு மாகாண சபையின் பதவிக் காலம் நிறைவடைந்தவுடன் அங்கு நடக்கின்ற நிர்வாக முறைகேடுகளுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே பொறுப்பேற்கவேண்டும். மாகாண சபைத் தேர்தலை நடத்த அரசு எந்தவிதமான முன்னேற்றகரமான நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை. மாறாகத் தேர்தலைப் பிற்போடும் முயற்சிகள் மாத்திரமே நடக்கின்றன. என்றார். (ற)

# கண்ணகை அம்பாளுக்கு சித்திரத் தேர்

எழுதுமட்டுவாழ் தெற்கு விளுபளை கண்ணகை அம்பாள் கோவிலுக்குச் சித்திரத் தேர் அமைக்கப்படவுள்ளது.

சித்திரத் தேர் அமைப்பதற்கென சட்டத்தரணி த.வேலாயுதம் தலைமையிலான தேர்த் திருப்பணிச் சபை அண்மையில் தெரிவு செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. போர் காலத்தில் அழிவடைந்திருந்த கோவில் சீரமைக்கப்பட்டு கடந்த வருடம் மகா கும்பாபிசேகம் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(21.9)

# நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை சமுர்த்தி உத்தியோகத்தர்கள் கவலை

யாழ்ப்பாணம்,ஒக் 9

வடக்கு மாகாணத்தில் 2013 ஆம் ஆண்டு சுற்றிக்கையின் படி, விருப்பத் தெரிவில் உள்வாங்கப்பட்ட சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கான நிரந்தர நியமனக் கடிதங்கள் இது வரை வழங்காமையினால் பல்வேறு இன்னல்களை எதிர் நோக்குவதாக உத்தியோகத்தர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இது பற்றி அவர்கள் மேலும் தெரிவித்ததாவது.

தற்போது சமுர்த்தி திணைக்களமாக செயற்படும் அலுவலகம் முன்னர் சமுர்த்தி அதிகார சபையாக இருந்தது. திணைக்களமாக மாற்றப்பட்டத்துக்கு பின்னர் அதற்குரிய நியமனக் கடிதங்கள் இன்னமும் வழங்கப்படவில்லை. நியமனக் கடிதம் என்பது அலுவலக ரீதியான நடவடிக்கைகளுக்கு எமக்கு மிகவும் அவசியமானது.முன்னர் சேவையாற்றியவர்களை 2013 ஆம் ஆண்டு புதிய சுற்றறிக்கையின் படி புதிய நியமனங்களைப் பெற்று உள்வாங்கும் வகுதிக்கு கொண்டு வரப்பட்டனர். ஆகவே முன்னர் கடமையாற்றிய அனைவரும் விருப்பத் தெரிவின் அடிப்படையில் ஓய்வூதிய நிதி அனைத்தையும் பெற்றுகொண்டு மீண்டும் புதிய வகுதிக்கு உள்ளடக்பட்டனர்.ஆனால் அவர்களுக்குரிய நியமனக் கடிதங்கள் வழங்கப்படவில்லை.

ஆனால் தற்போது நியமனங்களை பெற்றவர்களுக்கு புதிய நியமனம் என்பதால் அவர்களுக்கு நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டு சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்டனர்.ஆரம்பத்தில் இருந்து சேவையாற்றியவர்கள் அதிகார சபை திணைக்களமாக மாற்றப்பட்ட பின்னர் நியமன கடிதங்கள் வழங்கப்படவில்லை. இதனால் பல்வேறு இன்னல்களை எதிர் நோக்க வேண்டியுள்ளது.

உதாரணமாக சமுர்த்தி உத்தியோகத்தர் சேவையாற்றும் பிரிவில் ஒரு அலுவலர் வருகை தராமல் விட்டால் பதில் கடமை ஆற்ற வேண்டிய நிலை ஏற்படும்..அவ்வாறு பதில் கடமை ஆற்றுபவர்களுக்கு கொடுப்பனவுகள் வழங்கும் நடைமுறை உள்ளது.ஆனால் நியமனக் கடிதங்கள் இன்மையால் இவற்றைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலை காணப்படுகிறது. சம்பள அளவுத்திட்டங்களை சரியான முறையில் தீர்மானிக்க முடியமால் உள்ளது. அரச திணைக்களங்களில் பணியாற்றுபவர்க்களுக்கு 10ஆயிரம் ரூபா கொடுப்பனவு அரசினால் வழங்கப்படுகிறது. நியமனக் கடிதங்கள் இன்மையால் கொடுப்பனவு 10 ஆயிரம் ரூபா அடிப்படை சம்பளத்துடன் சேர்த்து கணிக்கப்படுகிறது. இதனால் மேலதிக நேரக் கொடுப்பனவு. நாளுக்கான கொடுப்பனவு அடிப்படை சம்பளத்தில் இருந்து கணிக்கப்படும் போது; குறிப்பிட்ட தொகையே கிடைக்கும் ஆகவே நியமனக் கடிதங்கள் கிடைத்தால் பல்வேறு நன்மைகள் கிடைக்கும் என்றனர்.

இது தொடர்பில் மாவட்ட சமுர்த்தி உத்தியோகத்தர் சங்கத்துடன் தொடர்பு கொண்டு கேட்டபோது தெரிவிக்கப்பட்டதாவது :

2013ஆம்ஆண்டுச்சுற்றிக்கையின் படி சமுர்த்தித் திணைக்களத்துக்கு அனைவரும் உள்வாங்கப்பட்டனர்.நியமனக் கடிதங்கள் வழங்கப்படாததால் இவர்கள் பல்வேறு இன்னல்களை எதிர் நோக்கு கின்றனர். ஆனால் பணிப்பாளர் நாயகம் கடந்த செப்ரெம்பர் மாத இறுதிக்குள் விருப்பத் தெரிவுகளை மாற்றி அனுப்பி வைக்குமாறு எமக்குப் பணித்துள்ளார். அதாவது முன்னர் சேவையாற்றியவர்கள் 2013 ஆம் ஆண்டு வகுதிக்குள் உள்வாங்கும் போது அவர்கள் முன்னர் செலுத்திய ஓய்வூதிய நிதிகளை பெற்றுக் கொண்டே வந்தனர். அந்த நிதியின் சுமார் 60 வீதமான பணத்தினை ஓய்வூதிய திணைக்களத்துக்கு செலுத்தி இணைவதன் மூலம் புதிதாக நியமனம் வழங்கபட்டவர்களை போன்று நியமன கடிதங்கள் வழங்கப்படும். அவர்கள் முன்னர் எந்தக் காலத்தில் இருந்து சேவையாற்றினார்களோ அதிலிருந்து சேவை காலம் கணிக்கப்படும். ஏனைய சலுகைகள் அனைத்தும் நடைமுறையில் இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டது. (7)

# வவுனியாவில் வாள்வெட்டு

வவுனியா, ஒக். 9

வவுனியாவில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற இரு வேறு மோதல் சம்பவங்களில் காயமடைந்த இருவர் வவுனியா மருத்துவமனையின் விபத்துச் சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

வவுனியா மாகாறம்பைக் குளம் பகுதியில் இளைஞர்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலில் வாள் வீச்சுக்கு இலக்கான நிலையில் மகாறம்பைகுளம் பகுதியைச் சேர்ந்த இளைஞர், தலையில் படுகாயமடைந்த நிலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வவுனியா புதியபேருந்து நிலையத்துக்கு முன்பாக பழங்கள் விற்பனையில் ஈடுபடும் வியாபாரிகளுக்கு இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறியதில் போத்தலால் தாக்கப்பட்ட நிலையில் ஒருவர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (5,110)

# உளவள ஆலோசனையும் தொழிற்பயிற்சி கருத்தரங்கும்

வவுனியா,ஒக் .9

வவுனியாசமுதாயம்சார்சீர்சிருத்த திணைக்களமும் , இலங்கைச் சிறச்சாலை ஐக்கியவடக்குப்பிராந்தியமும் இணைந்து நடத்திய உளவள ஆலோசனை மற்றும் தொழிற்பயிற்சிக் கருத்தரங்கு நேற்றுக் காலை 9.30 மணிக்கு வவுனியா மன்னார் வீதியில் அமைந்துள்ள மண்டபத்தில் நடைபெற்றது.

இலங்கை சிறைச்சாலை ஐக்கிய வடக்குப் பிராந்தியத்தின் இணைப்பாளர் ஆர்.வினித்ராச் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் இலங்கைச் சிறைச்சாலை ஐக்கிய பிரிவின் தேசிய இயக்குனர்.எஸ் யெஜராச், வவுனியா சிறைச்சாலை நலன்புரிச்சங்க உத்தியோகத்தர் பிலிப்பிட்டிய திசார , வடமாகாண மூத்த சமுதாய சீர்சிருத்த உத்தியோகத்தர் எம்.அனாஸ்,நிர்வாக உத்தியோகத்தர் தாவீது. அபிவிருத்தி உத்தியோகத்தர் சுதர்சிகா,பாஸ்டர் யேம்ஸ்ஆகியோர்கலந்துகொண்டனர். நிகழ்வின் வளவாளர்களாக செல்வாராச் பிரசரந், தோமஸ்திலக் ஆகியோர் செயற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (110)

# உந்துருளியுடன் சென்ற வாகனம் முல்லைத்தீவில் தடம்புரண்டது



முல்லைத்தீவு,ஒக் .9

உந்துருளிகளை ஏற்றிச்சென்ற வாகனமொன்று தடம்புரண்டு விபத்திற்குள்ளாகியுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பனிக்கன்குளம் பகுதியில் நேற்று அதிகாலை 3.30 மணியளவில் குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி உந்துருளிகளை ஏற்றிச் சென்ற வாகனமே விபத்திற்குள்ளாகியுள்ளது.

இதன்போது சாரதி மற்றும் உதவியாளர் ஆகியோர் காயங்கள் எதுவுமின்றி தெய்வாதினமாக தப்பியுள்ளனர். இருப்பினும் குறித்த வாகனம் மற்றும் அதில் ஏற்றிவரப்பட்ட உந்துருளிகள் சேதமடைந்த நிலையில் பெரும் சொத்துச் சேதம் ஏற்பட்டுள்ளது.

விபத்து தொடர்பில் மாங்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கிராம சக்தி திட்டத்தின் பயனாளிகளுக்கு உதவி



தென்மராட்சி ஒக்.9

தென்மராட்சி பிரதேச செயலக பிரிவில் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ள கிராம சக்தி திட்டத்தின் பயனாளிகளுக்கு தலா 8 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்படவுள்ளது.

கிராம சக்தி திட்டத்தில் பிரதேசத்தில் உள்ள கைதடி தெற்கு கிராம அலுவலர் பிரிவு உற்பத்திக் கிராமமாகவும் மந்துவில் கிழக்கு ,வரணி வடக்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகள் வறுமையை அடிப்படையாகக் கொண்ட கிராமங்களாகவும் தெரிவு செய்யப்பட்டு. செயலமர்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்தத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு முதல் கட்டமாக ஒவ்வொரு பிரிவுக்கும் தலா ஒரு மில்லியன் ரூபா வீதம் வழங்கப்பட்டுள்ளது. இந்த நிதிப் பிரிவுகளில் வதியும் குடும்பங்களின் உறுப்பினர்களின் எண்ணிக்கையை கருத்தில் கொண்டு 8 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது.

அண்மையில் மந்துவில் கிழக்குப் பிரிவில் திட்டம் நடைமுறைப்படுத்துவதற்காக மக்கள் பங்குபற்றலுடனான திட்ட முன்னுரிமைப்படுத்தல் .மற்றும் கிராமத்தின் தேவைகளை அடையாளம் காணுவதற்கான கலந்துரையாடல் மந்துவில் கிழக்கு பாலர் பராமரிப்பு நிலைய மண்டபத்தில் நடைபெற்றது.

கலந்துரையாடலில் பிரதேச உதவித் திட்டமிடல் பணிப்பாளர் செ.சுபச்செல்வன் மற்றும் பிரதேசத் திட்டமிடல் அலகினர். பிரிவுக் கிராம அலுவலர். அபிவிருத்தி அலுவலர். சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர் உட்பட பலர் கலந்து கொண்டனர். (9)

# ஆலயம் உடைக்கப்பட்டு சிலை திருட்டு



கிளிநொச்சி,ஒக் .9

கனகபுரம் அன்னை வேளாங்கன்னி மாதா ஆலயம் உடைக்கப்பட்டு சிலை திருடப்பட்டுள்ளது . கடந்த சனிக்கிழமை குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக, தேவாலய நிர்வாகத்தினர் குறிப்பிடுகின்றனர். கிளிநொச்சி நகரிலிருந்து மிக அருகில் உள்ள கிராமமான கனகபுரம் பகுதியில் காணப்படும் ஆலயத்தின் வருடாந்த பெருவிழா கடந்த 8ஆம் திகதி இடம்பெற்றிருந்தது. இந்த நிலையில் கடந்த சனிக்கிழமை குறித்த ஆலயம் உடைக்கப்பட்டு அங்கிருந்த சிலை விசமிகளால் எடுத்துச் செல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறான சம்பவம் தொடர்ச்சியாக இடம்பெற்று வந்த நிலையில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டிருக்கவில்லை எனவும், குறித்த சம்பவம் தொடர்பில் அதிருப்தி அடைந்த ஆலய நிர்வாகத்தினர் கவலை தெரிவிக்கின்றனர். ஆலயத்தில் சட்டவிரோத மற்றும் சமூகத்திற்கு ஒவ்வாத சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றமை தொடர்பில் ஆலய நிர்வாகத்தினரால் ஏற்கனவே பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளது. சம்பவங்கள் இடம்பெறாது ஆலயத்தின் புனித தன்மையை பேணுமாறும் ஆலய நிர்வாகத்தினர் பலமுறை பொதுமக்களிடம் கோரியிருந்தனர். இந்த நிலையில் ஆலயம் உடைக்கப்பட்டு அன்னை வேளாங்கன்னி சிலை விசமிகளால் எடுத்துச் செல்லப்பட்டுள்ளமை தொடர்பில் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

## நவராத்திரி பூசைகள்

யாழ்ப்பாணம், ஒக். 9
அளவெட்டி மேற்கு, நாகேஸ்வரம் ஸ்ரீநாகவரத நாராயணர் கோவிலில் நவராத்தி பூசைகள் இன்றுசெவ்வாய்க்கிழமைநடைபெறவுள்ளன.
இன்று முதல் எதிர்வரும் புதன்கிழமைவரையானஒன்பதுதினங்களும் மாலை 7 மணிக்கு பூசைகள் இடம்பெறவுள்ளன.
முதல்மூன்றுதினங்கள்மலைமகள் ஸ்ரீகாளி அம்மனுக்கும், அடுத்துவரும்மூன்றுதினங்கள் அலைமகள் ஸ்ரீலக்சுமிக்கும் கடைசிமூன்று தினங்கள் கலைமகள் ஸ்ரீ சரஸ்வதி தேவிக்கும் சிறப்புஆராதனைகளுடன்பூசைகள்நிறைவேற்றப்படும். (ம-160)

## கந்தபுராண அருளுரை

யாழ்ப்பாணம், ஒக். 9
யாழ். சின்மயா மிஷனில் கந்தபுராண அருளுரை இன்றுமாலை 6.30 மணி முதல் இரவு 7.30 மணி வரை இடம்பெறவுள்ளது.
யாழ். சின்மயா மிஷன் சுவாமி சிதாகாசானந்தாவால் "உடன் கட்டை ஏறுதல்" என்ற தலைப்பில் இன்று கந்தபுராண அருளுரைநடைபெறஉள்ளது. (ம)

## டிறிபேக் கல்லூரியில் சிறுவர்தினநிகழ்வுகள்

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, மாணவர் நாடாளுமன்ற நடத்தை விருத்தி மற்றும் மாணவர் நலன்புரி அமைச்சால் சிறுவர்தின நிகழ்வு நாளை நடைபெறவுள்ளது.
டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் கல்லூரியின் முதல்வர் செ. பேரின்பநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வு முதன்மை விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலக சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர்திருமதியோ.சுரேஸ்குமார், சிறப்பு விருந்தின ராகத் தென்மராட்சி கல்வி வலய தமிழ்பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் து.ஜெயதேவன்ஆகியோர்கலந்துகொள்ளவுள்ளனர். (ம-9)

## கொக்குவில் இந்துவின் பரிசளிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக். 9
யாழ்ப்பாணம் கொக்குவில் இந்துக் கல்லூரியின் பரிசளிப்பு நிகழ்வு பஞ்சலிங்கம் கேட்போர் கூடத்தில் நாளை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.
கல்லூரி அதிபர் ம.ஞானசம்பந்தன் தலைமையில் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. முதன்மை விருந்தினராக மருத்துவர் ரவி பெருமாள்பிள்ளை ஞானசுந்தரம்,சிறப்புவிருந்தினராகபழைய மாணவன்ஆனந்தகஜேந்திரன் சஞ்சிவன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ம)

## நினைவுப்பேருரை

யாழ்ப்பாணம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் முன்னாள் அதிபர் வி.சிவசுப்பிரமணியம் நினைவாக நாளை நினைவுப் பேருரை வைபவம் நடத்தப்படவுள்ளது. அதிபர் மு.செல்வஸ்தான் தலைமையில் கந்தையா உபாத்தியாயர் மண்டபத்தில் காலை 9.30 மணிக்கு நிகழ்வுகள்நடைபெறுகின்றன.
கொழும்பு மாநகரசபை உறுப்பினர் எஸ்.பாஸ்கரா தொடக்க உரையை நிகழ்த்துகிறார். நினைவுப்பேருரையைஅமைச்சர் மனோகணேசன் நிகழ்த்தவுள்ளார். (ம)


# முகமாலையில் மக்கள் பகுதியில் அபாய நிலையில் வெடிபொருள்கள்

கிளிநொச்சி, ஒக். 9
**முகமாலைபகுதியில்மக்கள்மீள்குடியேற அனுமதிக்கப்பட்ட இடங்களில் ஆபத்தான நிலையில் வெடி பொருள்கள் உள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது.**

கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவிற்கு உட்பட்ட கிராமமே முகமாலை. 2016ஆம்ஆண்டுடிசெம்பர் மாதத்தில் இருந்து முகமாலை தெற்கு பகுதியில் தொடர்சியாக மக்கள் மீள்குடியேற்றத்திற்காக அனுமதிக்கப்பட்டு வரும் நிலையில் தற்போது தமது சொந்தக் காணிகளில் சீரமைப்புப் பணிகளை மக்கள் ஆரம்பித்துள்ள நிலையில் அங்கு அபாயகரமான வெடிபொருள்கள் அவதானிக்கப் பட்டுள்ளன.
இதையடுத்து ஆபத்தான வெடி பொருள்கள் தொடர்பில் பொது அமைப்புக்களாலும் அரச தரப்பாலும் கடந்த வாரத்தில் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டன. (ம-6)

## நாடாளுமன்றத்தில்வாணிவிழா

யாழ்ப்பாணம், ஒக். 9
நாடாளுமன்றத்தின் வருடாந்த வாணி விழா நாடாளுமன்றக் கூடலில் நாளை காலை 10.30 மணி முதல் நண்பகல் 12 மணி வரை இடம்பெறவுள்ளது.
நாடாளுமன்றசபாநாயகர்கருஜயசூரியதலைமையிலும்மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு அபிவிருத்தி மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர்டி.எம்.சுவாமிநாதனின் அனுசரணையிலும்இந்தநிகழ்வுகள் நடைபெறவுள்ளன. (ம)



உலக அஞ்சல் தினத்தினை முன்னிட்டு யாழ்ப்பாணம் காங்கேசன் துறைதலைமைத்தபால்நிலையத்தின் ஏற்பாட்டில் குருதிக்கொடை முகாம் அண்மையில் நடத்தப்பட்டது. (ம)



## ஜோன் பொஸ்கோ வித்தி

யாழ்ப்பாணம் புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்தின் ஆசிரியர் தின விழா அதிபர் அருட்சகோதரி மேரி றொசாந்தி தலைமையில் நேற்று நடைபெற்றது. பாடசாலையின் திறன் வகுப்பறைத் திறப்பு விழாவும் நேற்று இடம்பெற்றது. வடமாகாணக்கல்வி, பண்பாட்டலுவல்கள், இளைஞர்மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலர் எஸ். சத்தியசீலன் திறன் வகுப்பறையைத் திறந்து வைத்தார்.

# ஆசிரியர்தினநிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஒக். 9
பன்னாட்டு ஆசிரியர் தினம் கடந்த 5ஆம் திகதி வெள்ளிக்கிழமை நாடளவில் கொண்டாடப்பட்டது.

## வரணி மத்திய கல்லூரி



வரணிமத்தியகல்லூரியில்ஆசிரியர்தினநிகழ்வுசிறப்பானமுறையில் நடைபெற்றது. பாடசாலையின் தலைமை மண்டபத்தில் காலை 10.30 மணியளவில்மங்கலவிளக்கேற்றலுடன்இந்தநிகழ்வுஆரம்பமாகியது. பாடசாலையின் உயர்தர மாணவர் மன்றத் தலைவர் க.நிருஷன் தலைமையில்நிகழ்வுகள்நடைபெற்றன. விருந்தினராகயாழ்ப்பாணப் பல்கலைக் கழக விரிவுரையாளரும் வரணி மத்திய கல்லூரியின் பழைய மாணவருமான கலாநிதி செ.சந்திரசேகரம், சிறப்பு விருந்தினராக மருதங்கேணி பிரதேச செயலக புள்ளி விபர உத்தியோகத்தர் வ.ஜீவாகரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## கச்சாய் அ.த.க.பா.



கச்சாய்அ.த.கபாடசாலையின்உலகஆசிரியர்தினம்பாடசாலையின் தலைமைமண்டபத்தில்வித்தியாலயமுதல்வர்காசிநாதர்குணசிங்கம் தலைமையில் நடைபெற்றது.
விருந்தினர்களாககவிஞர்தம்பிப்பிள்ளைநாகேஸ்வரன், ஓய்வுபெற்ற பிரதி அதிபர் சின்னத்தம்பி முத்துப்பிள்ளை ஆகியோர் கலந்து கொண்டனர்.

## இத்தாவில் வேம்பொடுகேணி சீ.சீ.த.க.பாடசாலை



பளை இத்தாவில் வேம்பொடுகேணி சீ.சீ.த.க. பாடசாலையிலும் ஆசிரியர்தினநிகழ்வுகள்நடைபெற்றன. பாடசாலைச்சமூகத்தினரால் ஏற்பாடுசெய்யப்பட்ட இந்தநிகழ்வில்மாணவர்களால்ஆசிரியர்களும், அதிபரும் மதிப்பளிக்கப்பட்டனர்.

## கைதடி குருசாமி வித்தி



கைதடி குருசாமி வித்தியாலய ஆசிரியர் தின விழா பாடசாலையின் தலைமை மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது. மாணவத் தலைவன் சாருஜன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஆசிரியர்கள் பெற்றோர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ம-9,159)



வடமாகாண முன்பள்ளி ஆசிரியர்தொழிற்சங்கம் நடத்திய முன்பள்ளி ஆசிரியர்களுக்கானவிளையாட்டுப்போட்டியாழ்ப்பாணம்துரையப்பா விளையாட்டுமைதானத்தில்கடந்தஞாயிற்றுக்கிழமைநடைபெற்றது. நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை, இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் எஸ். சத்தியசீலன் கலந்து கொண்டார். (ம-9)

## சிறுவர்தின நிகழ்வுகள்



கொடிகாமம், ஒக்.9

### கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்பப் பாடசாலை

கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்பப் பாடசாலை சிறுவர் தினவிழா பாடசாலை மண்டபத்தில் கடந்த வாரம் இடம்பெற்றது. காலை 8.30 மணிக்கு அதிபர் திருமதி பு.மங்களேஸ்வரன் தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றன. இந்த நிகழ்வில் கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் கமலநாதன் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டார்.

### கொடிகாமம் நாவலடி ஞானசூரியன் முன்பள்ளி



கொடிகாமம் நாவலடி ஞானசூரியன் முன்பள்ளி சிறார்களின் சிறுவர் தினவிழா கடந்த வாரம் நடைபெற்றது. முன்பள்ளி நிர்வாகத் தலைவர் திருமதி சிவலோகநாதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கொடிகாமம் அரசினர் வித்தியாலய அதிபர் ப.தர்மபூபதி முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டார்.

### சாவகச்சேரி குடும்ப முன்பள்ளிகள்



சாவகச்சேரி குடும்ப முன்பள்ளிகளின் சிறுவர் தின நிகழ்வுகள் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றன. இந்த நிகழ்வுகளுக்கு முதன்மை விருந்தினராக இலங்கை வங்கியின் சாவகச்சேரிக் கிளையின் நிறைவேற்று அலுவலர் என்.யோகரத்தினமும் சிறப்பு விருந்தினர்களாகத் தென்மராட்சி கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ச.அரியநாயகம் கல்லூரி அதிபர் செ.பேரின்பநாதன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.




ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதி அனுசரணையுடன் யுனிசெப் அமைப்பினூடாக சிறுவர்தின நிகழ்வுகள் வீமன்காமம் மகா வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்றன. தெல்லிப்பழைப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட 9 சிறுவர் கழகங்களும் கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட ஒரு சிறுவர் கழகமும் பங்கு பற்றிய நிகழ்வில் முதன்மை விருந்தினராகத் தெல்லிப்பழை பிரதேச செயலர் ச.சிவசிறி கலந்து கொண்டார். (ம-9,159)

# அன்பாலும் பண்பாலும் அரவணைத்து முதியோரைப் பராமரித்தல் வேண்டும்!

## சிறிலசிறி சோமசுந்தரப் பரமாச்சார்ய சுவாமிகள் அறிவுரை

யாழ்ப்பாணம், ஒக். 9

**எமது சமூகத்திலுள்ள முதியோரை அன்பினாலும் பண்பினாலும் அரவணைத்துப் பாதுகாக்க வேண்டும் அதுவே காலத்தின் தேவையுமாகும் என்று தெரிவித்தார் நல்லை ஆதின முதல்வர் சிறிலசிறி சோமசுந்தரப் பரமாச்சார்ய சுவாமிகள்.**

கைதடி அரச முதியோர் இல்லத்தில் நடைபெற்று வரும் முதியோர் வார நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார் அவர்.

"நாம் மூத்தோர்களைக் கைவிடக் கூடாது. அவர்களுக்குச் செய்யும் சேவைகளால்த்தான் எமது எதிர்காலமும் தங்கியுள்ளது. இந்த முதியோர் இல்லத்துக்கு அடிக்கடி பயணம் செய்பவர்களில் நானும் ஒருவன். முதியோர்களைச் சந்தித்து அவர்கள் மீது அன்பும் பண்பும் இரக்கமும் காட்ட வேண்டும். அவர்களுக்கான ஆன்மிக சிந்தனைகள் அதிகரிக்கப்படவேண்டும். எமது மக்கள் மிகுந்த சேவையாளர்கள். எல்லோரும் இந்த மூத்தோர் இல்லத்துக்கு வருகை தரவேண்டும். மூத்தோர்களை சந்தித்துஅவர்களைஅரவணைத்து கலந்துரையாடவேண்டும். அப்போது தான் அவர்களுக்கு தன்னம்பிக்கை ஏற்படும். விரக்திகள் நீங்க வழி ஏற்படும். எமது மூத்தோர் பராமரிப்பு, சேவைகள், அவர்களின் எதிர்காலம் குறித்து மக்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும். மூத்தோர்களை அன்பினாலும் பண்பினாலும் அரவணைத்து அவர்களுக்குச் சேவை செய்வது புனிதமானது' 'என்று அவர்மேலும்தெரிவித்தார். (ம-17)

### உந்துருளி – டிப்பர் விபத்தில் ஒருவர் காயமடைந்தார்

சாவகச்சேரி, ஒக். 9

சாலையில் சென்ற உந்துருளியை அதே திசையில் சென்ற டிப்பர் மோதியதில் உந்துருளியில் பயணித்தவர் காயமடைந்தார்.

இந்தச் சம்பவம் சரசாலை கனகன் புளியடிச் சந்தியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. காயமடைந்தவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். (ம-9)



பன்னாட்டு முதியோர் தினத்தை முன்னிட்டு கைதடி அரச முதியோர் இல்லத்தில் நடத்தப்பட்ட விழாவில் வைத்து ஊடகவியலாளர் பாலசிங்கம் நந்தகுமார் மதிப்புறுத்தப்பட்டார். "மூத்தோர்களின் காவலன்'' என்ற விருதும் அவருக்கு வழங்கப்பட்டது. மூதியவர்களின் விவகாரங்களில் அவர் ஆற்றிய பத்திரிகைப் பணிக்காகவே அவருக்கு இந்த விருது வழங்கப்பட்டது. (ம-17)



நவாலி மகா வித்தியாலய சிறுவர் தின நிகழ்வுகள் பாடசாலை அதிபர் க.சச்சிதானந்தம் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. (ம-50)

### மானிய அடிப்படையில் உரம்

யாழ்ப்பாணம், ஒக். 9

நுணாவில் மேற்கு விவசாய சம்மேளன விவசாயிகளுக்கு மானிய அடிப்படையில் மூன்று கட்டமாக உரம் வழங்கப்படவுள்ளது.

முதற் கட்டமாகப் புத்தூர்ச் சந்தியிலுள்ள கமநல சேவை நிலையத்தில் நாளை அவ்வாறு உரம் வழங்கப்படவுள்ளது. பதிவுசெய்த விவசாயிகள் தமக்குரிய உரத்தைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## தரம் 5 புலமைப்பரிசில் முடிவுகள்

யாழ்ப்பாணம், ஒக். 9

ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகள் கடந்த 5ஆம் திகதி வெள்ளிக்கிழமை வெளியாகின. தமது பாடசாலைகளின் பரீட்சை முடிவுகளை சில பாடசாலைகளின் அதிபர்கள் அனுப்பி வைத்துள்ளனர். அவ்வாறு கிடைக்கப்பட்ட சில முடிவுகள் இங்கு பிரசுரமாகின்றன.

**யாழ் ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தி.**

ச.சாலரசி -188, சி.பவித்திரா -186, நெ.கிருபாஸ்னி -184, தி.ஹரிப்பிரியன் -182, சி.மாருதி -182, சு.ஜட்சனன் -180, வி.லக்சனா -178, ம.பபினகா -175, ம.நிறோஸ் -173, ந.கிருசிகா -173, மு.மாதுளா -173, செ.வேணுமிதன் -171, த.தனுஜா -170, கோ.தமிழினி -169, அ.அஸ்வினி - 168, க.பிரியாஸ் - 166, கோ.கனிவிழி - 166, தே.ரக்சனா - 166, சு.நதீஸா -165, ம.காவியா -165, சு.விவேகன் -164.

**நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி**

கு.ரிபானா 175

**அளவெட்டி வடக்கு அ.மி.த.க.பா.**

உ. பவித்திரன் - 179, சி.திருமகள்-165.

**கரவெட்டி விக்னேஸ்வரா ஆரம்பப் பாடசாலை**

வி.ரனோஜன் - 186, செ.வினுஷ்ரன் - 164.

**சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி**

சி.அட்சயா -184, ம.பிருந்தா -179, அ.சகிதன் -178, நி.யனோஜனன் -170, பா.தக்சனா -170, ஜீ.கிருசனா -167, ச.கிஜானி -166, ந.சத்தியா -165.

**வரணி குடமியன் அ.த.க.பா.**

இ.லயித்தனா - 174

**அம்பலப்பெருமாள் குளம் அ.த.க.பா**

தோ.நிதுயா - 183, ர.தமிழின்பன்-177

**கல்வயல் சண்முகானந்தா வித்தி.**

இளந்திரையன் பிரணவி - 170.

**வேம்பொடுகேணி சீ.சீ.த.க.பா.**

ஜே.கஜீபா - 174.

**கரியாலைநாகபடுவான்அ.த.க.பா.**

த.தமிழ்ப்பிரியன் - 166



## தற்காலிக வீதி அபிவிருத்திப் பணிகள் ஆரம்பம்

கிளிநொச்சி.ஒக்.9
கரைச்சி பிரதேச சபையினால் முன்னெடுத்து வருகின்ற தற்காலிக வீதி அபிவிருத்திப் பணிகள் 5 ஆம் திகதி மலையாளபுரம் பகுதியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. நீண்ட காலமாகப் போருக்கு முன்னும் பின்னுமாக அனைத்து வீதிகளும் சீரமைக்கப்படாது, கடந்த 15 வருடங்களுக்கு மேலாகக் காணப்பட்டது. இந்த நிலமைகுறித்து, அந்தப்பகுதியினுடைய பொதுசன அமைப்புக்கள், தொடர்ச்சியாகக் கரைச்சி பிரதேச சபைக்குச் சுட்டிக்காட்டியும் ,வலியுறுத்தியும் வந்ததன் காரணமாக, அப்பகுதிக்கான வீதி அபிவிருத்திப் பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன. பிரதேச சபையினுடைய மோட்டார் கிரைண்டர் , புதிதாக கொள்வனவு செய்யப்பட்ட றோளர் ஆகியவற்றைப் பயன்படுத்தி, வீதிகளைச் சீர்படுத்தும் பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் கரைச்சிப் பிரதேச சபைத் தவிசாளர் அ.வேழமாலிகிதன், அந்த வட்டார உறுப்பினர் லோரன்ஸ், கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர்கள், மாதர் அபிவிருத்திச் சங்கத் தலைவர்கள் மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர். முதன் முதலாக 90 இலட்சம் ரூபா செலவில் கொள்வனவு செய்யப்பட்ட றோலர், 10 ஆயிரம் கிலோ அழுத்தம் பிரயோகிக்கக்கூடியது. மலையாளபுர அம்மன் ஆலயத்தில் வைத்து வழிபாடுகளை மேற்கொண்டு சேவைக்கு அமர்த்தப்பட்டது. இதன் மூலம் 5 கிலோமீற்றர் பிரதேசம் சீரமைக்கப்பட்டிருக்கிறது. அத்துடன் முழுச்செலவையும் சபை பொறுப்பெடுத்திருக்கிறது எனவும் தவிசாளர் தெரிவித்திருக்கிறார்.

# சிறிமாவோ பண்டாரநாயக்கவின் காலத்தில் விவசாயத்தினால் பல நன்மைகள் கிடைத்தன

### வடமாகாண விவசாய அமைச்சர் க .சிவநேசன் தெரிவிப்பு

முல்லைத்தீவு .ஒக் .9

**சிறிமாவோ பண்டாரநாயக்க இந்த நாட்டினை ஆண்ட காலத்தில் மக்கள் சிறந்த விவசாயிகள் ஆகவும், விவசாயத்தின் மூலம் பல நன்மைகளைப் பெற்று சிறப்பாக வாழ்ந்து வந்த காலகட்டமும் இருக்கின்றது என வடமாகாண விவசாய அமைச்சர் க .சிவநேசன் தெரிவித்துள்ளார்.**

விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர , விவசாய பிரதி அமைச்சர் அங்கஜன் இராம நாதன் ஆகியோர் முல்லைத்தீவு மாவட்டத்துக்கு நேற்று முன்தினம் பயணம் மேற்கொண்டதோடு, "நாம் பயிரிட்டு நாம் உண்போம் "என்ற தொனிப்பொருளில் 'வடக்கின் துரித விவசாய மீள்எழுச்சி" எனும் எண்ணக்கருவில் கமத்தொழில் அமைச்சின் விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தின் பல்வேறு திட்டங்களையும் ஆரம்பித்து வைத்தனர்.
இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரைநிகழ்த்தும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:




விவசாய நவீனமயமாக்கல் திட்டம் ஒரு சிறப்பான திட்டம் ,ஒட்டுசுட்டான் முத்துஐயன்கட்டுப்பிரதேசத்தினை தெரிவு செய்திருப்பதை ஒரு வரப்பிரசாதமாக பார்க்கின்றோம். 950 மில்லியன் ரூபா செலவில் 5 ஆண்டுகளுக்கு இது செலவீடு செய்யப்பட்டு ,சிறப்பான திட்டமாக செயற்படுத்தப்பட இருக்கிறது.
முத்துஐயன் கட்டுப் பிரதேசத்தினைப் பொறுத்த வரையில் சிறிமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக் கட்சி நாட்டை ஆட்சிசெய்த காலத்தில் மிகசிறப்பாக இந்த மக்கள் சிறந்த விவசாயிகள் ஆகவும் சிறப்பான விவசாயத்தின் மூலம் பல நன்மைகளை பெற்று சிறப்பாக வாழ்ந்து வந்த காலகட்டமாக இருக்கின்றது.என அவர் மேலும் தெரிவித்தார்.



## சீனாவில் நடைபெற்ற போட்டியில் வெண்கலம் வென்ற மாணவர்கள்

வவுனியா.ஒக் .9
பன்னாட்டு ரீதியில் சீனாவில் இடம் பெற்ற கணித விஞ்ஞான போட்டியில் திறைமைகளை வெளிப்படுத்திய வவுனியா மாணவர்களுக்கு மதிப்பளிக்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது.
வவுனியா தமிழ்மத்திய மகாவித்தியாலயத்தின் மாணவனான ஜெயக்குமார் லெவிந் கணிதப்பிரிவில் வெண்கலப் பதக்கத்தை பெற்றுள்ளதுடன், விஞ்ஞானப் பிரிவில் கலந்துகொண்ட ஆவினன் பத்மநாதன் குறித்த போட்டியில் பங்குபற்றியமைக்கான பன்னாட்டு சான்றிதழையும் பெற்றுள்ளார். இவர்கள் இருவருக்குமான பாராட்டு நிகழ்வு நேற்றுக் காலை 8 மணியளவில் பாடசாலை வளாகத்தில் அதிபர் அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெற்றது. குறித்த நிகழ்வில் உதவிகல்விப் பணிப்பாளர்களான இந்திரலிங்கம், பாலச்சந்திரன், ஆசிரிய ஆலோசகர்கள், ஆசிரியர்கள் மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (110)

## இலங்கை இராணுவத்தின் டெங்கு ஒழிப்பு துப்புரவுப்பணி



மன்னார்.ஒக் .9
இலங்கை இராணுவத்தின் 69 ஆவது ஆண்டு நிறைவையொட்டி மன்னார் தள்ளாடி 54 ஆவது படைப்பிரிவினரில் ஏற்பாட்டில் மன்னார் மாவட்டத்தில் மாபெரும் டெங்கு ஒழிப்புத் துப்புரவுப் பணியை நேற்று திங்கட்கிழமை, காலை ஆரம்பித்துள்ளனர்.
தள்ளாடி 54 ஆவது படைப்பிரிவு அதிகாரி பிரிகேடியர் செனரத் பண்டார தலைமையில் காலை 8 மணியளவில் மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் ஆரம்ப நிகழ்வுக் இடம் பெற்றன.
இதன் போது முதன்மை விருந்தினராக மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை, விருந்தினர்களாக மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை அன்ரனி விக்டர்சோசை அடிகளார்,சர்வ மதத்தலைவர்கள், மன்னார் நகர சபையின் செயலர் பிரிட்டோ லெம்பேட், மன்னார் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி சுகந்தி செபஸ்தியன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.
இதன் போது இலங்கை இராணுவத்தின் 69 ஆவது ஆண்டு நிறைவையொட்டி மன்னார் தள்ளாடி 54 ஆவது படைப்பிரிவின் ஏற்பாட்டில் மன்னார் மாவட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட மாபெரும் டெங்கு ஒழிப்புத் துப்புரவுப் பணி எதிர்வரும் இரு தினங்கள் இடம் பெறவுள்ளது.
பாடசாலைகள், பொது இடங்களில் குறித்த துப்புரவுப்பணிகள் இடம் பெறவுள்ளதோடு, குறித்த பணியில் 70 அதிகாரிகளும், 800 இராணுவ வீரர்களும் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (56)

## பெண்களின் ஆளுமையை கட்டியெழுப்புவதற்கான கருத்தமர்வு

வவுனியா.ஒக் .9
'இயல்த் திறனை கட்டியெழுப்பும் நிகழ்ச்சித் திட்டம்' எனும் தொனிப்பொருளில் கடந்த 5 ஆம் திகதி வவுனியாவில் கபே அமைப்பின் தேசிய அமைப்பாளர் அகமட் மனஸ் மக்சீன் தலைமையில் பெண்களுக்கான கருத்தமர்வு இடம்பெற்றது.
பெண்களின் ஆளுமைத்திறனை கட்டியழுப்புவது தொடர்பாகவும், அவர்களின் திறமைகளை எவ்வாறு வெளிக்கொண்டு வருவது, பெண்கள் சமூகத்தில் ஆற்றிவரும் அரசியல், பொருளாதார பங்களிப்பு மற்றும் நாட்டின் தலைவர்களாக இருந்து தேசத்தைக் காப்பாற்றிய பெண்களின் தலைமைத்துவ பண்புகள் தொடர்பாகவும் விளக்கமளிக்கப்பட்டது.
இந்த நிகழ்வில் கபே அமைப்பினரால் பிரத்தியேகமாகத் தெரிவு செய்யப்பட்ட 30 பெண்கள் கலந்து கொண்டிருந்தனர்.
இந்தக் கருத்தமர்வில் வளவாளர்களாக வவுனியா தேசிய கல்வியற் கல்லூரியின் ஓய்வு நிலைப் பீடாதிபதி கெ.சிதம்பரநாதன், கபே அமைப்பின் மன்னார் மாவட்ட இணைப்பாளர் ஜெ.விஜயகுமார், சாவகச்சேரி பிரதேச சபையின் உதவித் தவிசாளர் எஸ்.மயூரன் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர். (402)



# கடும் மழையின் மத்தியில் தொடரும் புதைகுழி அகழ்வு

மன்னார் ,ஒக் .9

**மன்னாரில் தொடர்சியாக மழை பெய்து வருகின்ற நிலையிலும் , திட்ட மிட்ட வகையில் மன்னார் 'சதொச' விற்பனை நிலைய வளாகத்தில் மனித எலும்புக்கூடுகள் அகழ்வு பணிகள் இடம் பெற்று வருகின்றது.**

மன்னார் நகர நுழைவாயில் பகுதியில் அமைந்துள்ள 'சதொச' விற்பனை நிலைய வளாகத்தில் , கடந்த மார்ச் மாதம் புதிய விற்பனை நிலையத்துக்கான கட்டுமான பணிகள் இடம் பெற்ற போது. குறித்த வளாக பகுதியில் அகழ்வு செய்யப்பட்ட மண்ணில் இருந்து மனித எச்சங்கள் கண்டு பிடிக்கப்பட்டது.

அதனைத்தொடர்ந்து. இந்த வளாகப் பகுதியில் நீதி மன்றத்தின் அனுமதியுடன் தொடர்ச்சியாக அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வந்தது.

இந்த நிலையில் தற்போது மன்னார் நீதிவான் த.சரவணராஜா முன்னிலையில் சிறப்பு சட்ட மருத்துவ நிபுணர் டபிள்யூ.ஆர்.ஏ.எஸ்.ராசபக்ஸ தலைமையில் அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் கடந்த சில தினங்களாக மன்னாரில் பலத்த மழை பெய்து வருகின்ற நிலையில். அகழ்வு செய்யப்படும் மனித புதை குழியானது மழை நீரால் நிரம்புகின்ற போதும். குறித்த பகுதியில் தேங்கி நிற்கின்ற மழை நீர் இயந்திரத்தின் மூலம் வெளியேற்றப்பட்ட நிலையில். அகழ்வுப் பணிகள் தடையின்றி முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

தொடர்சியாக மழை பெய்யும் பட்சத்தில் அகழ்வுப் பணிகளை மேற்கொள்வதில் பெரும் சிரமம் ஏற்படுவதுடன். அடையாளப்படுத்தப்பட்ட மேலதிக மனித எச்சங்கள் சிதைவடை யும் நிலை ஏற்பட்டுள்ளது. கடந்த வார இறுதியில் 154 மனித எலும்புக்கூடுகள் கண்டு பிடிக்கப்பட்டிருந்தது.

அவற்றில் 151 மனித எலும்புக் கூடுகள் வெளியேற்றப்பட்ட நிலையில் நேற்று 82 ஆவது தடவையாக அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (56)



## அடிக்கல் நடும் நிகழ்வு

யாழ்ப்பாணம்.ஒக் .9

யாழ்ப்பாணம்.தெல்லிப்பளைபனைதென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கத்தின் தலைமைக்காரியாலயத்துக்கு அடிக்கல் நடும் நிகழ்வு நாளை காலை புதன்கிழமை. 10.30 மணிக்கு க்கு பழைய தபாற்கந்தோருக்கு அருகாமையில். சங்கதலைவர் நா.கணேசன்.தலைமையில்"நடைபெறவுள்ளது. இந்தநிகழ்வுக்கு முதன்மைவிருந்தினராக யாழ்.மாவட்டச் செயலர் .நா.வேதநாயகன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். இக்கட்டடத்துக்கான நிதியை யு .என். டி .பி நிறுவனம் ஊடாக கிடைக்கப்பெற்றது என்றும் தெரிவிக்கப்பட்டது. (63)

## நடுவர் சபை உறுப்பினர்களுக்கான நியமனம் வழங்கல்

வடமராட்சி. ஒக் .9

வடமராட்சி தெற்கு .மேற்கு பிரதேச நடுவர் சபை உறுப்பினர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு நாளை புதன்கிழமை காலை 10 மணிக்கு கரவெட்டி பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

புதிய தவிசாளர் சி.நற்குணலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் கரவெட்டி பிரதேச செயலர் நியமனக் கடிதங்களை வழங்கி வைக்கவுள்ளார்.

இதில் உப தவிசாளராக திருமதி சிவாஜினி மற்றும் உறுப்பினர்கள் சீவரட்ணம். செல்வராசா. எஸ். தவராசா. சிறி ராமச்சந்திரன். பிரான்சிஸ் இராசையா. சூரியகுமாரன் செல்வராஜா. கே.மகாதேவன். கனகராஜா. ரி. மகாதேவன். பி.தவராஜா. ஈஸ்வரதேவன் அகிய 14 பேருக்கும் நியமனக் கடிதங்கள் வழங்கி வைக்கப்படவுள்ளன. (422)

## சரஸ்வதி திருவுருவச் சிலை திறப்பு நிகழ்வு

கொடிகாமம். ஒக். 9

கரம்பைக்குறிச்சி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் சரஸ்வதி திருவுருவச் சிலை திறப்பு நிகழ்வு இன்று காலை 9.30 மணிக்கு பாடசாலை வளாகத்தில் அதிபர் க. இளங்கோவன் தலைமையில் நடைபெறவுள்ளது.

முதன்மை விருந்தினராக வலயக்கல்வி பணிப்பாளர் தென்மராட்சி சாவகச்சேரி சு.சுந்தரசிவமும் சிறப்பு விருந்தினராக பிரதிக் கல்விப் பணிப்பாளர் கல்வி அபிவிருத்தி வலயக் கல்வி அலுவலகம் தென்மராட்சி சாவகச்சேரி திருமதி சிவத்திரை சிவநாதனும். மதிப்புறு விருந்தினர்களாக திருமதி விக்னேஸ்வரி ராகுலன். திருமதி வள்ளிப்பிள்ளை மகாலிங்கம் .திருமதி தீபா சந்திரகாந்தன். திரு மகாலிங்கம் கார்த்தீபன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (159)



## சுகாதாரச் சீர்கேடுகளை தடுக்கும் துப்புரவுப்பணி

வடமராட்சி.ஒக் .9

மழைகாரணமாக நெல்லியடி சந்தையில் ஏற்படும். சுகாதாரச் சீர்கேடுகளை தடுக்கும் நோக்கில் தவிசாளர் ஐங்கரன் தலைமையில் கரவெட்டி தெற்கு மேற்கு பிரதேச சபை ஊழியர்களால் , திடீர் துப்புரவு பணிகள் இடம்பெற்றுவருகின்றது. இன்று இரண்டு மணியிலிருந்து மழை நீர் இருக்கும் இடங்கள் மண் போட்டு மூடப்பட்டு. மண் மட்டப்படுத்தப்பட்டதுடன்.குளோரின் போடப்பட்டு துப்புரவுப்பணி இடம்பெற்றது.

## சிறுவர் பெண்கள் வன்முறைகள் தொடர்பான ஆய்வு

மன்னார்.ஒக் .9

மன்னார் மாவட்டத்தில் சிறுவர் பெண்கள் வன்முறைகள் தொடர்பான ஆய்வுகள்சம்பந்தமான கலந்துரையாடல், மன்னார் மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது.

மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் யு.என்.எவ்.பி இதற்கு பொறுப்பான செயலர்கள் திருமதி. உதயனி தேவர பெருமாள். திருமதி சுகுணா குமார் றஞ்சித் ஆகியோர் தலைமையில் நடைபெற்றபோது. மன்னார் மாவட்ட மேலதிக செயலர் எஸ்.குணபாலன். மன்னார் சிறுவர். பெண்கள் தொடர்பாக ஈடுபட்டு வரும் அரச. அரசசார்பற்ற அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (60)



## தளபாடங்கள் வழங்கல்

சாவகச்சேரி. ஒக். 9

சாவகச்சேரி கோயிற்குடியிருப்பு. திருவள்ளுவர் சனசமூக நிலையத்தில்.மாலை நேர வகுப்புகள் நடத்துவதற்காக சுமார் 32 ஆயிரம் ரூபா பெறுமதியான தளபாடங்கள் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டுள்ளன.

கழக உறுப்பினர் க.சிவரஞ்சனின் ஏற்பாட்டில்.தென்மராட்சி அபிவிருத்திக் கழக பிரான்ஸ் கிளையின் நிதியுதவியில் கொள்வனவு செய்யப்பட்ட. 5 மேசைகள் , 5 வாங்குகள் ஆகியன நகரசபை தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன் கோயிற்குடியிருப்பு .வட்டார உறுப்பினர் திருமதி பவுலினா சுபோதினி ஆகியோரால் நிலைய நிர்வாகத்தினரிடம் கையளிக்கப்பட்டது.

இப் பகுதியைச் சேர்ந்த மாணவர்களுக்கு மாலை நேர வகுப்புகள் நடத்தப்படுகின்ற போதிலும். போதிய தளபாட வசதிகள் இல்லையென நிலைய நிர்வாகிகள் சங்கப் பிரதிநிதிகளிடம் தெரிவித்ததையடுத்து பிரான்ஸ் கிளையினர் நிதி வழங்கியிருந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (9)

# மாமரச் செய்கையை மேம்படுத்துவதற்காக கன்றுகளும், உபகரணங்களும் வழங்கல்

கொடிகாமம் .ஒக். 9

மாமரச் செய்கையை மேம்படுத்தும் பொருட்டு விவசாய அமைச்சினால் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு மாமரக் கன்றுகளும் மாமரப் பயிர்ச் செய்கைக்கான உபகரணங்களும் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வு கடந்த சனிக்கிழமை மாலை 6.30 மணியளவில் கெற்பேலி மத்தி பொது மண்டபத்தில் சாவகச்சேரி பிரதேச சபை உபதவிசாளர் செ .மயூரன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர விவசாய பிரதி அமைச்சர் அங்கஜன். யாழ் மாவட்ட செயலர் ந . வேதநாயகன் , சாவகச்சேரி பிரதேச செயலர் தேவந்தினி பாபு. சாவகச்சேரி பிரதேச சபை உபதவிசாளர் செ .மயூரன். விவசாய உதவி ஆணையாளர். விவசாய நவீன மயமாக்கல் திட்டப் பணிப்பாளர் .உத்தியோகத்தர்கள் , உலக வங்கியின் திட்டப் பணிப்பாளர் ,உயர் மட்ட அதிகாரிகள். சாவகச்சேரி பிரதிப் பொலிஸ் பரிசோதகர். கிராம பிரதி நிதிகள் எனப்பலர் கலந்து கொண்டனர்.

அமைச்சர்கள் மாமரக் கன்றுகளை ,சம்பிரதாய பூர்வமாக நட்டு வைத்தனர் அத்தோடு கலந்து கொண்ட விருந்தினர்களால். பயனாளிகளுக்கு ,விவசாய உபகரணங்கள் வழங்கப்பட்டதுடன். நீர்ப்பாசன வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டது. (15,99)





# யாழ்.போதனாவில் சத்திரசிகிச்சைகளை நீடிக்க அரசியல்வாதிகள் உள்ளிட்ட சகலரும் உதவுங்கள்

## இருதய நெஞ்சறை சத்திர சிகிச்சை நிபுணர் முகுந்தன் கேட்கிறார்

யாழ்ப்பாணம், ஒக். 9

யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனையில் இதுவரை 65 திறந்த இருதய சத்திரசிகிச்சைகளை மேற்கொண்டுள்ளோம். 850 க்கும் அதிகமானோர் சத்திர சிகிச்சைக்காகக் காத்திருக்கின்றார்கள். இவர்களில் பெரும்பாலானோர் தனியார் மருத்துவமனைகளுக்குச் சென்று சிகிச்சை பெற முடியாத ஏழ்மை நிலையில் உள்ளவர்கள். காத்திருப்போர் பட்டியலில் இணைந்து கொள்வோரின் எண்ணிக்கையும் அதிகரிக்கிறது. ஆகவே சிகிச்சைப் பிரிவை விஸ்தரிக்கவும், எமது சேவையை முழுமையாகப் பெற்றுக் கொள்ளவும் ஒத்துழைப்பு நல்குமாறு அரசியல் பிரமுகர்கள், நலன் விரும்பிகள், மற்றும் பொதுமக்களைக் கேட்டுக் கொள்கின்றேன்.



இவ்வாறு, இருதய நெஞ்சறை சத்திர சிகிச்சை நிபுணர் சிதம்பரநாதன் முகுந்தன் கேட்டுள்ளார்.

அவரது சேவையைப் பாராட்டி மதிப்பளிக்கும் நிகழ்வு சாவகச்சேரியிலுள்ள தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. "முகுந்தம்" என்ற பாராட்டுவிழாமலர் அன்று வெளியிடப்பட்டது.

தென்மராட்சிப் பிரதேச மக்கள் முன்னெடுத்த இந்தநிகழ்வில் மருத்துவநிபுணர் சி. முகுந்தன் உரையாற்றுகையில் மேலும் தெரிவித்ததாவது.

ஒரு தாயின் வாழ்த்தே ஒரு குழந்தைக்குக் கிடைக்கக்கூடிய அதியுயர் மதிப்பு என்றவகையில், நான்பிறந்தமண்ணில், தாங்கள் எனக்கு அளிக்கும் மதிப்பை எனது வாழ்நாளில் கிடைக்கக்கூடிய அதியுயர்மதிப்பாகக் கருதுகின்றேன்.

இந்தமதிப்பு எனக்குமட்டுமன்றி யாழ்ப்பாணப் போதனாமருத்துவமனையில் இருதயசத்திர சிகிச்சைப் பிரிவை ஏற்படுத்த அரும்பாடுபட்ட அனைவருக்கும் கிடைத்த மதிப்பே.

யாழ்ப்பாணப் போதனாமருத்துவமனையில் 2016 மார்ச்சில் இருதய சத்திர சிகிச்சை நிபுணராகக் கடமையேற்றேன். யாழ்ப்பாணத்தில் இருதய சத்திரசிகிச்சைப் பிரிவு இல்லாததால் பகுதிநேரமாக கொழும்பு சீமாட்டிரிச்வே மருத்துவமனையில் கடமையாற்றிக் கொண்டு யாழ்ப்பாணத்தில் இருதய சத்திரசிகிச்சைக் கூடத்தைத் நிறுவுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தேன்.

சத்திரசிகிச்சைக் கூடம், அதிதீவிர சிகிச்சைப் பிரிவு ஆகியவற்றை அமைப்பதிலும் சத்திரசிகிச்சைக்குத் தேவையான இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் போன்றவற்றைப் பெற்றுக்கொள்வதிலும், பெபியூசனிஸ்ட், தாதிய உத்தியோகத்தர்கள் முதலானோரை பயிற்றுவிப்பதற்குரிய ஒழுங்குகளை மேற்கொள்வதிலும் ஈடுபட்டிருந்தேன்.

### நான்காவது மருத்துவமனையாக தரமுயர்ந்தது யாழ்.போதனா

இலங்கையிலுள்ள அரச மருத்துவமனைகளில் திறந்த இருதய சத்திரசிகிச்சைகள் கொழும்பு தேசிய மருத்துவமனை, கண்டி போதனாமருத்துவமனை, காலிகராப்பிட்டிய போதனாமருத்துவமனை ஆகியவற்றில் இதுவரை காலமும் நடைபெற்று வந்தன.

யாழ்ப்பாணத்தில் இருதய சத்திரசிகிச்சை நிபுணராகக் கடமையேற்று ஒன்றரை வருடங்களின் பின்னர் 2017 டிசெம்பர் 20 ஆம் திகதி யாழ்ப்பாணப் போதனாவில் முதலாவது திறந்த இருதய சத்திரசிகிச்சையை வெற்றிகரமாக மேற்கொள்ளக் கூடியதாக இருந்தது.

இதனால் யாழ்ப்பாணப் போதனாமருத்துவமனை இலங்கையில் திறந்த இருதய சத்திரசிகிச்சைகளை மேற்கொள்ளும் நான்கு அரசமருத்துவமனைகளில் ஒன்றாகத் தரம் உயர்ந்தது.

இதற்கு மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவர் த. சத்தியமூர்த்தி, உணர்வழியியல் சிகிச்சைநிபுணர் சு. பிறேமகிருஸ்ணாவினதும் ஏனைய மருத்துவ உத்தியோகத்தர்களினதும், பொறுப்புத் தாதிய உத்தியோகத்தர் திருமதி. ரமேஸ்குமாரினதும் சேவை பாராட்டப்பட வேண்டியது.

இருதயசத்திரசிகிச்சைப் பிரிவு மிகக் குறைந்த வளங்களுடன் ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்தும் மிகக் குறைந்த வளங்களுடனேயே இயங்கி வருகின்றது.

யாழ்ப்பாணப் போதனாமருத்துவமனை வடக்கில் 1.3 மில்லியன் மக்களது மருத்துவத் தேவையைப் பூர்த்தி செய்யும் 3 ஆம் நிலை மருத்துவமனை.

### கிழக்கு மக்களும் யாழ். வருகை

கிழக்கு மாகாண மக்களும் தற்போது இருதய சத்திர சிகிச்சைக்காக யாழ்ப்பாணப் போதனாவையே நாடுகிறார்கள். நாம் இருதய சத்திர சிகிச்சைப் பிரிவை விஸ்தரிக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம். அதிகரித்துவரும் தேவைக்கு ஏற்ப குறைந்த பட்சம் 3 இருதய சத்திரசிகிச்சை நிபுணர்கள் நியமிக்கப்பட வேண்டும்.

இருதய சத்திரசிகிச்சைப் பிரிவுக்கென்று தனியான உணர்வழியியல் சிகிச்சை நிபுணர்கள் இல்லாமை நெருக்கடியாகவுள்ளது.

இரு படுக்கைகளை மட்டுமே கொண்ட அதிதீவிர சிகிச்சைப் பிரிவே இயங்குகிறது. படுக்கைகளின் எண்ணிக்கையும் அதற்கேற்ப ஆளணியினரும் அதிகரிக்கப்பட வேண்டும்.

இருதய சத்திர சிகிச்சைப் பிரிவுக்கென்று தனியான நோயாளர் விடுதி இல்லாததால் நோயாளர்கள் பல வழிகளிலும் அசௌகரியத்தை எதிர்நோக்குகின்றனர்.

தற்போதைய வளங்களைக் கொண்டு வாரத்துக்கு இருவருக்கு மாத்திரமே சத்திர சிகிச்சையை மேற்கொள்ளமுடிகிறது. இதனால் எமது சேவையை முழுமையாக வழங்க முடியாதுள்ளது. இருந்தபோதிலும், இயன்றவரை செய்துகொண்டிருக்கிறோம்.

### வேர்களுக்கே திரும்ப வேண்டும்

இந்த இடத்தில், நான் சீன நாட்டுப் பழமொழி ஒன்றை நினைவு கூற விரும்புகின்றேன்.

ஒரு மரம் பத்தாயிரம் அடிகள் உயரமாக வளர்ந்தாலும் அதன் உதிர்கின்ற இலைகள் இறுதியில் வேர்களுக்கே திரும்ப வேண்டும்.

எமது நாட்டில் கல்விகற்று, இங்கிருந்து மேற்படிப்புக்காக வெளிநாடு செல்வோர், குறிப்பிட்ட காலமாவது எமது நாட்டில் பணியாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன். இது தார்மீகக் கடமையுமாகும் - என்றார். (4)





## அனலைதீவுக் கடலில் இறந்த 67 பேரின் நினைவாக அஞ்சலி

யாழ்ப்பாணம், ஒக். 9

ஆழ்கடலில் சங்கமமான அனலைதீவைச் சேர்ந்த 67 உறவுகளின் 28 ஆவது நினைவாக நேற்றுமுன்தினம் கிராம மக்கள் அஞ்சலி செலுத்தினர். சாவடைந்தவர்களின் நினைவாக ஆலமரக்கன்றை நட்டனர்.

67 பேரும் அங்கு புறப்படுவதற்கு முன்னர் படகு ஏறிய இடத்தில் அஞ்சலி இடம்பெற்றது. மரக்கன்றும் நடப்பட்டது.

1990 ஆம் ஆண்டு கிராமத்தில் ஏற்பட்ட போரால் உணவுப் பஞ்சம் ஏற்படவே தமதுயிர்களைக் காப்பாற்றப் படகில் சென்றனர். நடுக்கடலில் படகு மூழ்கி அதில் பயணித்த அனலைதீவைச் சேர்ந்த 67 பேர் சாவடைந்தனர்.

அவர்களின் நினைவாக வருடாந்தம் அஞ்சலி நிகழ்வு நடத்தப்படுகிறது. (4,9)

## குளிரால் இருவர் இறந்தனர்

சாவகச்சேரி, ஒக். 9

காலநிலைமாற்றத்தால் தற்போது நிலவும் குளிர்காரணமாக இருமுதியவர்கள் நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

அவர்களின் இறப்புத்தொடர்பில் விசாரணை நடத்திய பொலிஸார் இந்தத்தகவலை சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று அறிக்கையிட்டுக் கூறியுள்ளனர்.

கைதடி நுணாவிலைச் சேர்ந்த சுப்பிரமணியம் கடோற்கசன் (வயது -68) யாழ்ப்பாணப் போதனாவில் உயிரிழந்தார்.

மீசாலை வடக்கைச் சேர்ந்த முருகன் கிருஷ்ணன் (வயது -96) சாவகச்சேரி மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (4,9,159)

### டெங்கு பரவும் சூழலைப் பேணிய

## அத்தியட்சகர் உள்ளிட்ட 5 பேருக்கு நீதிமன்று எச்சரிக்கையுடன் பிணை

யாழ்ப்பாணம், ஒக். 9

தெல்லிப்பழை ஆதார மருத்துவமனை வளாகத்தை நும்புகள் உற்பத்தியாகக் கூடிய சூழலில் வைத்திருந்த குற்றத்துக்காக அதன் மருத்துவ அத்தியட்சகர் மற்றும் அங்கு கட்டட அமைப்புப்பணியில் ஈடுபட்டுள்ள ஒப்பந்தகாரர் மூவர், உணவகத்தின் உரிமையாளர் ஆகிய ஐவரையும் நீதிமன்று கடுமையாக எச்சரித்தது.

14 நாள்களுக்குள் மருத்துவமனை வளாகம் சீர் செய்யப்பட வேண்டும் என்று உத்தரவிட்டு அவர்களை தலா ஒரு லட்சம் ரூபா பிணையில் நீதிமன்று விடுவித்தது.

தெல்லிப்பழை ஆதார மருத்துவமனை வளாகம் சுகாதார விதிமுறைக்கு முரணான வகையில் இயங்கியதாகத் தெரிவித்து தெல்லிப்பழை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் இராஜமேனன், வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

அவர் இரண்டு வாரங்களுக்கு முன்னர் மருத்துவமனைக்குச் சென்றபோது சுகாதாரத்துக்குப் பங்கம் ஏற்படும் வகையில் நுளம்புகள் உற்பத்தியாகக் கூடிய நிலையில் மருத்துவமனை வளாகம் இருப்பதை அவதானித்துள்ளார். வளாகத்தைச் சீர் செய்வதற்கு மருத்துவ அத்தியட்சகருக்கு 2 வாரங்கள் கால அவகாசம் வழங்கப்பட்டிருந்தது.

வழங்கப்பட்ட அவகாசம் முடிவடைந்ததைத் தொடர்ந்து மருத்துவமனைக்குச்சென்ற பொதுச் சுகாதாரப் பரிசோதகர் வளாகத்தில் எந்த வித முன்னேற்றமும் காணப்படவில்லை என்பதை அவதானித்து மருத்துவ அத்தியட்சகர் மற்றும் அங்கு கட்டட அமைப்புப் பணியில் ஈடுபட்டிருந்த 3 ஒப்பந்தகாரர்கள், உணவ உரிமையாளர்கள் ஆகிய ஐவருக்கு எதிராக மல்லாகம் நீதிமன்றத்தில் கடந்த புதன்கிழமை வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை வழக்கு விசாரணைக்கு வந்தது.

அதன்போதே மருத்துவமனைத் தரப்பினர் ஐவரையும் நீதிமன்று கடுமையாக எச்சரிக்கை செய்தது. (4,115)

# வடக்கு- கிழக்கில் வீடுகள் கட்டும் பொறுப்பை அமைச்சர் சஜித் பிரேமதாசவிடம் வழங்குங்கள்

## இழுத்தடிப்புகளுக்கு முடிவு வரட்டும் என்கிறார் சுமந்திரன் எம்.பி.

யாழ்ப்பாணம், ஒக். 9

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வீடமைக்கும் பொறுப்பை, வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாசவிடம் வழங்குமாறு கோரியுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன், அமைச்சர் சஜித்தை, "செயற்றிறன் மிக்க அமைச்சர்" என்று புகழ்ந்துள்ளார்.

அமைச்சர் சஜித் போன்ற இளந்தலைவர்கள், தமிழ் மக்களுடைய இனப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்குக் கை கொடுக்க வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

தேசிய வீடமைப்பு அதிகார சபை யாழ்ப்பாணம், சாவகச்சேரி மந்துவில் பகுதியில் அமைத்த "நாவலர் கோட்டம்" எனும் மாதிரிக் கிராமத்தைக் கையளிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் உரையாற்றும்போது இவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சர் சஜித்தின் தந்தையும் முன்னாள் அரசதலைவருமான ரணசிங்க பிரேமதாச, வீடமைப்புத் தொடர்பில் ஆற்றிய சேவைகளை ஞாபகப்படுத்திய நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், அவரை நினைவு கூருவதாகவும் குறிப்பிட்டார்.

வீடமைப்பு அமைச்சு என்றோர் அமைச்சு உள்ள போதிலும், வடக்கிலும் கிழக்கிலும் வீடுகளை அமைப்பதற்கு, மூன்று, நான்கு அமைச்சுகளுக்கு அந்தப் பணிகள் வழங்கப்பட்டிருக்கின்றன. ஆறு வித்தியாசமான நிறுவனங்கள், வீடுகளை அமைக்கும் பணியில் ஈடுபடுகின்றன.

வீடமைப்பாக இருந்தால், அதை வீடமைப்பு அமைச்சிடமே விட்டுவிடுங்கள் என்று நாங்கள், பல தடவைகள், பல இடத்தில் கூறியிருக்கின்றோம். அதற்கு, வடக்கு அபிவிருத்தி என்று ஓர் அமைச்சு, நல்லிணக்க அமைச்சு என்று இன்னோர் அமைச்சுத் தேவையில்லை. வெவ்வேறு அமைச்சுகளிடத்தே அதைக் கொடுத்து, இதுவரைக்கும் எதுவித வீடுகளும் அமைக்காத சூழ்நிலைதான் இருக்கிறது" என்று சுமந்திரன் தெரிவித்தார்.

முன்னைய அரசின் காலத்தில், வடக்கில் வீடுகளை அமைப்பதற்கான கோரிக்கையை முன்வைத்தபோது, அதற்கான நிதியில்லை என்ற பதில் வழங்கப்பட்டது. அதன் காரணமாகவே, இந்திய அரசின் உதவியை நாடினோம். புதிய வீடுகளைக் கட்டிக்கொடுக்க வேண்டும் என்று புதிய அரசிடம் கோரிக்கையை முன்வைத்திருந்தாலும், வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சால் மாத்திரமே வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன என்றும் சுமந்திரன் மேலும் தெரிவித்தார். (4)

# ஜே.வி.பிக்கு நீக்கியது போன்று: புலித் தடையை நீக்க தமிழ்த் தலைவர்களால் வழக்குத் தொடுக்க முடியாதா?

## அமைச்சர் மனோ கணேசன் கிண்டலடித்துக் கேட்கிறார்

புலிகளின் தலைவருக்கு சமானமாக தம்மை உருவகித்துக்கொண்டு, புலிகளைப் பற்றி மறைமுகமாகப் பேசிப் பேசியே, அரசியல் செய்யும் தமிழ்த் தலைவர்கள், முதலில் புலித்தடையை நீக்க தம் சட்ட அறிவைப் பயன்படுத்த வேண்டும். இதை எவரும் இதுவரை செய்ய முன்வரவில்லை.

இவ்வாறு அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

கொழும்பு வர்த்தக மாணவர் சங்க விருது கலைவிழா கொழும்பு டவர் அரங்கில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய அமைச்சர் மனோ கணேசன் மேலும் தெரிவித்ததாவது:

புலிகளின் மீதான தடையை நீக்கச் சொல்லி நீதிமன்றத்தில் எவரும் வழக்குத் தொடரலாம், வாதங்களை முன் வைக்கலாம், அதற்கு அனைவருக்கும் உரிமை உண்டு. புலிகள் தற்போது ஆயுதப் போரில் இல்லை எனவும், இலங்கையில் வாழும் சுமார் 12 ஆயிரம் முன்னாள் போராளிகளை முன்னிலைப் படுத்தி, அவர்கள் இன்று ஜே.வி.பியைப் போல் ஜனநாயக வழிக்குத் திரும்பி விட்டார்கள் எனவும் எவரும்வாதிட முடியும். ஏன் அதனை எவரும் செய்யவில்லை?

புலிகளைப் பற்றி மக்கள் மன்றத்தில் பேசிய அப்பாவி நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலாவுக்கு இருக்கும் தைரியம், இன்று த்மிழ் தலைவர்களுக்கு இல்லையா? முன்னாள் போராளிகளை முன்னிலைப்படுத்தி வழக்குப் பேசினால், அந்த முன்னாள் போராளிகள் ஜனநாயக அரசியலில் எழுச்சி பெற்று விடுவார்கள் என எவராவது அஞ்சுகிறார்களா?

சிங்கள தரப்பில் புலிகள் என்ற பெயர் இன்னமும் அவர்கள் வயிற்றில் புளியைக் கரைக்கிறது. அதுவே இனப்பிரச்சினைத் தீர்வுக்கு அவர்கள் உடன்படுவதை தடுத்து வருகிறது. புலிகள் பற்றிய அபிப்பிராயத்தை மாற்ற, நமது சட்டத்தரணியான அரசியல்வாதி உள்ளிட்ட தலைவர்கள் சட்டப்படி முயல வேண்டும். இன்று புலிகள் ஆயுத போரில் இல்லை என்பதைக் கூறி, ஜே.வி.பியை போன்று, ஜனநாயக வழிமுறைக்கு வந்துவிட்ட இலங்கையில் உள்ள முன்னாள் போராளிகளை நீதிமன்றத்தில் முன்னிலைபடுத்த வேண்டும். ஜே.வி.பியை போன்று தமிழ் இளைஞர்கள் அன்று ஆயுதம் தூக்கியதன் பின்னணியில் இருந்த காரணத்தை எடுத்து தர்க்கரீதியாகக் கூற வேண்டும். 1972ஆம் ஆண்டின் குடியரசு அரசமைப்புக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட, "ட்ரயல்அட்பார்" வழக்குக்குச் சமமாக இந்த வழக்கையும் கொண்டு செல்ல வேண்டும். "ட்ரயல்அட்பார்" வழக்கில் தந்தை செல்வா, ஜி.ஜி. பொன்னம்பலம், திருச்செல்வம் ஆகியோர் முன்வைத்த வாதங்களைப் போல், இன்றைய சட்டத்தரணி தமிழ் தலைவர்களும் வாதங்களை முன்வைக்க வேண்டும்.

ஜே.வி.பியை போன்று விடுதலைப் புலிகள் இயக்கமும், இலங்கை மண்ணில் செயற்பட்ட ஒரு அரசியல் இயக்கம். அரசுக்கு எதிராக ஆயுத கிளர்ச்சியில் இந்த இரண்டு இயக்கங்களும் ஈடுபட்டன. இரண்டும் தடை செய்யப்பட்டன. ஜே.வி.பியின் மீதான தடை நீக்கப்பட்டுள்ளது. அதேபோல், புலிகளை பற்றியும் நாம் பார்க்க வேண்டும். புலிகள் இயக்கத்தில் இருந்தார்கள், செயற்பட்டார்கள் என்று 12 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆண், பெண் தமிழர்கள் நம் நாட்டிலேயே இன்று வாழ்கிறார்கள். அவர்களில் சிலர் சிறையில் அடைக்கப்பட்டு துன்புறுகிறார்கள். ஆகவே புலிகள் இன்னமும் இருக்கிறார்கள் என்றோ, ஆயுதம் தூக்கப் போகிறார்கள் என்ற தோற்றப்பாடு உண்மையா, இல்லையா என்பதைப் பற்றி எடுத்துக்கூற இந்த 12 ஆயிரத்துக்கும் மேற்பட்ட, கை, கால்கள், அவயங்கள் இழந்த, சிறைகளில் வாழ்கின்ற, தம் சொந்த ஊர்களில் துன்புற்று வாழ்கின்ற முன்னாள் போராளிகளுக்குத் தான் முடியும். "தாங்கள்தான் புலிகள்" என்று கூறி புலம்பெயர்ந்த நாடுகளில் வாழும் சில குழுக்களை விட, இந்த நாட்டில் இன்று வாழும் இந்த முன்னாள் போராளிகளுக்குத் தான் இந்த தார்மீக உரிமை இருக்கிறது. இவர்களது ஆயிரக்கணக்கான, வாக்குமூலங்களை, சத்தியக் கடதாசிகளை, நமது சட்டத்தரணி உள்ளிட்ட தலைவர்கள் நீதிமன்றத்தில் வைக்கலாமே!

புலிகள் மீதான தடையை நீக்குமாறு கோரலாம். உலகின் பல நாடுகளில் நடப்பது போல் இலங்கை நீதிமன்றத்திலேயே வழக்குத் தொடரலாம். தமிழ்த் தேசியவாதத் தலைவர்கள், அதை ஏன் இன்னமும் செய்யாமல் இருக்கிறார்கள்? நான் இன்று ஒரு அமைச்சராக இல்லாமலிருந்தால் இதை நானே செய்வேன் - என்று அவரது செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது. (4)

# இளசுகளின் உந்துருளி ஓட்டத்தால் பதைபதைக்கின்றனர் ஏனையோர்

## வவுனியாவில் யார் கட்டுப்படுத்துவது என்று கேள்வி

வவுனியாவில் பல்வேறு இடங்களில் அதிவேகமாக உந்துருளிகளை ஓட்டிச்செல்லும் இளைஞர்களால் பாதசாரிகளும், சீராக வாகனம் ஓட்டுவோரும் கடுஞ் சிரமங்களை எதிர்கொண்டுவருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

வைரவபுளியங்குளம் வைரவர்கோவில் வீதி, தொடருந்து நிலைய வீதி, பூந்தோட்டம் பாடசாலைவீதி, மன்னார் வீதி, குருமன்காடு கோவில் வீதி போன்ற பகுதிகளில் இளைஞர்கள் வேகமாக, வீதி ஒழுங்குகளைப் பேணாது ஓட்டிச்செல்கின்றனர்.

இதனால், வீதி ஒழுங்குகளைப் பேணி வாகனங்களை ஓட்டுபவர்களும் விபத்துகளைச் சந்திக்கின்றனர். 18 தொடக்கம் 25 வயதுக்கு உட்பட்ட இளைஞர்களே அதி வேகமாக உந்துருளிகளை ஓட்டுகின்றனர்.

பலர் விபத்தை ஏற்படுத்தி விட்டுத் தப்பிச் சென்றுவிடுகின்றனர்.

மது அருந்திவிட்டு உந்துருளி ஓட்டுபவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துச் செல்கின்றது.

எனவே முக்கியவீதிகளில் வேகத் தடைகளை அமைத்தோ போக்குவரத்து பொலிஸாரை கடைமையில் நிறுத்தியோ விபத்துகளையும், அதனால் ஏற்படும் இறப்புகளையும் தடுப்பதற்கு உரியதரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இளைஞர்கள் இனிமேலாவது தாமாக உணர்ந்து உந்துருளிகளை அவதானத்துடன் ஓட்டவேண்டும், விபத்துகளைத் தவிர்க்க முன்வரவேண்டும் என்பது நலன்விரும்பிகளின் எதிர்பார்ப்பாக உள்ளது. (4,110)

# தங்குமிடங்கள் அனைத்தும் பதிவு செய்யப்படவேண்டும்

## மாநகர முதல்வர் அறிவுறுத்து

வர்த்தக அல்லது சேவை நோக்கில் நீண்டகால மற்றும் குறுகிய கால அடிப்படையில் நடத்தப்படுகின்ற விடுதிகள், சிறு விடுதிகள், வீடுகள், தங்குமிடங்கள், போர்டிங், ரெஸ்டுரண்டுகள், அனைத்தும் எதிர்வரும் ஒக்ரோபர் 30ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பதிவுசெய்திருத்தல்வேண்டும்.

இவ்வாறு யாழ்ப்பாண மாநகர சபையின் முதல்வர் இம்மானுவல் ஆனல்ட் அறிவுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பிய செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டதாவது.

சபையின் அமர்வில் தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன. அதன்படி, யாழ்ப்பாண மாநகர சபைக்குட்பட்ட வர்த்தக நோக்கிலான அல்லது சேவை நோக்கிலான நிரந்தர குடியிருப்பாளர்கள் அல்லாத சுற்றுலாப் பயணிகளுக்கு அல்லது பயணிகளுக்குத் தங்குமிட வசதியைச் செய்து கொடுப்போர் தங்களது வர்த்தக அல்லது சேவை நிறுவனங்களை சபையின் நடைமுறைகளுக்கு அமையப் பதிவு செய்து கொள்ளல் அவசியம் என்றுள்ளது. (4)

# ஞாயிறுகளில் கடைகளை மூட வேண்டும்

## கரைச்சி சபை அறிவுறுத்து

கிளிநொச்சியில் உணவகம், மருந்தகம், ரயர் ஓட்டும் கடைகள் தவிர்ந்த சகல வர்த்தக நிலையங்களும் ஞாயிற்றுக்கிழமைகளில் முழுமையாக மூடப்பட்டு தொழிலாளர்களுக்கு விடுமுறையளிக்க வேண்டும் என்று கரைச்சிப் பிரதேச சபை வர்த்தக நிலையங்களுக்கு அறிவித்தல் விடுத்துள்ளது.

கிளிநொச்சி நகரப்பகுதிகளில் 02க்கும் மேற்பட்ட வர்த்தக சங்கங்கள் இயங்கி வருகிறன. கிளிநொச்சி வர்த்தக சங்கம், சேவைச் சந்தை வர்த்தக சங்கம், பரந்தன் வர்த்தக சங்கம் என்பன கிளிநொச்சி நகரை மையப்படுத்தி இயங்கி வருகிறன. 2000க்கும் மேற்பட்ட வர்த்தக நிலையங்கள் இந்தச் சங்கத்திலேயே உறுப்புரிமை வகிக்கின்றன. தொழிலாளர்களுக்கு ஞாயிற்றுக்கிழமைகளில் விடுமுறை வழங்கப்படுவதில்லை. சில வர்த்தக நிலையங்கள் ஞாயிற்றுக்கிழமைகளில் பொருள்களின் இருப்பை மதிப்பீடு செய்வதாக தெரிவித்து ஒற்றைக் கதவுகளில் வர்த்தக நிலையங்களைத் திறக்கின்றன, வர்த்தக நிலையங்களில் இருப்பை மதிப்பீடு செய்வதற்காகப் பெண் பணியாளர்களை பயன்படுத்துகின்றன என்பன போன்ற செயற்பாடுகள் இடம்பெறுகின்றன" என்றும் இவை முறைகேடானவை என்றும் சமூக ஆர்வலர்களும், வர்த்தகப் பிரதிநிதிகளும் சபைக்குச் சுட்டிக் காட்டியிருக்கின்றனர்.

ஆகவே ஞாயிற்றுக்கிழமைகளில் ஒரு வர்த்தக நிலையத்தைத் திறப்பதாக இருந்தால் திருத்த வேலைக்காகவோ அன்றி இருப்பை மதிப்பீடு செய்வதற்காகவோ வேறு வியாபார நோக்கத்துக்காகவோ வர்த்தக நிலையத்தைத் திறப்பதாகவோ இருந்தால், வர்த்தக சங்கத்தின் அல்லது பிரதேச சபையின் முன் அனுமதி பெறப்படவேண்டும் என்று அறிவிக்கப்பட்டு இது வர்த்தக சங்கங்களுக்கும் அறிவுறுத்தப்பட்டிருக்கிறது.

பண்டிகைக் காலங்களின்போது பண்டிகைக் நாள்களுக்கு முன்னர் வருகின்ற ஞாயிற்றுக்கிழமைகளில் வர்த்தக நிலையங்களைத் திறந்து வியாபாரம் செய்ய அனுமதிக்க முடியும்.

தற்போதைய சூழ்நிலைகளால் சில வர்த்தக நிலையங்கள் ஞாயிற்றுக்கிழமைகளில் திறப்பதும் வர்த்தக சங்கங்களுக்கு கட்டுப்படாமையும் பிரதேச சபையால் அவதானிக்கப்பட்டு வருகிறது. அத்தகைய நடவடிக்கைகளைக்கைவிட வேண்டும். (4)

## அரசை வீழ்த்துவது மட்டுமன்றி நாட்டை அபிவிருத்தி செய்வதே எமது இலக்கு

நாமல் ராஜபக்ச தெரிவிப்பு



கொழும்பு, ஒக். 9
அரசை வீழ்த்துவது மட்டுமன்றி நாட்டை மீண்டும் அபிவிருத்தியை நோக்கி கொண்டுச்செல்வதே தங்களின் ஒரே இலக்கு என்று ஒருங்கிணைந்த எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினரான நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

லண்டன் வாழ் இலங்கைக் குடிமக்களுடனான சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், தங்களது இந்த செயற்பாட்டுக்கு லண்டனில் உள்ள இலங்கையர்கள் அனைவரும் அரசியல் பேதங்களை மறந்து ஒத்துழைக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

அவர் தொடர்ந்து உரையாற்றியதாவது:

2015 ஆம் ஆண்டு ஜனவரி 8 திகதி புதிய அரசு ஒன்று அமைக்கப்பட்டது. கூட்டாட்சி அரசு எனப் பெயரிடப்பட்ட இந்த அரசு மகிந்த ராஜபக்ச அரசினரைக் கொள்ளையர்கள் என்று அடையாளப்படுத்தினார்கள். இந்தப் பரப்புரையையே அவர்கள் கடந்த காலங்களில் தொடர்ச்சியாக மேற்கொண்டார்கள்.

கூட்டாட்சி, சுயாதீனம் தொடர்பிலெல்லாம் கதைத்த இந்த அரசுதான், ஆட்சிக்கு வந்து சில மாதங்களிலேயே மத்திய வங்கியில் பெரியளவில் பிணைமுறி மோசடியில் ஈடுபட்டது. இதனை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவும் பகிரங்கமாகக் கூறியுள்ளார்.

மேலும், தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவோ நாட்டின் பொருளாதாரம் பெரியளவில் வீழ்ச்சியடைந்து வருகிறது எனக் கூறிக்கொண்டிருக்கிறார். இதனால், மக்களுக்கு கடும்சுமையை ஏற்படுத்தும் வகையில் வரியையும் அதிகரித்துள்ளனர்.

இந்த வரி நாட்டின் பொருளாதாரத்துக்கோ அபிவிருத்திக்கோ பயன்படுவதில்லை என்பதுதான் இன்னும் பிரச்சினையாக உள்ளது. அதேநேரம், அரச தலைவரைக் கொலைசெய்யத் திட்டமிட்ட விவகாரம் தற்போது நாட்டில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. ஆனால், இதுவிடயத்தில் குற்றம் சாட்டப்பட்டுள்ள பிரதிப்பொலிஸ் மா அதிபருக்கு எதிராகக்கூட இன்னும் விசாரணைகள் ஆரம்பிக்கப்படவில்லை.

நாம் நீதிமன்றின் செயற்பாடுகள் தொடர்பில் விமர்சிக்கவில்லை. ஆனால், எமது லம்போகினி கார்கள் மற்றும் உலக வங்கிகளில் எமது கணக்குகளில் இருக்கும் 18 பில்லியன் டொலரைக் கொண்டு வந்துக்காட்டுமாறே பகிரங்கமாகச் சவால் விடுக்கின்றோம்.

இந்தப் பணத்தை நாட்டுக்குள் கொண்டுவந்தாலே, டொலரின் விலை 100 ரூபாவாகக் குறைவடைந்துவிடும். இவ்வாறான பொய்யான குற்றச்சாட்டுக்களைச் சுமத்துவதில் மட்டும்தான் அரசு மும்முரம் காட்டிவருகிறது. அத்தோடு, தேசிய சொத்துக்களை வெளிநாடுகளுக்கு விற்கும் செயற்றிட்டங்களையும் அரசு தற்போது மேற்கொண்டுவருகிறது. இவ்வாறு இன்று ஒட்டுமொத்த நாடும் தேசிய ரீதியாகப் பெரியளவில் பின்னடைவை நோக்கித்தான் பயணித்துக் கொண்டிருக்கிறது. இதுதொடர்பில், பன்னாட்டுச் சமூகமும் எதிர்ப்புக்களையோ அல்லது கருத்துக்களையோ கூறவில்லை என்பதுதான் எமது கவலையாக இருக்கிறது. எனவே அரசை வீழ்த்துவது மட்டுமன்றி, இந்நாட்டை மீண்டும் அபிவிருத்திப் பாதைக்கு இட்டுச்செல்வதும்தான் எமது நோக்கமாகும். எனவே, இதற்கு லண்டன் வாழ் இலங்கைக் குடிமக்கள் அனைவரும் அரசியல் பேதங்களை மறந்து ஒத்துழைக்க வேண்டும்" - என்றார்.

## நாட்டில் ஏற்பட்டுள்ள ஆட்சி அதிகாரத் தளம்பல் சிறுபான்மைச் சமூகங்களைத் திண்டாட வைக்கும்

கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் தெரிவிப்பு



**கொழும்பு,ஒக். 9**
**நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள ஆட்சியதிகாரத்தளம்பல் சிறுபான்மைச் சமூகங்களை திண்டாட வைக்கும் என்று தான் அஞ்சுவதாகக் கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் செய்னுலாப்தீன் ஆலிம் நஸீர் அஹமத் தெரிவித்தார்.**

தற்போதைய அரசியல் நிலை மாற்ற முன்னெடுப்புக்கள் தொடர்பாக அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தற்போது அரசியல்நிலைமாற்றம் ஒன்று ஏற்படுவதற்கான சாத்தியங்கள் பற்றிப் பேசப்படுகின்றது.

இந்த கூட்டாட்சி அரசை ஆட்சிக்குக் கொண்டு வந்தவர்களில் முக்கியமானவர்கள் என்கின்ற பாத்திரத்தை சிறுபான்மைச் சமூகங்களான தமிழர்களும் முஸ்லிம்களும் சுமந்துள்ளார்கள்.

ஆனால், நாட்டில் சில நாள்களாக நாட்டின் கூட்டாட்சி அரசின் தலைமைத்துவப் பொறுப்புக்களில் மாற்றம் கொண்டுவர முயற்சிகள் நடப்பதை அறிய முடிகின்றது.

அதன்படி தலைமைத்துவ மாற்றங்கள் நடந்து இடைக்கால ஆட்சி ஏற்படுவது தவிர்க்கமுடியாமற்போகும் பட்சத்தில் நல்லாட்சியின் பங்காளிகளான சிறு பான்மைச் சமூகங்களின் நிலமை என்னாகுமோ என்ற நியாயமான அச்சம் எழுந்துள்ளது.

எவ்வாறாயினும் ஒரு நாட்டின் ஜனநாயகப் பண்புகளை மதித்து அதற்குரிய ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டியது நாட்டு மக்களின் கடமையாகும்.

அதேவேளை, கடந்த 30 வருட கால கொடிய போரால் மிகவும் நொந்துபோனவர்களில் முதன்மையானவர்களாகப் பல்வேறு நெருக்கடிகளுக்குள் சிக்கிச் சிறுபான்மைச் சமூகங்களின் பிரச்சினைகளுக்கு நிரந்தர அரசியல் தீர்வு வேண்டும் என்பதை வலியுறுத்துவதே எமது நோக்கமாகும்.

நாட்டில் எந்தத் தரப்பினர் ஆட்சி அதிகாரத்துக்கு வந்தாலும் அவர்கள் சிறுபான்மைச் சமூகங்கள் காலாகாலமாக எதிர்கொண்டுவரும் அரசியல் மேலாதிக்கவாத நெருக்கடிகளைத் தீர்க்க முயற்சிக்க வேண்டும். இந்த நாடு சீரழிக்கப்பட்டு சிதறுண்ட சமூகங்களாக அழிவை நோக்கிய பாதைக்கு செல்வதைத் தவிர்க்க ஆட்சியதிகாரத்துக்கு வரும் எந்தத் தரப்பும் முயற்சிக்க வேண்டும்" என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தனித்து ஆட்சி அமைப்போம்: ஐக்கிய தேசியக் கட்சி எச்சரிக்கை

கொழும்பு, ஒக். 9
மகிந்த ராஜபக்சவுடன் இணைந்து சுதந்திர கட்சி மாற்று அரசுக்கான முடிவை எடுக்கும் தருணத்தில் , தனித்து ஆட்சி அமைப்போம். இதன்போது எவ்விதமான விட்டுக்கொடுப்புக்களுக்கும் இடமில்லை என ஐக்கிய தேசியக் கட்சி எச்சரித்துள்ளது.

வீண் பேச்சுக்களை தவிர்த்து முடிந்தால் 2019 ஆம் ஆண்டுக்கான பாதீட்டுத் திட்டத்தை தோல்வியுறச் செய்து மாற்று அரசை உருவாக்கிக் கொள்ளுமாறும் சவால் விடுத்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமாக சிறிகொத்தாவில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக்கொண்டு விளக்கமளிக்கும் போதே நாடாளுமன்ற உறுப்பினர் துசார இந்தனில் இதனை தெரிவித்தார்.

## இடைக்கால அரசை அமைப்பதாக இருந்தால் ஐ.தே.க வின் தொடர்பை மைத்திரி முறிக்கவேண்டும்


கூறுகின்றார் வாசுதேவ நாணயக்கார



கொழும்பு, ஒக் 9
தற்போதைய நிலையில் இடைக்கால அரசை அமைப்பதாக இருந்தால் அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன ஐக்கிய தேசியக் கட்சியுடன் இருக்கும் தொடர்பை முறித் துக்கொள்ள வேண்டும் என்று மகிந்த ராஜபக்ச கூறியதாக ஜனநாயக இடதுசாரி முன்னணி யின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

இந்த அரசின் போக்கைத் தொடர்ந்தும் அனுமதிக்க முடியாது. அதனால் மாற்று அரசு ஒன்றின் தேவை ஏற்பட்டுள்ளது எனவும் மகிந்த ராஜபக்ச தெரிவித்ததாக வாசுதேவ நாணயக்கார எம்.பி. குறிப்பிட்டார். சோசலிச மக்கள் முன்னணி கொழும்பில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

## ஐ .தே. க வுடன் இணைந்து தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஊழலுக்குத் துணை



கொழும்பு, ஒக். 9
ஐக்கிய தேசியக் கட்சிக்கும், தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கும் கொள்கை ரீதியில் எவ்விதமான வேறுப்பாடுகளும் கிடையாது. இரண்டு தரப்பினரும் ஊழல் மோசடிகளுக்கே துணை போகின்றனர். வடமாகாண சபையின் பதவி காலம் நிறைவடைந்தவுடன் அங்கு இடம்பெறுகின்ற நிர்வாக முறைகேடுகளுக்கு தமிழ் தேசிய கூட்டமைப்பே பொறுப்பேற்க வேண்டும் என பேராசிரியர் ஜி. எல்.பீரிஸ் குற்றம் சுமத்தியுள்ளார்.

மாகாண சபை தேர்தலை நடத்த எவ்விதமான முன்னேற்றகரமான முயற்சிகளும் அரசினால் மேற்கொள்ளப்படவில்லை . மாறாக தேர்தலை பிற்போடும் முயற்சிகள் மாத்திரமே இடம்பெறுகின்றது எனவும் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் அலுவலகத்தில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக் கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பாதீட்டுத் திட்டத்தில்

## சுகாதாரம் – கல்விக்கான ஒதுக்கீடுகளை குறைக்க நடவடிக்கை எனக் குற்றச்சாட்டு!



கொழும்பு, ஒக். 9
2019 ஆம் ஆண்டுக்கான பாதீட்டுத் திட்டத்தில் கல்வி மற்றும் சுகாதார துறையின் ஒதுக்கீடுகளை குறைக்கும் செயற்பாட்டில் அரசு ஈடுபட்டுள்ளது என மக்கள் விடுதலை முன்னணி குற்றம் சாட்டியுள்ளது. இந்த நிலையில் குறித்த இலக்கைக் கொண்ட அனைத்து நகர்வுகளையும் தாங்கள் எதிர்ப்போம் என அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்னாயக்க தெரிவித்தார்.

அரசிற்கு எதிராக மேற்கொள்ளவுள்ள போராட்டம் தொடர்பில் ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த அரசானது அமெரிக்க டொலருக்கு நிகரான ரூபாயின் பெறுமதி வீழ்ச்சியடைந்துள்ளதால், கிராமப்புற மக்களின் மானியத் திட்டங்களைக் குறைக்க முயற்சி செய்து வருகிறது. அரசின் இத்தகைய நடவடிக்கைகளுக்கு எதிராக தொடர்ச்சியான எதிர்ப்புப் போராட்டங்கள் நடத்தப்படவுள்ளன. என்றார். வரி அதிகரிப்பு மற்றும் பொருள்களின் விலையேற்றத்திற்கு எதிராக எதிர்வரும் 23 ஆம் திகதி போராட்டம் நடத்தவுள்ளதாக ஜே.வி.பி.யின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

# மைத்திரி - மகிந்த இணைந்த இடைக்கால அரசு கோழிக்கூட்டுக்குள் நரியை விடுவது போன்றது

**கொழும்பு, ஒக். 9**
**மைத்திரி – மகிந்த இணைந்து இடைக்கால அரசை அமைப்பது என்பது கோழிக்கூட்டுக்குள் நரியை விடுவது போன்றதற்கு ஒப்பானது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும் அமைச்சருமான ஹபீர் காசீம் தெரிவித்தார்.**

இடைக்கால அரசை அமைப்பது தொடர்பில் வெளிவரும் தகவல்களை அடுத்து ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடு தொடர்பில் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவும் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவும் இணைந்து இடைக்கால அரசு ஒன்றை அமைப்பது என்பது நகைப்புக்குரிய விடயமாகும். அது கோழிக்கூட்டுக்குள் நரியைக் கொண்டு சென்று விட்டதற்கு ஒப்பானது. மூளையுள்ள எந்த மனிதரும் கடந்த கால திருடர்களுடன் இணைந்து இடைக்கால அரசை அமைப்பதற்கு சிந்திக்கவே மாட்டார்கள். அவ்வாறு சிந்தித்தாலும் அவர்களால் அது இயலாத காரியமாகும்.
எந்தச் சவாலையும் சந்திப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சி தயாராகவே உள்ளது- என்றார். இதே வேளை அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவிக்கையில்,
மைத்திரியும் மகிந்தவும் சந்தித்தார்களா என்பது தொடர்பில் எனக்கு எந்தவிதமான தகவல்களும் தெரியாது. இருப்பினும் ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான அரசைத் தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கு நாம் தயாராகவுள்ளோம்.
ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான அரசு சக்தி மிக்கதாகத் தொடர்ந்தும் பயணிக்கும் - என்றார். (31)

# புதிய அரசமைப்பை திருட்டுத்தனமாக நிறைவேற்றிக்கொள்ள அரசு முயற்சி

*கூறுகின்றார் உதய கம்மன்பில*

கொழும்பு, ஒக். 9
புதிய அரசமைப்பை அரசு திருட்டுத்தனமாக நிறைவேற்றிக் கொள்ள முயற்சிக்கின்றது. இதனால் நாடு 9 பிளவுகளாகப் பிரிவடையும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.
லண்டன் வாழ் இலங்கைக் குடிமக்களுடனான சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது,
20 ஆவது திருச்சட்டத்தை மக்கள் எதிர்ப்பார்கள் என்று அரசுதுக்கு நன்றாகத் தெரியும். இது கூட்டாட்சிக்கு வழிவகுக்கும் என்பதால் மக்கள் இதனை நிச்சயமாக ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். இதனால், இதனைப் பின்கதவு வழியாக கொண்டுவரவே அரசு முயற்சித்து வருகிறது.
இதனால், 9 பிரிவுகளாக நாடு பிளவடையும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளது. இதற்காகத்தான் அன்று புலிகள் போராடினார்கள். தற்போது எமது வாக்குகளால் வந்த அரசியல்வாதிகளே இதனை நிறைவேற்ற முயற்சிக்கிறார்கள். எமது தாய் நாடு இந்த அரசால் கொஞ்சம் கொஞ்சமாகப் பாதிக்கப்பட்டுக்கொண்டிருக்கிறது.
இதற்கெதிராக நாம் இலங்கையில் தற்போதே போராட்டங்களை ஆரம்பித்துள்ளோம். இதற்காக லண்டனில் வாழும் இலங்கைக் குடிமக்களும் எம்முடன் கைக்கோர்த்து. இந்த அரசின் செயற்பாடுகளுக்கு எதிர்ப்பினை வெளியிட வேண்டும் - என்றார்.

# ஒரே சூலில் பிறந்த மாணவர்கள் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி!



கொழும்பு, ஒக். 9
ஒரே சூலில் பிறந்த மூன்று மாணவர்கள் எஹலியகொட அல் ஹிக்மா முஸ்லிம் மகா வித்தியாலத்தில் இவ்வருடம் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர்.
அஸ்கன்குல வீதியைச் சேர்ந்த எம். எச்.எம் அஹ்ஸன் மற்றும் பாத்திமா முபீதா தம்பதியினருக்கு 2008 ஆம் ஆண்டு ஒரே சூலில் பிறந்த மூன்று குழந்தைகளே இவ்வாறு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திய டைந்துள்ள னர். எஹலியகொட அல் ஹிக்மா முஸ்லிம் மகா வித்தியாலத்தில் ஐந்தாம் தரத்தில் கல்வி பயிலும் இந்த மூன்று மாணவர்களும் அதிக புள்ளிகளைப் பெற்று சித்திய டைந்துள்ளனர். பாத்திமா அம்ரா 184(மாவட்டத்தில் நான்காம் இடம்) அஹமட் அப்கர் 181 (மாவட்டத்தில் ஆறாம் இடம்) அஹமட் அம்ஹர் 164 என்ற ரீதியில் புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

# பொருளாதார நிலை பற்றிப் பொய்யான பரப்புரை: இலங்கை தொடர்பில் பன்னாடுகளில் அபகீர்த்தி

*கூறுகின்றார் பந்துல குணவர்த்தன எம்.பி.*

கொழும்பு. ஒக். 9
நாட்டின் பொருளாதார நிலை தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியினர் செய்து வரும் பொய்யான பரப்புரையால் இலங்கைக்கு பன்னாடுகளில் அபகீர்த்தி ஏற்பட்டு வருதாகக் கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார். கூட்டு எதிர்க்கட்சியின் பொருளாதார ஆய்வுப் பிரிவின் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்றுமுன்தினம் பொரளையில் நடைபெற்றது. இதன்போது கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
சுதந்திரத்தின் பின்னரான வரலாற்றில் இலங்கை அரசு வெளிநாட்டுக் கடன்களை மீளச் செலுத்துவதில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நெருக்கடிக்கு உள்ளானதே கிடையாது.
தற்போதைய அரசு அவ்வாறான ஒரு நிலைக்குத் தள்ளப்பட்டள்ளது.
2015 ஆம் ஆண்டு மசகு எண்ணெய் இறக்குமதி செய்யும் செலவு குறைந்திருந்தது. அச்சமயத்தில் இந்த அரசு ஆட்சிக்கு வந்தது. அவர்கள் ஆட்சியை பெற்றவுடன் அம்பாந்தோட்டைத் துறைமுகத்தின் கடனை ஒரேதடவையில் செலுத்தி நிறைவுக்குக் கொண்டு வந்திருந்தால் 500 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மீதமாகியிருக்கும்.
2014 ஆம் ஆண்டு துறைமுக அதிகார சபையானது 8 ஆயிரத்து 897 மில்லியன் ரூபா இலாபமீட்டியிருந்தது அதன்காரணமாக அம்பாந்தோட்டைத்துறைமுகத்தின் கடனை தொகைக்கான குறித்த காலப்பகுதிக்குரிய மீளளிப்புத் தொகையைச் செலுத்துவதில் எவ்விதமான பிரச்சினையும் ஏற்பட்டிருக்கவில்லை.
ஆனால் மகிந்த ராஜபக்சவைஅரசியல் ரீதியாகப் பழிவாங்க வேண்டும் என்ற சிந்தனையில் தான் தற்போதைய ஆட்சியாளர்கள் இருந்தார்கள். இதனால் தான் அம்பாந்தோட்டைத் துறைமுகத்தினை வீழ்ச்சியடைவதற்குரிய செயற்பாடுகளைமேற்கொண்டார்கள். 2017 ஆம் ஆண்டில் இலங்கைக்கு வரும் வெளிநாட்டுக் கப்பல்களின் எண்ணிக்கை 230 ஆக குறைவ டைந்தது. தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவும் அவர் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியினரும் கடன் சுமை தொடர்பான நிலைப்பாடை உலகம் பூராகவும் பொய்யாக பரப்புரை மேற்கொண்டுள்ளனர். தற்போதைய சீனாவுக்கான இலங்கைத் தூதுவர் கலாநிதி. கருணாசேன மிகத்தெளிவாக சீன கடன்கள் தொடர்பில் வெளிப்படுத்தியுள்ளார். சீனாவின் கடன் பொறிக்கும் இலங்கை சிக்கவில்லை என்பதை குறிப்பிட்டுள்ளார். இவர் தற்போதைய ஆட்சியாளர்களினால் நியமிக்கப்பட்ட தூதுவராவார். அவ்வாறிருக்கையில் ரூபாவின் வீழ்ச்சியால் நாட்டின் கடன் சுமை 10 பில்லியனால் அதிகரிக்கின்றமை தொடர்பில் அமெரிக்காவின் உப அரச தலைவர் கவனத்தில் கொண்டிருக்காதது ஏன்? ஏனென்றால் அமெரிக்காவின் உப அரச தலைவருக்கு, தலைமை அமைச்சர் மற்றும் அவருடைய அணியினறால் வழங்கப்பட்ட புள்ளி விவரங்கள் அனைத்தும் தவறாக இருக்கின்றது.
இதேநேரம், சுதந்திரத்தின் பின்னரான இலங்கையின் ஆட்சியாளர்களில் எவராவது ஒருவருடகாலத்துக்குள் ஆயிரத்து 112 பில்லியன் ரூபாவினால் கடன்சுமையை அதிரித்திருக்கின்றார்கள் என்பதை யாராவது கூறமுடியுமா? என சவால் விடுகின்றேன் -என்றார். (31)

# மருந்து கையிருப்பை கணினி மயப்படுத்த நடவடிக்கை

கொழும்பு, ஒக். 9
மருத்துவமனைகளில் மருந்து கையிருப்புத் தொடர்பான தகவல்கள் கணினிமயப்படுத்தும் வேலைத்திட்டம் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளது.
இதுதொடர்பாகச் சுகாதார போஷாக்கு மற்றும் சுதேச மருத்துவத்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவிக்கையில், சகல மக்களுக்கும் சமமான அளவில் சுகாதார வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதே தற்போதைய அரசின் நோக்கம் - என்றார்.
பொதுமக்களுக்கு தட்டுப்பாடின்றி மருந்தை விநியோ கிப்பது இதன் நோக்கமாகும். மருந்துத் தட்டுப்பாடு ஏற்பட்டவுடன் உடனடியாக மருத்துவ சேவைப் பிரிவுக்கு அறிவிப்பதுடன் ஏனைய மருத்துவமனைகளில் இருந்து மருந்து வகைகளைப் பெற்றுக் கொள்வதற்கும் இதன் மூலம் வசதி கிட்டுகின்றது என்று அமைச்சர் தெரிவித்தார்.
மாகாண சபைகளில் உள்ள மருத்துவமனைகளிலும் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட இருப்பதாகவும் சுகாதாரப் போஷாக்கு மற்றும் சுதேச மருத்துவத்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன மேலும் தெரிவித்தார்.

# மைத்திரியை தலைவராகக் கொண்டு இடைக்கால அரசை அமைக்க முயற்சி

கொழும்பு, ஒக் 9
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவை தலைவராகக்கொண்டு இடைக்கால அரசு ஒன்றை அமைக்கும் நடவடிக்கையை கூட்டு எதிர்க்கட்சி மேற்கொண்டு வருகின்றது. என்று ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.
சோசலிச மக்கள் முன்னணி கொழும்பில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அதற்காக நாடாளுமன்றத்தை கலைத்து பொதுத் தேர்தலொன்றுக்கு செல்ல வேண்டும் என்ற தீர்மானம் கொண்டுவரவது தொடர்பில் கலந்துரையாடியும் வருகின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## பொருளாதார மீட்சிக்கான வழி?

டொலர் விலையேற்றத்தின் பாதிப்பு இந்த ஆண்டு மட்டுமல்ல அடுத்த ஆண்டும் தொடரும் என்கிற எச்சரிக்கைவிடுக்கப்பட்டிருக்கிறது. வரலாற்றில்என்றுமில்லாத வகையில் டொலரின் விலை இன்று 170 ரூபா வரைக்கும்அதிகரித்திருக்கிறது. இதன்பாதிப்பு அனேகமாக எல்லாத்தரப்புகளையும் எல்லாப்பொருள்களையும் தாக்குகின்றது. அதிகமான பொருள்களுக்கு இறக்குமதியில் அதிகளவில்தங்கியிருக்கும் இலங்கையில் டொலர்விலையேற்றத்தின்பாதிப்பு மிகஉச்சமானதாக இருக்கும் என்பது சொல்லித் தெரியவேண்டியதில்லை. சந்தையில் அதை ஒவ்வொருவரும் வெகு சூடாக இப்போதே உணரக்கூடியதாக இருக்கின்றது.

கொழும்பில் மாறி மாறி ஆட்சிக்கு வரும் அரசுகள் ஒவ்வொன்றும் ஒன்றின் பொருளாதாரக் கொள்கையை மற்றொன்று தவறென விமர்சித்தபடி புதிய புதிய கொள்கைகளுடன் முன்னெடுக்கும் எந்தவொரு நடவடிக்கையும் நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதாக இல்லைஎன்பது பெரும்துன்பியல். டொலரின்விலையேற்றத்துக்குக் காரணம் உள்ளூர் உற்பத்திகளையும் செயற்றிறனையும் வளர்த்தெடுப்பதில் மாறி மாறி வந்த ஆட்சியாளர்கள்கவனமெடுக்காததுதான்என்றுசுட்டிக்காட்டுகின்றார்கள் பொருளாதார வல்லுநர்கள்.

ஏனைய ஆசிய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கை ரூபாயின் மதிப்பிறக்கம் குறைந்த மட்டத்திலேயே இருப்பதாக நிதி மற்றும் ஊடக அமைச்சகம் பெருமைப்பட்டுக் கொண்டாலும் மக்களால் தாங்கிக்கொள்ள முடியாத அவலத்தை இந்தப் பாதிப்பு ஏற்படுத்திக்கொண்டிருக்கிறது என்பதே உண்மை.

தனது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியைச் சரிசெய்வதற்கு அமெரிக்க அதிபர் ரொனால்ட் ட்ரம் எடுத்த நடவடிக்கையே இலங்கை உள்ளிட்ட பலநாடுகளிலும்கடுமையான பாதிப்பை ஏற்படுத்தியிருக்கிறது. உலகப் பொருளாதாரத்தின்பெரும்பகுதி டொலருடன்தொடர்புபட்டிருப்பதால் அதன்தூக்கம் பெரியளவில் எங்கும் உணரப்படுகின்றது.

உதாரணத்திற்கு, ட்ரம்பின் பொருளாதாரச் சீர்திருத்தத்தின் கீழ் அமெரிக்க மத்திய வங்கியானது தனது வட்டி வீதத்தினை அண்மையில் அதிகரித்தது. இதனால் பிறநாடுகளில் டொலரில் முதலீடு செய்திருந்தோர் அதிக வருவாயைக் கருத்தில்க் கொண்டு தமது முதலீடுகளை அமெரிக்காவுக்கு மாற்றிக் கொண்டனர். அப்படியே இலங்கையில் முதலீடு செய்தவர்களும் தமது முதலீடுகளை அவசர அவசரமாக அமெரிக்காவுக்கு மாற்றிக்கொண்டனர். இதனால் ரூபாவின் பெறுமதி வீழ்ச்சிகாணத் தொடங்கியுள்ளது என்று விவரிக்கிறார்கள் பொருளாதார வல்லுநர்கள்.

இது மட்டுமல்ல சீனப் பொருள்களுக்கானவரியை அதிகரித்தமை போன்ற இன்னும்சிலநடவடிக்கைகளும் டொலருக்கு எதிரான மற்றைய நாணயங்களின் மதிப்பிறக்கத்திற்குக் காரணமாகச் சொல்லப்படுகின்றன.

இத்தகையதொரு நெருக்கடி நிலையை எதிர்கொள்வதற்கான தயார் நிலையில் கொழும்பு இருக்கவில்லை என்பது பாதிப்பு அதிகளவில் உணரப்படுவதற்கு மற்றொருகாரணம் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். இந்த நிலையில் இருந்து மீள்வதற்கும் தப்பிப்பதற்கும் உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவிப்பதற்கும் உள்நாட்டு உற்பத்தியின்நுகர்வை மக்களிடம் ஊக்குவிப்பதற்கும் அரசு துரிதமான, தீவிரமான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவர்கள் பரிந்துரைக்கின்றனர்.

ஆனால், இதுவரையில் அவ்வாறான திசை நோக்கி அரசு நகர்வதாகவோ உள்ளூர் உற்பத்தியையும் உள்ளூர் பொருள்களின் நுகர்வை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை ஊக்குவிப்பதாகவோ தெரியவில்லை. இன்னும் சொல்லப்போனால் உள்ளூரில் விளையும் பொருள்களைத் தரக்குறைவானது என்று விவசாயிகளைத் தரம்தாழ்த்தி பொருள்களையும் தரம் தாழ்த்தும் பொது மனப்பாங்கே எங்கும் விரவிக் கிடக்கின்றது. இதனைமாற்றவேண்டுமானால் அரசின் கொள்கை ரீதியான அணுகுமுறை மாறியாகவேண்டும். நிரந்தரமான பொருளாதார உறுதிப்பாட்டை ஏற்படுத்துவதற்கும் தற்போது ஏற்பட்டுள்ளது போன்ற நெருக்கடி நிலையைத் தவிர்ப்பதற்கும் அதுவே நிரந்தரத் தீர்வாக முடியும்.

# அனைத்துச் சிங்கள ஆட்சித் தலைமைகளாலும் ஏமாற்றப்படும் ஈழத் தமிழினம்

இந்திய மக்களது சுதந்திரப் போராட்டத்தின் காரணமாகப் பிரித்தானி ஏகாதிபத்தியம் அந்த நாட்டுக்குச் சுதந்திரம் வழங்க முடிவு செய்தது. நாட்டின் சுதந்திரத்துக்காகப் பெரிய அளவில் போராடாத இலங்கைக்கும் சுதந்திரத்துக்கான வாய்ப்புத் தானாகக் கனிந்தது.
அந்த வகையில் அன்றுமுதல் இன்றுவரை இந்த நாட்டில் தமது நியாயமான உரிமைகளுக்காகப் போராடிவரும் தமிழர் தரப்புக்களை ஏமாற்றித் தமது பேரினவாதப் போக்கை நிலைநிறுத்தும் வகையில் சிங்கள அரசியல் தலைமைகள் செயற்பட்டு வருவதை விவரிக்கும் வகையிலானது இந்த ஆக்கம்.

சிங்களமூலம்:
மேஞ்ஞநாத (மவ்பிம)
தமிழில்-வீ.எஸ்.ரீ.


2008 ஆம் ஆண்டில் இந்த நாட்டு மக்களது கருத்து நிலைப்பாட்டுக்கு மதிப்பளித்து, அந்த வேளைய அரச தலைவர் மகிந்தராஜபக்ச, இந்திய அரசுடனான 'சீபா' உடன்படிக்கையில் கையெழுத்திடுவதில்லை. அந்த உடன்படிக்கையை ஏற்றுக் கொள்வதில்லை என்ற அரசியல் ரீதியான தீர்மானத்தை மேற்கொண்டார். ஆனால் 2015ஆம் ஆண்டில் பதவிக்கு வந்த கையோடு, ரணில்-மைத்திரி தலைமயிலான கூட்டு அரசு, அதற்கு மாறுபாடான முடிவொன்றை மேற்கொண்டது. மகிந்த ராஜபக்சவால் நிராகரிக்கப்பட்ட முன்னைய 'சீபா' உடன்படிக்கைக்குப் புதிய பெயரொன்றைச் சூட்டி, ஒரு சில மாற்றங்களைப் புகுத்தி, 'எட்கா' ஒப்பந்தம் என்ற பெயரில் அதை மேற்கொண்டு முடித்திருந்தது.
ஒரு வகையில், கூட்டு அரசின் தலைமை அமைச்சர் ரணிலின் ஏகாதிபத்தியப் போக்கானது குறித்த "எட்கா" ஒப்பந்தத்தின் மூலம் தெட்டத் தெளிவாகப் புலனாகியது. மகிந்த தரப்பினருக்கு ஏகாதிபத்திய ராஜபக்ச தரப்பினரெனப் பெயரிட்டு விமர்சித்துவந்த ரணில் விக்கிரமசிங்க தரப்பினர், நாட்டு மக்களது கருத்து நிலைப்பாட்டைக் குப்பைக்கூடைக்குள் போட்டு, இந்திய அரசுடன் 'எட்கா' உடன்படிக்கையை மேற்கொண்டனர். தகவல் அறியும் உரிமைச் சட்டத்துக்கு எத்தகைய மதிப்பும் வழங்காது, பன்னாட்டு வர்த்தக உடன்படிக்கைகள் தொடர்பான தகவல்களை வழங்குவதற்கான உரிமையை கூட்டு அரசு தடைசெய்தது. கூட்டு அரசு என்ற பெயரில் இன்றைய காலட்டத்தில் இந்த நாட்டின் பொது மக்கள் ரணில்விக்கிரமசிங்க தரப்பினரது அந்த மௌனமான ஏகாதிபத்தியப் போக்கை அனுபவிக்க நேர்ந்துள்ளது.




சிங்கள மொழியை அரச கருமமொழியாக்கியதன் காரணமாகச் சிங்கள-தமிழ் இனவாதம் உருவாகக் காரணமானதாக எஸ்.டபிள்யூ.ஆர்.பண்டாரநாயக்காவைத் தூற்றிக் காட்டும் தரப்பினர்கள் நாட்டில் இனவாதம் உருவாகக் காரணமாக அமைந்தது. பொன்னம்பலம் இராமநாதன் தரப்பினரது முக்கியத்துவம் புறக்கணிக்கப்பட்டதால்தான் என்பதையும் சிங்கள மொழியை இலங்கையின் அரச கருமமொழியாக ஆக்க வேண்டுமென்ற யோசனையை முதன் முதலில் முன்வைத்தவர் ஜே.ஆர். ஜெயவர்த்தனதான் என்பதையும் மறந்து போய் விட்டுள்ளனர்.

**ஜே.ஆரினது அரசியல் இலாப நோக்குச் செயற்பாடுகள்**

இந்தியாவுடனான உடன்படிக்கை மூலம் 150கோடி ரூபாய்கள் இலங்கை அரசுக்குக் கிட்டவுள்ளன. அதேபோன்று, சீனாவுடனான உடன்படிக்கை மூலமும் இலங்கை அரசுக்கு 150 கோடி ரூபாய்கள் கிட்டவுள்ளன. இவற்றின்மூலம் இந்த நாட்டை முன்னேற்றமடையச் செய்ய இயலுமென தலைமை அமைச்சர் ரணில் தெரிவித்துள்ளார். அந்த வகையில் நோக்க வேண்டியிருந்தால், உலகின் பெரிய நாடுகளுடனான உடன்படிக்கைகளை மேற்கொண்டால் மட்டுமே, சின்னஞ்சிறிய நாடான இலங்கையால் தன்னை அபிவிருத்தி செய்துகொள்ள இயலுமென நம்ப வேண்டியுள்ளது. தலைமை அமைச்சர் ரணில் விக்கிரசிங்க தரப்பினர் எப்போதுமே பொருளாதார, அரசியல் ரீதியில் பலம்மிக்க நாடுகளின் பக்கம் சார்ந்து செயற்படும் போக்குக் கொண்டவர்கள்.



ஆங்கில நாகரீகத்தின் பின்னணியில் வளர்ந்த ரணில் போன்ற தரப்பினர்களது போக்கு இத்தகையதே. ரணில் விக்கிரசிங்கவினது மாமன் வகை உறவு கொண்ட யூனியஸ் றிச்சர்ட் ஜெயவர்த்தன(ஜே.ஆர்) தமது ஆங்கிலேயேப்



> ஜே.ஆரினது மருமகன் உறவான ரணில் விக்கிரமசிங்கவோ, ஜே. ஆரின் பாணியையே தாமும் பின்பற்றிச் செயற்பட்டு வருகின்றார். தேசியத்துக்கு வக்காலத்து வாங்கும் வகையில் செயற்பட்டு பன்னாட்டு தத்துவத்தை அவமதிக்கும் விதத்தில் அவர் செயற்படுகிறார். ஆங்கி ஏகாதிபத்தியவாதிகள் இந்த நாட்டின் பாராம்பரி தேசியத் தலைமைகளைக் கொன்றழித்து, சந்தர்ப்பவாத தேசியத் தலைவர்களை உருவாக்கி வைத்துள்ளனர்.

பின்னணியைப் பௌத்த சிங்கள மக்கள் மத்தியில் மறைப்பதற்காகத் தம்மை ஜீவக ரவீந்திர ஜெயவர்த்தன என அறிவித்துத் தம்மை ஒரு தூய சிங்கள பௌத்தராக அரசியல் இலாபம் கருதி வெளிப்படுத்தியமை குறித்தும் நாட்டின் சிங்கள பௌத்தர்களில் பலர் தெரிந்தே வைத்திருந்தனர்.
ரணில் இந்தமுறை அதிகாரத்துக்கு வந்ததையடுத்து 'எட்கா' உடன்படிக்கையை முன்னிறுத்தி, இந்திய அரசைத் திருப்திப்படுத்த முயன்றமை அரசியல் இலாப நோக்கம் கருதியே அல்லாமல் நாட்டின் பொருளாதார முன்னேற்றம் குறித்த அக்கறை காரணமாகவல்ல என்பதே நிதர்சனமானதோர் உண்மையாகும்.

**ஸ்ரீ ஜவகர்லால் நேருவுடன் தொடர்பை ஏற்பத்திய ஜே.ஆர்.**

இந்திய நாட்டின் சுதந்திரப் போராட்டத்தில் முக்கிய பங்கு வகித்த ஸ்ரீ ஜவகர்லால் நேருக்குவுக்கு 1940ஆம் ஆண்டு ஜூலை மாதம் 20ஆம் திகதியிட்டு இலங்கையின் அவ்வேளைய அரசியல் பிரமுகராயிருந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனா கடிதமொன்றை அனுப்பி வைத்திருந்தார்.
உலகம் சகல துறைகளிலும் வேகமான மாற்றம் கண்டுவரும் நிலையில், அடிமைத் தனத்துக்கு ஆட்பட்டுள்ள இந்தியா மற்றும் இலங்கை ஆகிய நாடுகள் எதிர்வரும் காலத்தில் பிரித்தானிய ஏகாதிபத்தியத்துக்கு எதிரான சுதந்திரத்துக்கான போராட்டத்தில் கடும் பாதிப்பு எதுவுமின்றிச் சுதந்திரம் பெற்றுக்கொள்ளத்தக்கதொரு அரசியல் சூழ்நிலை உருவாகி வருகின்றது.
இந்திய தேசம் பிரித்தானிய ஏகாதிபத்திய நிர்வாகத்தினின்றும் விடுபடும் வாய்ப்பு இருப்பினும் இலங்கை வேறு அதிகாரத் தரப்புக்களது கைகளில் சிக்கிக்கொள்ளும் வாய்ப்பு நிலவுகின்றமை கவலைக்கு உரியதொன்று. அந்த வகையில் இலங்கையின் எதிர்காலம் இந்தியாவுடன் நல்லிணக்கத்துடன் அமைய வேண்டுமென்ற நோக்கில் இலங்கை தேசிய சங்கத்தின் பிரதிநிதிகளை இந்தியாவுக்கு அனுப்பி நல்லெண்ண உறவை வளர்த்துக்கொள்ள எண்ணுகின்றோம்.
இவ்விரு நாடுகளும் ஒன்றிணைந்து ஒரு கூட்டு அடிப்படையில் செயற்படுவது குறித்த பேச்சுக்களை முன்னெடுப்பதே இந்தப் பயணத்துக்கான நோக்கம் ஆகிறது. என ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தமது அந்தக் கடிதத்தில் விவரித்திருந்தார்.

**ஜே.ஆரினது சுதந்திரத்துக்கான நேருவின் பதில்**

ஜே.ஆரினது அந்தக் கடிதத்துக்குப் பதிலளிக்கும் வகையில் ஸ்ரீ ஜவகர்லால் நேரு 1940ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதியிட்ட தமது கடிதமொன்றை ஜே.ஆருக்கு அனுப்பி வைத்திருந்தார்.
போரின் பலாபலன் எதுவாக அமையினும் பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் நிர்வாகம் கீழ்த்திசை நாடுகளில் முடிவுக்கு வருவதோடு அது இனி ஒரு போதிலும் தொடரவும் போவதில்லை என்பது எனது தனிப்பட்ட அபிப்பிராயம்.
அந்த வகையில் எதிர்காலத்தில் சின்னஞ்சிறு அரசியல் அரசுக்களது யுகம் அற்றுப் போவதொரு எதிர்காலத்தில் பரந்த ஒன்றிணைந்த கூட்டொன்று உருவாகும் வாய்ப்பும் ஏற்பட்டுள்ளது.
எதிர்கால உலகில் தனியான நாடொன்றாக இயங்கவல்ல வாய்ப்பு இலங்கைக்கு இல்லை எனக் கொண்டு எதிர்காலத்தில் இலங்கை அண்டை நாடுகளுடன் நல்லிணக்கம் பேணிச் செயற்படுவது நன்மை பயக்கும் என்பதால், தங்களது கருத்துடன் நாம் இணங்கிப் பேச்சு மேற்கொள்வதற்குத் தயாராகவுள்ளோம் என ஜே ஆருக்கு அனுப்பி வைத்த அந்தக் கடிதத்தில் ஸ்ரீ ஜவகர்லால் நேரு குறிப்பிட்டிருந்தார்.
'அந்த வகையில் ஜவகர்லால் நேரு தரப்பினர் இந்தியாவுக்குச் சுதந்திரம் பெற்றுக்கொடுக்கப் போராடிய அதேவேளை, ஜே.ஆர். தரப்பினரோ பிரித்தானிய ஏகாதிபத்திய நிர்வாகத்தில் இருந்து விடுதலைபெற்றதன் பின்னர் இந்தியாவை அனுசரித்து அதனது தலைமைத்துவத்தில் தொங்கிக்கொண்டு செயற்படத் திட்டமிட்டமை புலனாகிறது.

**முதன்முதலில் தனிச்சிங்கள அரச கருமமொழி குறித்து பிரஸ்தாபித்தவர் ஜே.ஆரே**

சிங்கள மொழியை அரச கரும மொழியாக்கியதன் காரணமாக சிங்கள-தமிழ் இனவாதம் உருவாககக் காரணமானதாக எஸ்.டபிள்யூ.ஆர்.பண்டாரநாயக்காவைத் தூற்றிக் காட்டும் தரப்பினர்கள் நாட்டில் இனவாதம் உருவாகக் காரணமாக அமைந்தது, பொன்னம்பலம் இராமநாதன் தரப்பினரதும் முக்கியத்துவம் புறக்கணிக்கப்பட்டதால்தான் என்பதையும் சிங்கள மொழியை இலங்கையின் அரச கருமமொழியாக ஆக்க வேண்டுமென்ற யோசனையை முதன் முதலில் முன்வைத்தவர் ஜே.ஆர்.ஜெயவர்த்தனதான் என்பதையும் மறந்துபோய் விட்டுள்ள னர். 1943ஆம் ஆண்டு ஜூன் மாதம் 22ஆம் திகதியன்று அப்போதைய அரச ஆலோசனைச் சபையில் குறித்த பிரேரணையை முன்வைத்து ஜே.ஆர் உரையாற்றியிருந்தார்.
"ஆங்கிலம் அரச கருமமொழியாக இருப்பதால் இந்த நாட்டின் சுதேச இனத்தவர்கள் பல்வேறுபட்ட சிரமங்களை அனுபவித்து வருகின்றனர். பெரும்பாலான மக்கள் தமிழ்மொழியைப் பேசி வரும் பிரதேசங்களில் தமிழ்மொழிக்கு முக்கியத்தும் வழங்கப்பட வேண்டும் என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆயினும் நாட்டின் மூன்றில் இரண்டு மடங்கு பொதுமக்கள் சிங்கள மொழி பேசுபவர்களாகவே உள்ளதால் நாட்டின் அரச கருமமொழி சிங்களமாகவே இருக்க வேண்டும் என்பதே எனது நம்பிக்கையாகும்" என அந்த வேளையில் ஜே.ஆரே இந்த நாட்டின் மொழிப் பிரச்சினைக்கான அடி அத்திபாரத்தை இட்டுவைத்திருந்தமை வரலாறு.
1940ஆம் ஆண்டில் இந்திய அரசியல் தலைவர் நேருவுக்கு இரகசியமாகக் கடிதம் அனுப்பிவைத்த அதே ஜே.ஆர். 1943ஆம் ஆண்டில் இலங்கையில் பெரும்பான்மையினரான சிங்கள மக்களது தாய்மொழியான சிங்களமே நாட்டின் அரசகரும மொழியாக அமைய வேண்டுமென வாதிட்டார். இன்று அதே ஜே.ஆரினது மருமகன் உறவான ரணில் விக்கிரமசிங்கவோ, ஜே.ஆரின் பாணியையே தாமும் பின்பற்றிச் செயற்பட்டு வருகின்றார். தேசியத்துக்கு வக்காலத்து வாங்கும் வகையில் செயற்பட்டுப் பன்னாட்டுத் தத்துவத்தை அவமதிக்கும் விதத்தில் அவர் செயற்படுகிறார். ஆங்கில ஏகாதிபத்தியவாதிகள் இந்த நாட்டின் பாராம்பரியத் தேசியத் தலைமைகளைக் கொன்றழித்து, சந்தர்ப்பவாத தேசியத் தலைவர்களை உருவாக்கி வைத்துள்ளனர். அந்த வகையில் ஆங்கிலேயர்களால் உருவாக்கப்பட்ட இந்த நாட்டின் அரசியல் தடாகத்தில் ரணில் தரப்பினர் இன்று நீந்தி விளையாடு கின்றனர் எனக்கொள்வது மிகையான கருத்தொன்றல்ல.



## ஆசிரியருக்கான கடிதம்

# சிறுவயதிலேயே பழக்குங்கள்...!

சிறுவர் தினம், முதியோர் தினம், ஆசிரியர் தினம் எல்லாமே கும்பலில் கோவிந்தாவகக் கொண்டாடி முடிக்கப்பட்டி ருக்கின்றன. இவற்றைக் கொண்டாடுவதில் காட்டுகின்ற அக்கறை அது சார்ந்த ஒழுக்க, விழுமியங்களில் காட்டப்படுவதில்லை. இதற்கு உதாரணம் ஏதும் வேண்டுமானால், எமது சமூகத்தில் அதைத் தேடியலையத் தேவையில்லை. அவைதான் இன்றைக்கு மலினப்பட்டுப் பல்வேறு வடிவங்களில் சீரழிந்து கிடக்கின்றது சமூகம். இந்தத் தினங்களைக் கொண்டாடுகின்றவர்கள் மற்றும் இந்தத் தினங்கள் பற்றிப் புகழ்பாடுபவர்களுக்கு அவை தெரிவதில்லை. அல்லது தெரிந்தாலும் அது மறுபக்கமாக இருக்கும். இப்படித்தான் அனைத்துத் தினங்களும் கொண்டாடப்பட்டு, கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன. இவற்றுள் முக்கியமானவர்கள் சிறுவர்களே. அவர்களை நல்வழிப்படுத்திக் கொண்டால், முதியோர் தினத்துக்கும் அது பற்றிய பேச்சுக்கும் வாய்ப்பிருக்காது. ஆனால், நாம் இந்தச் சிறுவர்களைச் சரிவரக் கையாள்வதில்லை என்பதே உண்மையானது. உதாரணத்துக்கு நான் நேரில் அனுபவித்த ஒரு சம்பவத்தை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அண்மையில் எனது மகனை அழைத்துக்கொண்டு கச்சேரியடியில் உள்ள சிறுவர் பூங்காவுக்குச் சென்றிருந்தேன். அன்று ஞாயிற்றுக்கிழமை ஆதலால் பூங்காவில் சிறுவர்கள் நிறைந்திருந்தனர். மகிழ்ச்சியாகப் பொழுதைக் கழிக்கலாம் என்று எண்ணிப் பூங்காவுக்குள் நுழைந்த நானும் எனது மகனும் பூங்காவை விட்டு வெளியேறியபோது மனவருத்தத்தையே மீதமாக்கிக் கொண்டோம். சிறுவர்கள் சறுக்கி விளையாடும் பகுதியில் ஒழுங்கு வரிசையில் வந்து சிறுவர்கள் சறுக்கிக் கொண்டிருக்க, அதே வழியூடாக இன்னொரு பகுதிச் சிறுவர்கள் ஏறிக் கொண்டிருக்கிறார்கள். இதை அவர்களின் பெற்றோர்களால் தெளிவாகவே பார்க்க முடிகிறது. அவர்கள் பார்த்துக் கொண்டே நிற்கிறார்கள். அது அவர்களுக்குப் பெரிய விடயமாகப் படவில்லை. பின்னாளில் அதே செய்கையை வளர்ந்த அந்த மனிதர்கள் செய்யும்போது ஒப்பாரி வைப்பதில் என்ன பயன்?
"சின்ன ஆக்கள் தானே அதுகளுக்கு என்ன தெரியும்?" என்ற சமாளிப்பு வார்த்தையை உதிர்த்துச் செல்லும் அநேக பெற்றோரையும் இவ்விடத்தில் பார்க்கமுடிந்தது. சிறியவர்கள்தான், அந்தச் சிறியவர்களிடத்தில் மற்றையவர்களுக்குப் பாதிப்புக் கொடுக்கக்கூடிய செயலைச் செய்கிற எண்ணம் அவர்களுக்குத் தெரியாமலேயே ஏற்படுகின்றதாயின், ஏன் பாதிப்பற்று வாழ முடிவதான அதற்கு நேர் எதிரான எண்ணம் அவர்களுக்குத் தெரியாமலேயே ஏற்படுவதில்லை? அத்தோடு நிறைய நண்பர்கள் இருக்கும் இடத்தில் ஓர் ஒழுங்கு முறைப்படி அனைவரும் விளையாடி மகிழ்கின்ற மனப்பாங்கும் சிறுவர்கள் பலர் மத்தியில் இருப்பதாகத் தெரியவில்லை. சமூகத்தில் பெரியவர்கள் எப்படிப்பட்ட மனநிலையில் இருக்கிறார்களோ அதே மனநிலையில் தான் சிறுவர்களும் இருக்கிறார்கள். இங்கு சிறுவர்களை அன்றிப் பொற்றோர்களைத் திருத்த வேண்டிய பணி வந்து விடுகிறது. 'அம்மா கணக்கு'ப் படத்தில் பிள்ளைக்குப் படிப்பிப்பதற்காக அமலாபால் முதலில் படிக்கவேண்டும் என்று உணர்த்தப்பட்டதுபோலப் பிள்ளைகளுக்கு நல்ல பழக்கங்கள் பழக்க வேண்டுமாயின் பெற்றோர்கள் முதலில் நல்ல பழக்கத்தைப் பழகவேண்டியது அவசியம்.

*தயாசேகர், தனங்களப்பு.*




# ஹெய்ட்டி நிலநடுக்கத்தில் 12பேர் சாவு

போர்ட் அயூ பிறின்ஸ்.ஒக்.9
கரீபியன் பகுதியில் அமைந்துள்ள ஹெய்ட்டித் தீவில் ஏற்பட்ட நில நடுக்கம் காரணமாக 12 பேர் சாவடைந்துள்ளனர். 188 பேர் காயமடைந்துள்ளனர். ஹெய்ட்டியில் சனிக்கிழமை இரவு ரிக்டர் அளவுகோலில் 5.9 ஆக நிலநடுக்கம் ஏற்பட்டிருந்தது. மீட்புப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. "உயிரிழந்தவர்களின் குடும்பத்துக்கு எனது வருத்தத்தை தெரிவித்து கொள்கிறேன். வடக்குப் பகுதியில் கடும் சேதம் ஏற்பட்டுள்ளது. மீட்புப் பணிகள் விரைவாக நடந்து வருகின்றன'' என்று ஹெய்ட்டியின் தலைமை அமைச்சர் ஜின் ஹென்ரி இந்த நிலநடுக்கம் குறித்துத் தனது கீச்சகப் பக்கத்தில் பதிவிட்டுள்ளார். பல்வேறு பொருளாதார நெருக்கடிகளைச் சந்தித்து வரும் ஹெய்ட்டி அடிக்கடி இயற்கை இடர்களால் பாதிக்கப்படுகிறது. கடந்த 2010ஆம் ஆண்டு ஏற்பட்ட நிலநடுக்கத்தில் 2 இலட்சத்துக்கும் அதிகமானவர்கள் சாவடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## 1500 ஆண்டுகள் பழமையான வாள்! அதைக் கண்டுபிடித்தது 8 வயதுச்சிறுமி!

ஸ்டொக்ஹோம்.ஒக்.9
சுவீடனில் ஏரி ஒன்றில் நீந்திக்கொண்டிருந்த 8வயதுச் சிறுமி, பல ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு முந்தைய



காலகட்டத்து வாள் ஒன்றைக் கண்டுபிடித்துள்ளார். விடோஸ்டர்ன் ஏரியில், சகா வனசெக் என்ற சிறுமியே இதைக் கண்டுபிடித்திருக்கிறார். ஆய்வின் பின் இந்த வாள் ஆயிரம் ஆண்டுகள் பழமையானது என்று கூறப்பட்டது. ஆனால், உள்ளூர் அருங்காட்சியத்தில் இருக்கும் நிபுணர்கள், இது 1500 ஆண்டுகள் பழமையானதாக இருக்கும் என நம்புகிறார்கள். வறட்சியின் காரணமாக, ஏரியில் தண்ணீரின் அளவு மிகக்குறைவாக இருந்ததால் இந்த வாளைச் சிறுமி கண்டு பிடித்திருப்பதாகக் குறிப்பிட்டு ள்ளார்கள். வாள் கண்டுபிடி க்கப்பட்ட பகுதியில் மேலும் ஆய்வுகளைச் செய்வதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

## போர்த்துக்கலில் காட்டுத் தீ தீயணைக்கும் பணி தீவிரம்

லிஸ்பொன்.ஒக்.9
போர்த்துக்கல் நாட்டின் சின்ட்ரா பகுதியில் காட்டுத் தீ பரவி வருகிறது. அதைக் கட்டுப்படுத்துவதற்குச் சுமார் 700 தீயணைப்புப் பணியாளர்கள் கடுமையாகப் போராடி வருகின்றனர். போர்த்துக்கல் நாட்டின் தலைநகர் லிஸ்பன் அருகில் உள்ள சின்ட்ரா மலைப்பகுதியில் நேற்று முன்தினம் இரவு திடீரெனத் தீப்பிடித்தி ருக்கிறது. சின்ட்ராகாஸ்காயிஸ் இயற்கைப் பூங்காவில் பிடித்த தீ, காற்றின் வேகம் காரணமாக அருகில் உள்ள பகுதிகளுக்கும் வேகமாகப் பரவியிருக்கிறது. இதுபற்றி வனத்துறை மற்றும் தீயணைப்புத்துறைக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து வனத்துறை அதிகாரிகள் மற்றும் தீயணைப்புப் படையினர் ஏராளமான தீயணைப்பு வாகனங்களுடன் சம்பவ இடத்துக்கு வந்து தீயைக் கட்டுப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டனர். முதல் சில மணி நேரங்கள் மலைப்பகுதிக்குச் செல்ல முடியாத அளவுக்கு நெருப்பின்தாக்கம் இருந்தது. பின்னர் காற்றின் வேகம் தணிந்த நிலையில், சுமார் 700 வீரர்கள் தீயணைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். உலங்கு வானூர்திகள் மூலமாகவும் தண்ணீர் பீய்ச்சியடித்து மேலும் தீ பரவாமல் தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இந்தக் காட்டுத் தீ காரணமக மலையடிவாரங்களில் வசிக்கும் சுமார் 350 பேர் வெளியேற்றப் பட்டுள்ளனர்.

இதேபோல் தீப்பிடித்த பகுதியில் மரங்கள் அடர்ந்த காட்டில் வசித்து வந்த 47 பேர் வீடுகளை விட்டு வெளியேற்றப்பட்டுள்ளனர். போர்த்துக்கல் நாட்டில் ஒவ்வொரு ஆண்டும் கோடை காலத்தில் காட்டுத்தீ ஏற்பட்டுப் பெருமளவில் சேதம் ஏற்படுவது குறிப்பிடத்தக்கது.



# அமெ. -வடகொரி இரண்டாம் சுற்

## ஆயுதங்களைப் பார்

பியோங்யாங்.ஒக்.9
அமெரிக்காவின் அயலுறவுத்துறை அமைச்சர் மைக் பாம்பி வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன் இடையே சந்திப்பு நை அடுத்து, ட்ரம்ப் -கிம் இடையான 2ஆம் கட்டப் பேச்சுக்கள் விை பெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



ஜப்பான், வடகொரியா, சீனா உள்ளிட்ட தெற்காசிய நாடுகளுக்கு அமெரிக்காவின் அயலுறவுத்துறை அமைச்சர் மைக் பாம்பியோ சுற்றுப்பயணத்தை மேற்கொண்டு வருகிறார். வடகொரியா-அமெரிக்கா இடையில் சிங்கப்பூரில் செய்யப்பட்ட அணு ஆயுத ஒழிப்பு ஒப்பந்தத்தை முழுமையாக நிறைவேற்றுவதற்
ரியா அதிபர் கிம் ஜோங் உ
கோருவது என்பதே அ
ணத்தின் முக்கிய நோ
கருதப்பட்டது. இதையடு
கொரியாவின் தலைநகர்
யாங்கில் கிம் ஜோங் உ
பாம்ப்பியோ இடையே
திப்பு நடைபெற்றது.
சுமார் 2மணி நேரம் வ
பெற்ற இந்தச் சந்திப்புத் தெ
முழுமையான தகவல்க
டப்படவில்லை எனினு
சந்திப்பு இனிமையான
அமைந்ததாக மைக் பா
தனது கீச்சகப் ப
குறிப்பிட்டுள்ளார். மேலும்
ரில் அமெரிக்க அதிபர் ட்
னான சந்திப்பின்போது ஏற்படுத்தப்
ஆயுத ஒழிப்பு ஒப்பந்தத்தை முழுமை
வேற்றுவதற்கான வழிமுறைகள் செ
வருவதாகவும் அமெரிக்க அதிபர் ட்ரம்
வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன் ஆ

## ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் மாகாணங்களுக்கான போக்குவர

காபூல்.ஒக்.9
ஆப்கானிஸ்தானின் காபூல் நகரத்துக்குத் தென்மேற்குப் பகுதியில் உள்ள தேசிய நெடுஞ்சாலையின் முதன்மைப் பாலம் ஒன்றைத் தலிபான் ஆயுததாரிகள்வெடிவைத்துத்தகர்த்துள்ளனர். இதனால் ஆப்கானிஸ்தானின் தலைநகரத்துக்கும் அங்குள்ள மூன்றுமாகாணங்களுக்குமான வீதிப் போக்குவரத்துத் துண்டிக்கப்ப ட்டுள்ள தாக ஆப்கானிஸ்தான் செய்திகள் தெரிவிக்கின்றன. ஆப்கானிஸ்தானில் அரச படைகளுக்கும் தலிபான்களுக்கும் இடையே உள்நாட்டுப் போர் நடைபெற்று வருகிறது.



கடந்த செப்டம்பர் மாதத்தில் 22 தலிபான் ஆயுததாரிகள் சுட்டுக் கொ ல்லப்பட்டிருந்தனர். இந்த நிலையில் சில நாள்களுக்கு முன் இந்த இரண்டு தரப்புகளுக்கும் இடையே மோதர் தொடங்கியிருந்தது. அதில் தலிபான்கள் மெய்டன் வோர்டாக் மாகாணத்தில் உள்ள ஒரு மாவட்டத்தின் தலைநகரைக் கைப்பற்றுவதற்கு முயற்சி செய்திருந்தனர். அதை அரச படை முறியடித்திருந்தது. அங்கு இன்னும் துப்பாக்கிச் சண்டை தொடர்ந்து வருகிறது. இதில் இரண்டு தரப்புகளிலும் உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன. இந்தத் தாக்குதலியேயே காபூல் நகரிலிருந்து காஸ்னி, சாபூல் மற்றும் காந்தஹார் மாகாணங்களை இணைக்கும் பாலம் குண்டுவைத்து தகர்க்கப்பட்டிருக்கிறது. இதனாலேயே குறித்த மாகாணங்களுக்கான போக்குவரத்துக்கள் தடைப்பட்டிருக்கின்றன.

**பின்னணி**
ஆப்கானின் இந்த உள்நாட்டுப் போரில் அரசபடைகளுக்கு ஆதரவாக அமெரிக்க கூட்டுப் படை அங்கு முகாமிட்டுள்ளது. தலிபான் அமைப்பைச் சேர்ந்த தற்கொலைப் படைத் ஆயுத
தாரி
தை
நிரப்
டியை
வரி
உயி
அங்
அதிக
சிலை
பான்
சும்.
பேச்
டத்த

# ரியா அணு ஆயுத முரண்
# ற்றுப் பேச்சுக்கு ஏற்பாடு

## ார்வையிடுவதற்கு அழைப்பு

ம்பியோ மற்றும்
நடைபெற்றதை
விரைவில் நடை


வதற்கு வடகொ
ஜாங் உன்னைக்
தே அவரது பய
நோக்கமாகக்
தையடுத்து வட
லநகர் பியோங்
ங் உன்-மைக்
டயேயான சந்

ரம் வரை நடை
யுத் தொடர்பான
வல்கள் வெளியி
னினும், இந்தச்
யான ஒன்றாக
க் பாம்ப்பியோ
பக்கத்தில்
மலும், சிங்கப்பூ
திபர் ட்ரம்ப் உட
த்தப்பட்ட அணு
மையாக நிறை
ள் செய்யப்பட்டு
ர் ட்ரம்ப் மற்றும்
ன் ஆகியோரது



அடுத்தகட்டச் சந்திப்பு விரைவில் ஏற்பாடு செய்யப்படும் எனவும் கூறியுள்ளார். அத்தோடு, எங்கள் அணு ஆயுதத் தளங்களை எவரும் பார்வை இடலாம் என்று கிம் ஜோங் உன் குறிப்பிட்டதாகவும் அவர் தெரிவித்திருக்கிறார்.

வடகொரிய அதிபர் அணு ஆயுத மற்றும் ஏவுகணைத் தயாரிப்புகளைக் கைவிடுவதற்கு ஒப்புக் கெண்ட நிலையில் அண்மையில் வடகொரியாவின் இராணுவ அணிவகுப்பு இடம் பெற்றிருந்தது. அந்த அணிவகுப்பில் ஏவுகணைகள் இடம் பெற்றிருக்கவில்லை. அது அமெரிக்காவுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்திருந்தது. ஆயினும் அதன் பின்னர் வடகொரியா தான் கொடுத்த வாக்கைக் காப்பாற்றவில்லை என அமெரிக்கா குற்றம் சாட்டி வந்தது. இந்த நிலையில்தான் தங்கள் அணு ஆயுதத் தளங்களைத் தாராளமாக நீங்கள் வந்து பார்வை இடலாம் என வடகொரிய அதிபர் அமொரிக்காவுக்கு அழைப்பு விடுத்திருக்கிறார்



## இந்தோனேசியா சுனாமி: 5ஆயிரம் பேர் மாயம் ஆயிரத்து763 பேர் சாவு!


ஜகார்த்தா.ஒக்.9

இந்தோனேசியாவின் சுலாவேசித் தீவில் கடந்த மாதம் 29ஆம் திகதி பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டிருந்தது. அதைத் தொடர்ந்து அங்குள்ள கடற்கரை நகரமான பலுவை. சுனாமி தாக்கியது. இதனால் அங்கிருந்த பெரும்பாலான வீடுகள், கடலோரத்தில் இருந்த பெரிய அளவிலான குடியிருப்புகள், கட்டடங்கள், உணவகங்கள், விடுதிகள், வணிக வளாகங்கள் என அனைத்தும் இடிந்து தரை மட்டமாகியிருந்தன.

அந்த நகரில் வீடுகளை இழந்த மக்கள் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். சுனாமித் தாக்குதலால் பாதிக்கப்பட்ட பலு நகரில் நடைபெறும் மீட்புப் பணியில் இராணுவத்தினரும், பொலிஸாரும் ஈடுபட்டுள்ளனர். பலு நகரில் பலரோ மற்றும் பெடோபோ பகுதிகளில் காணாமல் போனவர்களில் ஆயிரம் பேர் அங்கு 3மீற்றர் ஆழம் வரையில் பரவியுள்ள சேற்றில் புதைந்து இறந்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது. அவர்களில் 74 பேரின் உடல்கள் மீட்கப்பட்டு ள்ளன. இதைத்தொடர்ந்து இந்தோனேசியாவில் சுனாமியில் உயிரிழந்தவர்கள் குறித்து புதிய தகவல்கள் வெளியாகியுள்ளன.

நேற்றைய நிலவரப்படி ஆயிரத்து 763 உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. சுமார் 5ஆயிரம் பேர் காணாமல் போயுள்ளதாக இந்தோனேசியப் பேரிடர் மீட்புத்துறை வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் சுனாமி தாக்கியதால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை இன்னமும் வெகுவாக அதிகரிக்கும் என அஞ்சப்படுகிறது

## ள் தாக்குதல்
## ரத்துத் தடை!



தாரி ஒருவர் ஆப்கானிஸ்தானின்
தலைநகர் காபூலில் வெடிகுண்டுகள்
நிரப்பிய நோயாளர் காவுகை வண்
டியை வெடிக்கச் செய்ததில் கடந்த ஜன
வரி மாதம் 100க்கும் மேற்பட்டோர்
உயிரிழந்திருந்தனர். தொடர்ந்து
அங்கு தலிபான்களின் தாக்குதல்கள்
அதிகரித்து வருகின்றன. இந்தப் பிரச்
சினைக்குத் தீர்வு காண்பதற்குத் தலி
பான்களுடன் ஆப்கானிஸ்தான் அர
சும், அமெரிக்க அரசும் அமைதிப்
பேச்சுக்களை நடத்தி வருவது குறிப்பி
டத்தக்கது.



## ஈரானில் பலத்த மழை; தொடர்ந்து வெள்ளம் 7 பேர் சாவு


தெஹ்ரான்.ஒக்.9

ஈரானில் பெய்த பலத்த மழையைத் தொடர்ந்து ஏற்பட்ட வெள்ளத்தால் 7 பேர் சாவடைந்திருக்கின்றனர். ஈரானில் கடந்த 5ஆம் திகதியில் இருந்து கடும் மழை பெய்து வருகிறது. மஜந்தரன், கிலான், கோலஸ்டான் மாகாணங்களில் இந்த மழை, வெள்ளத்தால் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது. வீதிகள், பாலங்கள், வீடுகள் பலத்த சேதம் அடைந்துள்ளன. வெள்ளத்தில் மகிழுந்துகள் உள்ளிட்ட வாகனங்கள் அடித்துச்செல்லப்பட்டிருக்கின்றன. மின் விநியோகம் தடைபட்டுள்ளது. மக்களின் இயல்பு வாழ்க்கை முடங்கிப்போயுள்ளது. இந்த மழை, வெள்ளம் தொடர்பான இடர்களால் 7பேர் சாவடைந்துள்ளனர். கடந்த 20 ஆண்டுகளில் பெய்யாத அளவுக்குக் கடும் மழை பெய்து வருவதாக அங்கு இருந்து வரும் தகவல்கள் கூறு கின்றன.

## நியூசிலாந்திலும் நிலநடுக்கம்

வெலிங்டன்.ஒக்.9

நியூசிலாந்தின் கெர்மாடெக் தீவில் சுமார் 5.5 ரிக்டர் அளவில் திடீரென நிலநடுக்கம் ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேத விவரங்கள் தொடர்பான தகவல்கள் வெளியாகவில்லை. ஆனால் நிலநடுக்கம் ஏற்படுத்திய அதிர்வை உணர்ந்ததாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். இதுபற்றிப் பன்னாட்டு ஊடகங்களும் செய்தி வெளியிட்டுள்ளன.





# ரசிகர்களுக்கு நன்றி தெரிவித்த ரித்விகா

பிக்பாஸ்-2 அண்மையில் முடிவடைந்தது. இந்த நிகழ்ச்சியை நடிகர் கமல்ஹாசன் தொகுத்து வழங்கியிருந்தார். இதில், ஐஸ்வர்யா, ரித்விகா, ஜனனி, விஜயலட்சுமி ஆகிய நான்குபேரும் இறுதிசுற்றுக்கு முன்னேறினர். ஜனனிக்கு குறைவான வாக்குகள் கிடைத்ததால் போட்டியில் இருந்து வெளியேற்றப்பட்டார். தொடர்ந்து விஜயலட்சுமியும் போட்டியில் இருந்து வெளியேற ஐஸ்வர்யாவும், ரித்விகாவும் இறுதிச் சுற்றில் மோதினார்கள்.

பரபரப்பாக நடைபெற்ற இந்த நிகழ்ச்சியின் பிக் பாஸ் பட்டத்தை ரித்விகா தட்டிச்சென்றார். இந்தநிலையில் ஒருவார இடைவேளைக்குப் பிறகு ரித்விகா, தனது ரசிகர்களுக்கு நன்றி தெரிவித்துக் காணொலி ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில்,

"எல்லாருக்கும் வணக்கம். நான் பிக்பாஸ் வீட்டுக்குள் இருக்கும்போது, நிறையப் பேர் எனக்கு நிறைய ஆதரவு அளித்துள்ளார்கள். நான் வெளியே வந்த பிறகுதான் தெரிந்தது. 'ரித்விகா பேன்ஸ்', 'ரித்விகா ஆர்மி' என நிறைய கணக்குகளைத் தொடங்கி எனக்கு ஆதரவு வழங்கியிருக்கிறீர்கள். இந்த ஒரு வாரம் நான் நேரம் எடுத்துக் கொண்டேன். பிக்பாஸ் வீட்டில் இருந்து வெளியே வந்தவுடன் கொஞ்ச நேரம் தேவைப்பட்டது. அதனால் தான் இந்தக் காணொலியைத் தாமதமாக வெளியிடுகிறேன். அனைவருக்கும் நன்றி" இவ்வாறு ரித்விகா கூறினார்.

## நாளை

**10.10.2018**

புதன்கிழமை

**புரட்டாதி 24**

திதி: பிரதமை மு.ப. 8.35 வரை
நட்சத்திரம்: சித்திரை பி.ப. 12.59
சுபநேரம்: 4.32 – 6.02 வரை
ராகுகாலம்: 12.02– 1.32 வரை



வெளியில் எப்படி வேண்டுமானாலும் எம்மைக் காட்டிக் கொள்ளலாம் . ஆனால் உள்ளுக்குள்ளே எம்முடைய சின்னச் சின்ன கனவுகளை, ஆசைகளைக் கூட நிறைவேற்ற முடியாத அக வறுமையோடுதான் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

**விஷம்**
நம் தேவைக்கு அதிகமாக இருப்பது எதுவோ அதுதான் விஷம். அது அதிகாரமாக, செல்வமாக இருக்கலாம் அல்லது அன்பு,வெறுப்பு ,பசியாகக் கூட இருக்கலாம் .

**பயம்**
நிச்சயமின்மையை ஏற்றுக்கொள்ளாமல் இருப்பது பயம். நிச்சயமின்மையை ஏற்றுக்கொள்ளும்போது அது சாகசம் ஆகிவிடும்

**பொறாமை**
மற்றவர்களிடம் இருக்கும் நல்லவற்றை ஏற்றுக்கொள்ளாமல் இருப்பதே பொறாமை. அப்படி ஏற்றுக்கொள்ளும் போது அவர் உனக்கு உத்வேகத்தைத் தரக்கூடியவராக மாறிவிடுகிறார்

**கோபம்**
நம் கட்டுப்பாட்டை மீறிச் செல்வதை ஏற்றுக்கொள்ளாமல் இருப்பது கோபம். அப்படி ஏற்றுக்கொள்ளும்போது அது சகிப்புத்தன்மை ஆகிவிடுகிறது

**வெறுப்பு**
இன்னொரு மனிதனை ஏற்றுக் கொள்ளாமல் நிராகரிப்பது வெறுப்பு. நிபந்தனைகள் இன்றி ஏற்றுக்கொள்ளும்போது அது அன்பாகிவிடுகிறது.

facebook

Karthik
October 5 at 5:26 PM

பள்ளிக்காலங்களில் இருபாலர் பள்ளியில் படித்திருக்கவேண்டுமா?
ஒரு காதலையேனும் செய்திருக்க வேண்டுமா?
அந்தக்காதல் பிரிந்திருக்கவேண்டுமா? அப்போதுதான் இந்தப் படம் அதன் தாக்கத்தை நமக்குக் கடத்துமா என்றால். இல்லை. ஏன் காதலைப்பற்றித் தெரிந்திருக்கவேண்டிய அவசியம் கூட இல்லை.
பேரருவியின் அருகில் செல்லச்செல்ல அதன் சாரலே உங்களை நனைத்த அனுபவம் உண்டா? போதும்.
அடைமழைக்கு முந்தைய பூமழையில் ஸ்பரிசித்தது உண்டா? போதும்.
எங்கோ இருவர் ஆரத்தழுவி அழுதல் கண்டு புன்னகைத்து நகர்ந்தது உண்டா? போதும் இந்தப்படம் உங்களைக் கவரும்.




# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:** வேண்டாத நபரால் சிரமத்திற்கு ஆளாகலாம். மன அமைதியை பாதுகாக்கவும். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும்.

**இடபம்:** உங்கள் செயலில் தடுமாற்றம் ஏற்படலாம். தொழில், வியாபாரம் செழிக்க அக்கறையுடன் செயல்படுவது நல்லது. மிதமான இலாபம் கிடைக்கும்.

**மிதுனம்:** உங்கள் மனதில் உற்சாகம் மேலோங்கும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி அதிகரிக்கும். உபரி வருமானத்தால் சேமிப்பு உயரும்.

**கடகம்:** சூழ்நிலை அறிந்து பேசுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் கூடுதல் உழைப்பு தேவைப்படும். இலாபம் சுமாராக இருக்கும்.

**சிங்கம்:** திட்டமிட்ட செயல் நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் இருந்த மறைமுகப்போட்டி மறையும். தாராள பணவரவால் சேமிப்புக் கூடும்.

**கன்னி:** எதிர்பார்ப்பு நிறைவேற தாமதமாகலாம். தொழில், வியாபாரத்தில் நிலுவைப் பணி நிறைவேற்றுவது அவசியம். இலாபம் சுமார்.

**துலாம்:** குடும்பத்தினர் உங்களின் கருத்துக்கு மதிப்பளிப்பர். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பெற தேவையான மாற்றம் செய்வீர்கள். எதிர்பார்த்த லாபம் கிடைக்கும்.

**விருச்சிகம்:** நண்பரிடம் பொழுதுபோக்காக் பேசுவீர்கள். மனதில் இருந்த குழப்பம் விலகும். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்திப்பணியில் ஈடுபடுவீர்கள்.

**தனுசு:** ஒருமுகத் தன்மையுடன் பணியில் மட்டும் ஈடுபடவும். பெண்கள் தேவையற்ற விவாதங்களில் ஈடுபட வேண்டாம். மிதமான பணவரவு கிடைக்கும்.

**மகரம்:** சிலர் சுயலாபத்திற்காக உதவ முன்வருவர். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பெற கூடுதல் உழைப்பு தேவைப்படும். அளவான பணவரவு கிடைக்கும்.

**கும்பம்:** சந்தோஷ நிகழ்வை நண்பரிடம் சொல்லி மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிப் பணி எளிதாக நிறைவேறும். இலாபம் அதிகரிக்கும்.

**மீனம்:** பலரும் உங்களிடம் அன்பு பாராட்டுவர். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பெறப் புதிய வாய்ப்பு வரும். பண வரவும், நன்மையும் அதிகரிக்கும்.

வளைந்த ஆணியை விட்டு விடுகிறார்கள்,,,

நேராக நிற்கும் ஆணியை தான் அடி அடி என அடித்து துவம்சம் செய்கிறார்கள் ,,,,

அதுபோல் தான் ,,,,

உண்மையாக இருப்பவர்களின் நிலையும் இந்த உலகில் .

# சுடோக்கு

எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | | | 4 |
| | | | 7 | 3 | | | | |
| | 2 | 9 | | | 8 | 7 | | 5 |
| | | 2 | | | | 8 | 6 | 7 |
| 8 | | | | | | | | 9 |
| 7 | 6 | 1 | | | | 5 | | |
| 2 | | 3 | 4 | | | 1 | 7 | |
| | | | | 1 | 3 | | | |
| 6 | | | | | | | | 8 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 1 | 2 | 6 | 4 | 7 | 9 | 3 | 8 |
| 3 | 6 | 7 | 8 | 9 | 1 | 4 | 5 | 2 |
| 4 | 8 | 9 | 5 | 2 | 3 | 7 | 1 | 6 |
| 9 | 5 | 4 | 7 | 1 | 8 | 2 | 6 | 3 |
| 8 | 3 | 1 | 2 | 6 | 4 | 5 | 9 | 7 |
| 2 | 7 | 6 | 9 | 3 | 5 | 1 | 8 | 4 |
| 1 | 9 | 3 | 4 | 7 | 6 | 8 | 2 | 5 |
| 6 | 4 | 5 | 1 | 8 | 2 | 3 | 7 | 9 |
| 7 | 2 | 8 | 3 | 5 | 9 | 6 | 4 | 1 |

நேற்றைய விடை




# நடப்பதும் நடக்காததும்

எண்ணியது நடக்காதபோது நாம் ஏமாற்றத்துக்கு உள்ளாகிறோம். வாழ்க்கை என்பது ஒரே போக்கில் எப்போதும் அமைவதில்லை. நாம் எதிர்பார்க்கின்ற சில விடயங்கள் நடப்பதும், வேறு சில விடயங்கள் நடக்காமல் போவதும் இயற்கையே.

எண்ணியது நடக்கும்போது மகிழ்ச்சி அடைகிறோம். நடவாதபோது கவலையடைகிறோம். அதவரையில் சரி அதற்காக நடக்காததைப் பற்றியே எண்ணி வருத்தப்பட்டுக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை. ஏனெனில் அது நேரத்தை வீணாக்குமேயன்றி எந்தவிதமான பயனையும் எமக்கு அளிக்கப்போவதில்லை.

சிலருக்கு ஒரு குணமுண்டு. நடந்து போனவற்றை எண்ணியே கவலைப்பட்டுக் கொண்டு இருப்பார்கள். நடக்கப் போவதைப் பற்றிச் சிந்திக்கவே மாட்டார்கள். இதுதவறானது.

வாழ்க்கை முன்னேற்றத்தைத் தடை செய்யும் படிக்கல். கடந்த காலம் மீண்டும் நிகழப் போவதில்லை. எதிர்காலம் மட்டுமே எமக்குச் சொந்தமானது. அதனால் கடந்த கால அனுபவங்களிலிருந்து பாடம் கற்று எதிர்காலத்தைத் திட்டமிடலாமே தவிர. காலத்தைக் கைவிட்டு விடக் கூடாது. ஆராய்ந்து பார்த்தால் எம்முடைய மனதை நாம் பலவீனமாக வைத்துக் கொண்டிருப்பதால் கடந்த கால அனுபவங்கள் எம்மைப் பயமுறுத்தத் தொடங்குகின்றன. எமது எதிர்காலமும் கடந்த காலம் போல ஆகிவிடுமோ? என்ற அச்சத்தில் நாம் செயலிழந்து போகிறோம். இது தேவைதானா என்று நாம் சிந்தித்துப் பார்ப்பது அவசியம்.





# மகாத்மா காந்தி












உண்மை, நேர்மை, எளிமையின் அடையாளம் காந்தி. நீதிமன்றத்தில் வழக்காடுவதற்கு பயந்தவர். பின்னர் ஆங்கிலேயர்களையே அச்சமடைய வைத்தார். சாதாரண மனிதராக இருந்தவர், தனது போராட்டங்களாலும் கொள்கைகளாலும் மகாத்மாவாக மாறினார். தேசத்தின் தந்தை என்று அழைக்கப்பட்டாலும், ரூபாய்த் தாள்களில் இடம்பெற்றிருந்தாலும், இறுதிவரை எந்த அரச பதவியையும் வகிக்காதவர். இருந்தும் உலகம் முழுக்கப் பிரபலமானவர். நெல்சன் மண்டேலா, மார்டின் லூதர் கிங், பராக் ஒபாமா என்று பலரும் அவருடைய அகிம்சைக் கொள்கையால் உந்தப்பட்டவர்கள்.

"நான் இங்கிலாந்து மக்களை வெறுக்கவில்லை. இந்தியாவை அடிமைப்படுத்திய இங்கிலாந்து அரசைத் தான் எதிர்க்கிறேன்" என்றார். அவர் எதிர்த்த அதே இங்கிலாந்து பின்னர் காந்திக்குத் தபால் தலை வெளியிட்டு மரியாதை செலுத்தியது. இந்தியா தவிர்த்து. இதுவரை 100 நாடுகளிலிருந்து 300 தபால்தலைகள் காந்திக்காக வெளியிடப்பட்டிருக்கின்றன. வன்முறைகள் அற்ற, அமைதியான உலகம் அமைய வேண்டும் என்று விரும்பும் உலக மக்களின் நாயகனாக இன்றும் என்றும் இருப்பார் காந்தி.



# விடுகதைகள்

1. முழு உலகமும் சுற்றி வரும். ஆனால் ஒரு மூலையிலேயே இருக்கும் அது என்ன?

2. ஆகாரமாக எதைக் கொடுத்தாலும் சாப்பிடுவேன், ஆனால் நீரைக் குடிக்கக் கொடுத்தால் இறந்து விடுவேன், நான் யார்?

3. கண்டு பிடித்தவனும் வைத்திருக்கவில்லை, வாங்கியவனும் பயன்படுத்தவில்லை, பயன்படுத்தியவனுக்கு அதைப் பற்றி எதுவும் தெரியாது அது என்ன?

4. ஒரு குற்றத்தைச் செய்ய முயற்சித்தால் தண்டனை உண்டு. ஆனால் குற்றத்தைச் செய்தால் தண்டிக்க முடியாது. அந்தக் குற்றம் என்ன?

5. முட்டையிடும். குஞ்சு பொரிக்காது. கூட்டில் குடியிருக்கும். கூடு கட்டத் தெரியாது. குரலில் இனிமையுண்டு. சங்கீதம் தெரியாது அது என்ன?

6. வெளியே உள்ளதை எறிந்து உள்ளே உள்ளதைச் சமைத்தான். பின் வெளியே உள்ளதைச் சாப்பிட்டு விட்டு உள்ளே உள்ளதை எறிந்தான் அது என்ன?

7. மேலிலும் துவாரம், கீழிமும் துவாரம், வலதிலும் துவாரம், இடதிலும் துவாரம். உள்ளிலும் துவாரம் வெளியிலும் துவாரம் இருந்தும் நீரை என்னுள் சேமித்து வைப்பேன். நான் யார்?

8. சுற்றும்போது மட்டும் சுகம் தரும். அது என்ன?

9. செய்தி வரும் பின்னே. மணியோசை வரும் முன்னே. அது என்ன?


10. கல்லுக்கும் முள்ளுக்கும் அஞ்சாதவன், நீரைக் கண்டு பதைபதைக்கிறான். அது என்ன?

## விடைகள்

1. முத்திரை
2. நெருப்பு
3. சவப்பெட்டி
4. உயிர்மாய்ப்பு
5. குயில்
6. சோளம்
7. பஞ்சு
8. மின்விசிறி
9. தொலைபேசி
10. நெருப்பு



வர்ணம் தீட்டுவோம்




1928ஆம் ஆண்டு நவம்பர் மாதம், வால்ட் டிஸ்னி நிறுவனம் வெளியிட்ட 'ஸ்டீம்போட் வில்லி' என்கிற குறும்படம் மூலம் மக்களின் பார்வைக்கு முதன்முதலில் வந்தது மிக்கி.மவுஸ்.

உலகம் முழுவதும் ஏராளமான மக்களின் உள்ளங்களைக் கொள்ளைகொண்ட மிக்கி மவுஸின் வயது 89.

அந்தக் காலத்துத் தாத்தாக்களும் பாட்டிகளும் ரசித்த மிக்கி மவுஸை, இன்று நாமும் ரசிக்கிறோம். நாளை அடுத்த தலைமுறையும் ரசிக்கும்,





# தமிழ் படிப்போம்

தமிழ் படிக்கணும் தமிழ் படிக்கணும் தம்பி தங்கைகளே
எங்கள் தாய் மொழியை மறவாமல் தமிழ் படிப்போம்

கடல் கடந்து வந்து நாங்கள் தாய்மொழி மறந்து
தமிழன் என்று சொல்லி வாழ்தல் நன்றா– நீ சொல்

பண்டைத் தமிழர் போற்றி வளர்த்த எம் தாய்மொழியை
கற்றுணர்ந்து கவலையின்றி நாம் வாழுவோம்



# குருப்பெயர்ச்சி 2018 பலன்கள்

4.10.2018 – 28.10.2019

குருபகவான்தெய்வீகஅறிவுக்கும், வேதாந்தஞானத்துக்கும், செல்வ வளத்துக்கும் பொருள் சேமிப்புக்கும் காரணகர்த்தா. அந்த வகையிலே குருப்பெயர்ச்சி இடம்பெற்றுள்ளது. வக்ரநிவர்த்திஅடைகின்றகுருபகவான்துலாம்ராசியில்இருந்து விருச்சிக ராசிக்கு இடம்பெயர்கிறார். மேடம் முதல் மீனம் வரை 12 ராசிகளுக்கு மான குருப்பெயர்ச்சி பலன்களை இந்தப் பகுதியில் நோக்குவோம்.




எந்த ஊருக்குச் சென்றாலும் சொந்த ஊரை மறவாத நீங்கள் அவ்வப்போது கடந்த கால நினைவுகளில் மூழ்குவீர்கள். வாழ்க்கையின் உச்சக்கட்டத்தைஎட்டிய பிறகும் கூட விழுந்து கிடந்ததை மறக்காதவர்களே! தோல்வி என்பது வெற்றிக்கான ஏணிப்படி தான் என்பதை உணர்ந்த நீங்கள், கடின உழைப்பாளிகள். இதுவரையில் உங்கள் ராசிக்குள் ஜென்ம குருவாக அமர்ந்து வாழ்க்கை மீது ஒருவித வெறுப்பையும், சலிப்பையும் ஏற்படுத்தியவர்! எங்கு சென்றாலும் ஏமாற்றங்களையும், இழப்புகளையும்தந்தவர்! குடும்பத்திலும் உங்களுக்கென்று ஒரு தனித்து வம் இல்லாமல் செய்தவர்! எவ்வளவு உழைத்தாலும் நல்ல பெயர் இல்லையே என்று ஆதங் கப்பட்டு புலம்ப வைத்தவர்! இப்படிப் பலவகையிலும் இன்னல்களை மாறி மாறித் தந்து மனதில் அமைதியே இல்லாமல் நிலைகுலையச் செய்த குருபகவான் 04.10.2018 முதல் 28.10.2019 வரை உங்கள் ராசியை விட்டு விலகித் தனது வீடான 2ஆம் வீட்டில் அமர்வதால் தினந்தோறும் எதிர்பார்த்து ஏமாந்த தொகை இனி உங்களுடைய கைக்கு வரும்.

குடும்பஸ்தானத்தில் குரு அமர்வதால் இனி மகிழ்ச்சியான சூழ்நிலை உண்டாகும். சந்தேகத்தால் பிரிந்திருந்த கணவன், மனைவி ஒன்று சேருவீர்கள். திருமணம், கிரகப் பிரவேசம் போன்ற சுப நிகழ்ச்சிகளால் வீடு களைகட்டும். தாழ்வு மனப் பான்மை, தோல்விமனப்பான்மையிலிருந்து விடுபடுவீர்கள். கூடாப்பழக்க முள்ளவர்களின் நட்பை விட்டு முழுமையாக விலகுவீர்கள். விலை உயர்ந்த தங்க ஆபரணங்கள் வாங்குவீர்கள். பழுதாகிக் கிடந்த வாகனம், மின்னணு, மின்சார சாதனங்களைமாற்றுவீர்கள். வேலைக்குவிண்ணப்பித்துக்காத்திருந்தவர்களுக்கு நல்ல நிறுவனத்திலிருந்து அழைப்பு வரும். இனந்தெரியாத கவலைகளால் தூக்கமில்லாமல் தவித்தீர்களே! இனி ஆழ்ந்த உறக்கம் வரும். நீண்ட நாள்களாக போக நினைத்த புண்ணியத்தலங்களுக்குச் சென்று வருவீர்கள். தந்தையாருடன் இருந்த மோதல்கள் விலகும். அவரின் ஆரோக்கியமும் சீராகும். பாகப்பிரிவினை சுமூகமாக முடியும். மகளுக்கு நல்ல திருமணப் பொருத்தம் அமையும். மகனுக்கு எதிர்பார்த்த நிறுவனத்தில் வேலை கிடைக்கும்.

### குருபகவானின் பார்வைப் பலன்கள்

குரு உங்கள்ராசிக்கு 6ஆம்வீட்டைபார்ப்பதால்கடன்பிரச்சினைகட்டுப்பாட்டுக்குள் வரும். பெரிய நோயிலிருந்து விடுபடுவீர்கள். குரு 8ம் வீட்டை பார்ப்பதால் வெளிநாடு செல்வீர்கள். பங்குகள் மூலம் பணம் வரும். ஆயுள் கூடும். வேற்று மதத்தினர் உதவுவார். குரு 10ஆம் வீட்டைப் பார்ப்பதால் பெரிய பதவிகளுக்கு தேர்ந்தெடுக்கப்படுவீர்கள். உங்கள் கல்வித் தகுதிக் கேற்ப நல்ல வேலை கிடைக்கும். அரசு காரியங்கள் விரைந்து முடியும்.

### குருபகவானின் நட்சத்திர சஞ்சாரம்

04.10.2018 முதல் 20.10.2018 வரை உங்களின் சேவகாதிபதியும், சஷ்டமாதிபதியு மான குருபகவான் விசாகம் நட்சத்திரத்தில் செல்வதால் உங்களைப் பற்றிய வதந்திகளைச்சிலர் பரப்புவார்கள். கடந்த காலத்தில் கிடைத்த நல்லவாய்ப்புகளை யெல்லாம் சரியாகப் பயன்படுத்தாமல் விட்டுவிட்டோமே என்றெல்லாம் வருந்துவீர்கள். மற்றவர்களுடன் உங்களை ஒப்பிட்டுக் கொண்டிருக்காதீர்கள். உங்களின் தனித்தன்மையை இழந்துவிடாதீர்கள். 21.10.2018 முதல் 19.12.2018 வரை உங்களின் சுக, பூர்வ புண்ணியாதிபதியான சனிபகவானின் அனுஷம் நட் சத்திரத்தில் குருபகவான் செல்வதால் புதிய யோசனைகள் பிறக்கும். பிள்ளைகளால் சொந்த பந்தங்கள் மத்தியில் அந்தஸ்து உயரும். அயல்நாடு செல்லும் வாய்ப்பு வரும். புது வேலை கிடைக்கும். தாயார் மற்றும் தாய்வழி உறவினர்களின் ஆதரவு கிட்டும். வேற்றுமதத்தவர்கள், மொழியினர்கள் நண்பர்களாக அறிமுகமாவார்கள். குலதெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். பூர்வீகச் சொத்தால் வருமானம் வரும். 20.12.2018 முதல் 12.03.2019 வரை மற்றும் 09.08.2019 முதல் 27.10.2019 வரை உங்களின் பாக்யாதிபதியும் விரயாதிபதியுமான புதனின் கேட்டை நட்சத்திரத்தில் செல்வதால் பணவரவு உண்டு. புது வீடு கட்டத் தொடங்கு வீர்கள். எதிர்பாராத இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும். தந்தை மற்றும் தந்தைவழி உறவினர்களால் ஆதாயமடைவீர்கள். பயணங்களால் மகிழ்ச்சி தங்கும். பிதுர்வழிச் சொத்து கைக்கு வரும்.

### குருபகவானின் அதிசார வக்ர சஞ்சாரம்

13.03.2019 முதல் 18.05.2019 வரை குருபகவான் கேதுவின் நட்சத்திரமான மூலம் நட்சத்திரத்தில் அதிசார வக்ரமாகி செல்வதால் இந்தக் காலக்கட்டத்தில் தலைசுற்றல், அடிவயிற்றில் வலி, வீண் பழி வந்துசெல்லும். சட்டத்துக்குப் புறம்பான வகையில் யாருக்கும் உதவ வேண்டாம். மனைவிவழியில் செலவுகள் அதிகமாகும்.

### குருபகவானின் வக்ர சஞ்சாரம்

10.04.2019 முதல் 18.5.2019 வரை மூலம் நட்சத்திரத்தில் வக்ர கதியிலும் மற்றும் 19.05.2019 முதல் 08.08.2019 வரை கேட்டை நட்சத்திரத்திலும் வக்ர கதியில் செல்வதால் கொஞ்சம் சிக்கனமாக இருங்கள். குடும்ப அந்தரங்க விடயங்களைப் பற்றி மற்றவர்களிடம் விவாதிக்க வேண்டாம். தூக்கம் குறையும். நண்பர்களுடன் மோதல்கள் வரும்.




விரிவான சிந்தனையும், வேடிக்கையான பேச்சும், வினோதப் போக்கும் கொண்ட நீங்கள், நாலும் அறிந்தவர்கள். தன்மானம் அதிகமுள்ள நீங்கள் தயவு, தாட்சண்யம் அதிகம் பார்ப்பவர்கள். விமர்சனங்களைத் தாங்கிக் கொள்ள மாட்டீர்கள். இதுவரை உங்கள் ராசிக்கு 12ஆம் வீட்டில் அமர்ந்து உங்களுக்கு வீண் அலைச்சல், விரயச் செலவுகள், ஏமாற்றங்கள், தூக்க மின் மையைத் தந்து கொண்டிருந்த குருபகவான் 04.10.2018 முதல் 28.10.2019 வரை உங்கள் ராசிக்குள் நுழைந்து ஜென்ம குருவாக அமர்வதால் பொறுப்புகளும், வேலைச்சுமையும் அதிகரிக்கும். தேடலும், நிம்மதியற்ற போக்கும் அதிகரிக்கும். அதிகாரப் பதவியில் இருப்பவர்களை எதிர்ப்பீர்கள். அவசரப்பட்டு வாக்குறுதிகளை அளித்து அதை நிறைவேற்ற முடியாமல் திணறுவீர்கள்.

ஜென்மகுருவாக இருப்பதால் அவ்வப்போது கோபப்படுவீர்கள். யாரிடமாவது சண்டைபோட வேண்டுமென நினைப்பீர்கள். உங்களைப்பற்றித் தவறாக எப்போதோ, எங்கேயோ, யாரோ சொன்னதெல்லாம் இப்போது நினைவுக்கு வந்து புலம்புவீர்கள். சாப்பாட்டில் உப்பைக் குறையுங்கள். குருதி அழுத்தம் அதிகமாகும். பெரிய நோய் இருப்பதாக நினைத்து பயம் வரும். உங்கள் இயல்புக்கு மாறான நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாம். தங்க ஆபரணங் களை இரவல் வாங்கவோ, வழங்கவோ வேண்டாம். வங்கியில் உங்கள் கணக்கில் போதிய பணம் இருக்கிறதா என்று பார்த்துவிட்டுக் காசோலை வழங்குவது நல்லது. திடீரென்று அறி முகமாகுபவரை நம்பி முடிவுகள் எடுக்க வேண்டாம்.

### குருபகவானின் பார்வை பலன்கள்

குரு உங்கள்ராசிக்கு 5ஆம் வீட்டைப்பார்ப்பதால் குழந்தை பாக்கியம் உண்டு. பூர்வீக சொத் துப் பிரச்சினைகள் கொஞ்சம் கொஞ்சமாக தீரும். சிலர் தங்களது பங்கை விற்று நகரத்தை ஒட்டி இடம் வாங்குவீர்கள். தியானம், பொது சேவையில் மனம் ஈடுபாடு கொள்ளும். மகளுக்கு நல்ல வரன் அமையும். குரு 7ம் வீட்டைப் பார்ப்பதால் தள்ளிப் போன திருமணம் கூடிவரும். போட்டிகளில் வெற்றி பெறுவீர்கள். கணவன், மனைவிக்குள் சச்சரவு இருந்தாலும் பாசம் குறையாது.

### குருபகவானின் நட்சத்திர சஞ்சாரம்

04.10.2018 முதல் 20.10.2018 வரை உங்களின் தன, பூர்வபுண்யாதிபதியான குருபகவான் தன் சாரமான விசாகம் நட்சத்திரத்தில் செல்வதால் இந்தக் காலக் கட்டத்தில் பணப்புழக்கம் அதிகரிக்கும். வி.ஐ.பிகளின் தொடர்பு கிடைக்கும். வெளிவட்டாரத்தில் மதிப்புக் கூடும். வேலைக்கு விண்ணப்பித்து காத்திருந்தவர்களுக்கு நல்ல நிறுவனத்திலிருந்து அழைப்பு வரும். பிள்ளைகளால் சமூக மதிப்பு உயரும். 21.10.2018 முதல் 19.12.2018 வரை உங்க ளின் சேவகாதிபதியும், சுகாதிபதியுமான சனி பகவானின் அனுஷம் நட்சத்திரத்தில் குருபக வான் செல்வதால் வேலைச்சுமையால் பதட்டப்படுவீர்கள். எதிர்பார்த்த வேலைகள் முடியா மல் போனாலும் எதிர்பாராத காரியங்கள் முடிவடையும். வீட்டில் கழிவுநீர்க் குழாய், குடிநீர்க் குழாய் பழுதாக வாய்ப்பிருக்கிறது.

தாயாருக்கு மூட்டுவலி, எலும்புதேய்மானம் வரக்கூடும். அவருடன் ஆரோக்கியமான விவா தங்களும் வந்து போகும். இளைய சகோதர வகையில் சங்கடங்கள் வரும். அநாவசிய செலவுகளைத் தவிர்க்கப்பாருங்கள். சிலர் பழைய வீட்டை இடித்துக் கட்டுவீர்கள். வாகனம் வாங்குவீர்கள். 20.12.2018 முதல் 12.03.2019 வரை மற்றும் 09.08.2019 முதல் 27.10.2019 வரை அஷ்டமாதிபதியும், லாபாதிபதியுமான புதனின் கேட்டை நட்சத்திரத்தில் செல்வதால் மற்றவர்களுக்காக ஜாமீன், கேரண்டர் கையெழுத்திட வேண்டாம். உறவினர், நண்பர்களால் அன்புத் தொல்லைகள் அதிகரிக்கும். பூர்வீக சொத்துப் பராமரிப்புச் செலவுகள் வந்துபோகும். தொண்டைப்புகைச்சல், சளித்தொந்தரவு, காய்ச்சல், மறைமுக நெருக்கடிகள், வாகன விபத்துகள் வந்து செல்லும். வெளிநாடு செல்ல நுழைவுவிசைவு கிடைக்கும். அயல் நாட்டிலிருப்பவர்கள் உதவுவார்கள். நட்புவட்டம் விரியும்.

### குருபகவானின் அதிசார வக்ர சஞ்சாரம்

13.03.2019 முதல் 18.05.2019 வரை குருபகவான் கேதுவின் நட்சத்திரமான மூலம் நட்சத் திரத்தில் அதிசார வக்ரத்தில் செல்வதால் திடீர் பணவரவு உண்டு. அரசால் ஆதாயமடைவீர் கள். சிலருக்கு வீடு, மனை அமையும். திருமண முயற்சிகள் தாமதமாகும். வெளிவட்டாரத் தொடர்புகள் அதிகரிக்கும். உங்களை விட வயதில் குறைந்தவர்கள் மூலமாக ஆதாயமடை வீர்கள். அரசு காரியங்கள் உடனே முடியும்.

### குருபகவானின் வக்ர சஞ்சாரம்

10.04.2019 முதல் 18.5.2019 வரை மூலம் நட்சத்திரத்தில் வக்ர கதியிலும் மற்றும் 19.05.2019 முதல் 08.08.2019 வரை கேட்டை நட்சத்திரத்திலும் வக்ர கதியில் செல்வதால் நீண்ட நாள் கனவுகள் நனவாகும். புதிய நண்பரின் கோபத்தைக் கட்டுப்படுத்தி உயர்வதற் கான வழியை யோசிப்பீர்கள். விருந்தினர்களின் வருகையால் வீடு களைகட்டும். உங்கள் ரசனைக்கேற்ப வீடு, வாகனம் அமையும். ஊர்ப்பொது நிகழ்ச்சிகளையெல்லாம் முன்னின்று நடத்துவீர்கள்.

# வாணியின் மழைக்கால கோலங்கள்



முற்றிலும் வாடிக்கையாளர்களின் நலன் கருதி அதிரடியான விலைக்கழிவுடன்

- மழைக் கவசங்கள்
- குளிர் அங்கிகள் (சுவற்றர்)
- 'யக்கட் வகைகள்
- குடை வகைகள்
- நுளம்பு வலைகள்
- சிறுவர்களுக்கான மழைக் கவசங்கள்

பொறிக்கப்பட்ட விலையில் இருந்து குறைத்து வழங்கப்படுகின்றது

**வாணி ரெக்ஸ்**

இல. 81, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.

T.P: 021 222 5578



MCS BIT

தகவல் தொழில் நுட்பத்தில் நீங்களும்



## கொழும்பு பல்கலைக்கழகத்தின்

வெளிவாரிப் பட்டப்படிப்பு

## விஞ்ஞானமாணி-தகவல் தொழில்நுட்பம்

- கற்கை நெறிகள் MCS நிறுவனத்திலும் பரீட்சைகள் யாழ் பல்கலைக்கழகத்திலும் நடைபெறும்.
- க.பொ.த உயர் தரப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் நேரடியாகவும் ஏனையோர் FIT A/L கற்கை நெறியில் சித்தியடைவதன் மூலமும் விண்ணப்பிக்க முடியும்.
- இவ்வாண்டு பரீட்சைக்கு தோற்றி பெறுபேற்றுக்காக காத்திருப்போரும் விண்ணப்பிக்க முடியும்.
- கற்கை நெறியில் முதல் ஆண்டைப் பூர்த்தி செய்யும் மாணவர்களுக்கு கொழும்பு பல்கலைக்கழகத்தின் Diploma in Information Technology (NVQ5)சான்றிதழ் வழங்கப்படும்.
- கற்கைநெறி முழுவதனையும் பூர்த்தி செய்வதன் மூலம் நீங்களும் ஒரு கணனிப் பட்டதாரியாகலாம்.
- மேலும் முதுமாணிக்கற்கைநெறியை கொழும்பு, மொரட்டுவ, பேரதெனிய மற்றும் பிரித்தானிய அமெரிக்க கனடிய பல்கலைக்கழகங்களில் வேலை செய்துகொண்டே தொடர முடியும்.
- எந்தவொரு பல்கலைக்கழக மாணவர்களும் BIT கற்கைநெறியைப் பயில்வதற்கு பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.
- மேலும் *BIT கற்கை நெறியினை பயிலும் மாணவர்களுக்கு **Higher Diploma in Information Techonology** சான்றிதழ் பெறும் சந்தர்ப்பம்.

*அரசவங்கிகளில் வெளிநாடுகளிலும் **System Engineer, System Administrators (CCNA, MTA,MCSA, MCSE-USA** தகைமைகளையும் பெற்றுக்கொள்ள முடியும்.

* உயர் வேலைவாய்பிற்கான உத்தரவாதம்.

*முதலாம் ஆண்டு கற்கும் போதே Diplom in Ms office, Web Desighing, Hardware, Networking, Photoshop ,English , Java Programming உள்ளிட்ட 7க்கு மேற்பட்ட டிப்ளோமா சான்றிதழ்களையும் பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பம்.

* 2000 ம் ஆண்டு முதல் நூற்றுக்கணக்கான தகவல் தொழில் நுட்ப பட்டதாரிகளை உருவாக்கி உள்ளநாட்டிலும் வெளிநாட்டிலும் உயர் வேலைவாய்ப்பை பெற்றுக்கொடுத்த நிறுவனம்

விண்ணப்பப் படிவங்களிற்கும் மேலதிக விபரங்களிற்கும், நேரில்
MCS IT CAMPUS, யாழ். பல்கலைக்கழகம் அருகில்

சிறந்த பெறுபேற்றுக்கான சிறப்பு விருதினை கொழும்பு பல்கலைக்கழத்திடமிருந்து விருதினை வென்ற நிறுவனம்

CIMA

Chartered Institute of Management Accountants



- சர்வதேச அங்கீகாரம் பெற்ற கற்கை நெறி.
- 16வயதிற்கு மேற்பட்ட எவரும் பயிலலாம்.
- சர்வதேச அங்கீகாரம் பெற்ற கற்கை நெறி
- 2008 ஆம் ஆண்டு யாழில் இக்கற்கை நெறியை தொடர்ச்சியாக சிறப்பாக நடாத்தி வரும் அங்கீகாரம் பெற்ற பயிற்சி நிறுவனம், புரீட்சை மையம்.
- பல நூற்றுக்கணக்கான CIMA UKதகைமையாளர்களை உருவாக்கி உயர் வேலை வாய்ப்பை பெற்றுக்கொடுத்த நிறுவனம்.
- சிறந்த பேறுபேற்றுக்கான. விருதினை CIMA _UK நிறுவனத்திடமிருந்து வென்ற நிறுவனம்.
- Diploma in Accounting Package, Diploma in English, Diploma in Msoffice Totally Free

புலமைப்பரிசிலிற்கும் மேலதிக விபரத்திற்கும்
Type<Course>Name> send to 772 395 895


## மரண அறிவித்தல்

# ஐயம்பிள்ளை சிவசுப்பிரமணியம்

*(செல்லத்துரை - இளைப்பாறிய ஆசிரியர்)*



புங்குடுதீவு 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் புங்குடுதீவு 12ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் தற்போது 14/2, விவசாய பாடசாலை அருகில், பலாலி வீதி, திருநெல்வேலியில் வசித்தவருமாகிய ஐயம்பிள்ளை சிவசுப்பிரமணியம் நேற்று (08.10.2018) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை - அன்னபூரணிப்பிள்ளை தம்பதிகளின் மூத்த மகனும் காலஞ்சென்றவர்களான சுப்பையா - நல்லதங்கம் தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்புக் கணவரும் சுலோசனா (ஓய்வுநிலை ஆசிரியர்), சுசீலா (கனடா), சிவநேசன் (பிரான்ஸ்), சசிகலா, சிவதாசன் (கனடா), சிவகாந்தன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் சர்வகுணசீலன் (ஓய்வுநிலை கிராம சேவகர் - J/117), வசந்தகுமாரன் (கனடா), காலஞ்சென்ற பத்மரூபி (பிரான்ஸ்), திருலிங்கநாதன் (அபிராமிசூசென்ரர், யாழ்ப்பாணம்), கிரிசாம்பாள் (கனடா), கற்பகரூபி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான நாகம்மா, சிந்தாமணி (சிந்து), இராசேந்திரம், தம்பாபிள்ளை, வைத்திலிங்கம் மற்றும் குமரையா (கொழும்பு), குணமாலை (கொழும்பு), சாந்தலிங்கம் (சுவிஸ்), காலஞ்சென்ற பூபாலசிங்கம் மற்றும் சிவராசா (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் காலஞ்சென்றவர்களான நாகநாதி, சிவஞானம் மற்றும் அங்கயற்கண்ணி (புங்குடுதீவு), காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் அன்னலட்சுமி (கனடா), நாகம்மா (கொழும்பு), ரதிதேவி (கொழும்பு), விஜயலட்சுமி (சுவிஸ்), அன்னலட்சுமி (கனடா), புஸ்பராணி (கனடா) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் வினோகாந்தன் (ஆசிரியர் - கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயம்), பிரகல்யா (ஆசிரிய மாணவி - கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலை), பிரணவன் (Kyvor Engineering and Construction), டிரூபா, அஜிதா, சரண்யா (கனடா), சிவாம்சன், சிவானுஜன், பிரனுதா (பிரான்ஸ்), திலக்ஷன், சதுர்ஜன், அபிராமி, அனோஜா, லக்ஷா (கனடா), சங்கீர்த்தனி, சயானி (கனடா) ஆகியோரின் பாசமிகு பேரனும் அஸ்விகா, அகர்ஷன் ஆகியோரின் பாசமிகு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.10.2018) செவ்வாய்க்கிழமை பி.ப. 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


**14/2, விவசாய பாடசாலை அருகில்,**
**பலாலி வீதி, கோண்டாவில். 021 205 3958, 077 839 2158**

**தகவல்: த.சர்வகுணசீலன்**
**(ஓய்வுபெற்ற G.S. J/117)**

## வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகம், மாதகல் ஆதனப்பெயர் மாற்ற அறிவித்தல்

**வட்டாரம் :- 05**
**ஆதன இல. :- உத்தேச ஆதன இல :- 77/11 - 13**
**வீதி :- ஞான வைரவர் கோயில் ஒழுங்கை**
**கிராம சேவையாளர் பிரிவு :-** J/151

எமது இடாப்பில் வட்டாரம் 05, ஞான வைரவர் கோயில் ஒழுங்கை, உத்தேச ஆதன இல.77/11 - 13 இல் இவ் ஆதனம் அமைந்துள்ளது. உறுதிப்படி வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் மேற்கு தற்போது தென் மேற்குப் பகுதி பண்டத்தரிப்பு கோவிற்பற்று சில்லாலை இறை **"வீச்சுக் கண்ணோலையும் சீமாவளவும்"** என்னும் பெயருள்ள நிலப்பரப்பு 14 குழி 12.8 இதில் வடக்குப் புறமாக அறுதி விற்ற பரப்பு நில இலா மூன்றேகாலும் பரப்பு நில இலா நான்கும் குளி பதினேழும் பரப்பு நில இலா இரண்டரையும் நீக்கி மிகுதி தெற்குப் புறமாகப் பரப்பு நில இலா நான்கும் (4 பரப்பு) அதற்குச் சேர்ந்தவைகளும் கொண்ட இவ்வாதனம் மாதகல் அந்தோனியார் வீதி இராமலிங்கம் கெங்காதரன் என்பவரால் அவ்வூர் வீரசிங்கம் கிருஷ்ண ராசாவுக்கும் பெண் வினோபாவுக்கும் ஆகிய இவர்களுக்கு அறுதி உறுதி மூலம் பிரசித்த நொத்தாரிஸ் திரு.ப.இராசகுரு அவர்கள் முகாவில் நிறைவேறிய 8332 ஆம் இலக்க 27.09.2011 ஆம் திகதிய உறுதி மூலம் தமக்குச் சொந்தம் எனத் தெரியப்படுத்தி எமது பண்டத்தரிப்பு கிராம உப அலுவலக (மாதகல்) ஆதனப்பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளனர். நில அளவையாளர் திரு.A.சந்தியாப்பிள்ளை அவர்களால் வரையப்பட்ட 2659 ஆம் இலக்க 29.01.2016 ஆம் திகதிய நில அளவைப்படத்தின் பிரகாரம் இவ்வாதனமானது **"வீச்சுக்கண்ணோலையும் சீமாவளவும்"** நிலப்பரப்பு 04 கொண்ட குறித்த ஆதனத்தின் பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் பிரசுரித்த திகதியிலிருந்து 30 நாள்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது வீரசிங்கம் கிருஷ்ணராசாவுக்கும் பெண் வினோபாவுக்கும் என்னும் பெயருக்குப் பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனையும் இந்த ஆதனப்பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்புக்கும் வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் அறியத்தருகின்றேன். அத்துடன் இவ் ஆதனத்தின் ஆரம்ப உறுதி வெளிப்படுத்தலாகக் காணப்படுவதால் இவ் விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படுகின்றது.




**திரு.அ.ஜெபநேசன்**
**தவிசாளர்**
**வலி.தென்மேற்கு பிரதேச சபை,**
**மானிப்பாய்.**

(CS/20404) (11,17)

## ஆதனப் பெயர்மாற்றம் தொடர்பான அறிவித்தல் வலிகாமம் தெற்கு பிரதேசசபை உப அலுவலகம், ஏழாலை. வட்டாரம் - 09, உந்துருவை வீதி, ஆதன இலக்கம் 79, ஏழாலை வடக்கு.

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் ஏழாலை உப அலுவலகத்துக்குட்பட்ட கலாநிதி வீதி, ஏழாலை வடக்கு, ஏழாலை என்னும் முகவரியில் வட்டாரம் - 09, உந்துருவை வீதி, ஆதன இலக்கம் 79 இல் அமைந்துள்ள ஆதனமானது எமது ஆதனவரிப் பதிவேட்டில் Mrs.குகாநந்தம் வேலுப்பிள்ளை என்னும் பெயரில் உள்ளது.

வடக்கு மாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் வடக்குப் பகுதி, வலி தெற்கு பிரதேச செயலகப் பிரிவு J/205 கிராமசேவகர் பிரிவு, மல்லாகம் கோவிற்பற்று, ஏழாலை வடக்கு இறை, **"கட்டிரை"**, நிலப்பரப்பு ஒன்றே முக்கால் 1¾ இதற்கு எல்லைகள் கிழக்கு வயிரமுத்து பெண் சின்னம்மாவின் ஆதனம், வடக்கு கலைவாணி வீதி, மேற்கு பொன்னையா மகாலிங்கத்தின் ஆதனம், தெற்கும் பொன்னையா மகாலிங்கத்தின் ஆதனம் இதடாங்கலும் எனக்குறிப்பிடப்பட்ட ஆதனமானது 14029 ஆம் இலக்க, 2012.06.30 ஆம் திகதிய பிரசித்த நொத்தாரிசு வேலுப்பிள்ளை தம்பு முருகுப்பிள்ளை கதிர்காமநாதன் எழுதிய நன்கொடை உறுதி மூலம் சின்னப்பு முருகையா மகள் ஜீவனா என்பவருக்கு நன்கொடையாக வந்தடைந்துள்ளது. உத்தரவு பெற்ற நில அளவையாளர் M.சண்முகநாதன் அவர்களின் 2018.08.23 ஆம் திகதிய 3843 ஆம் இலக்க நில அளவை வரைபடத்தில் துண்டு - 01 எனக்குறிப்பிடப்பட்ட இவ்வாதனமானது நிலப்பரப்பு 01 குழி 10.35 அளவுடையதாகக் காணப்படுகின்றது. இவ்வாதனத்தினை பிரதேசசபை ஆதனவரிப் பதிவேடுகளில் சின்னப்பு முருகையா மகள் ஜீவனா என்பவரின் பெயரில் பெயர்மாற்றம் செய்யும் பொருட்டு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.

மேற்குறித்த ஆதனமானது ஏழாலை வடக்கு சின்னப்பு முருகையாவும் பெண் இந்திராதேவியும் ஆகியோரால் சின்னப்பு முருகையா மகள் ஜீவனா என்பவருக்கு 14029 ஆம் இலக்க 2012.06.30 ஆம் திகதி பிரசித்த நொத்தாரிசு வே.த.மு.கதிர்காமநாதன் எழுதிய நன்கொடை உறுதி மூலம் வழங்கப்பட்டுள்ளது. இவ்வுறுதியின் தாயுறுதியாகிய 14028 ஆம் இலக்க 2012.06.30 ஆம் திகதி பிரசித்த நொத்தாரிசு வே.த.மு.கதிர்காமநாதன் எழுதிய பிரகடன உறுதியானது சின்னப்பு முருகையாவும் பெண் இந்திராதேவியும் ஆகியோரால் வெளிப்படுத்தப்பட்டு எழுதப்பட்டுள்ளது. இவ்வுறுதியில் குறித்த ஆதனத்தின் நிலப்பரப்பு 01 ¾. ம் அதற்குரியவைகளும் முன்னர் அவ்வூர் எம்மில் 2ஆம் பேரின் பேர்த்தியாராகிய சின்னத்தம்பி பெண் சுந்தரத்துக்குச் சீதனமாக கொடுக்கப்பட்ட ஆதனமாகும் என்றும் எனது தந்தையார் முருகேசு வேலுப்பிள்ளை 1970 ஆம் ஆண்டில் காலமாகிய பின் பேர்த்தியார் சுந்தரம் யாம் 1978 இல் திருமணம் செய்துகொண்டபோது சீதனமாக உறுதி எழுதித் தந்திருந்தார் என்றும் ஆயினும் அஃது காலவோட்டத்தில் அருகிவிட்டது என்றும் ஆயினும் அக்காலம் தொடக்கம் ஆட்சியைப் பெற்றுக்கொண்ட நாங்கள் அவ் ஆதனத்தில் முதலில் மண்வீடு அமைத்தும் பின்னர் கல்வீடு கட்டிக் கொண்டும் குடும்பமாக வசித்து வந்தோம் என்றும் வீடு பின்னர் சிதைவுற்றது என்றும் ஆதனத்திலுள்ள பிரயோசனங்களின் பயன்களை அனுபவித்து வருகின்றோம் என்றும் எல்லைகளைப் பேணிப் பாதுகாத்து வருகின்றோம் என்றும் இற்றை நாள்வரையான எமது நீடித்த ஆட்சியில் எதுவித கேள்வி தடை குறுக்கீடு எதுவுமில்லை என்றும் அது எமது ஆதனமே என நிலைநிறுத்திக் கொள்ளக் காரணம் ஏற்பட்டது என்றும் குறித்த ஆதனமும் அதற்குரியவைகளும் எமது முப்பத்து நான்கு வருடங்களுக்கு மேலானதான நீடித்த தடங்கலற்ற குறுக்கீட்டற்ற பிரசித்தமான ஆட்சிக்குட்பட்ட வகையாலும் பிற காரணிகளாலும் எமது ஆதனமே என இத்தால் வெளிப்படுத்தி வெளியரங்கப்படுத்திப் பிரகடனப்படுத்திக் கொண்டோம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே மேற்குறித்த ஆதனத்தினை தற்போதைய உரிமையாளர் சின்னப்பு முருகையா மகள் ஜீவனா என்னும் பெயரில் பெயர்மாற்றம் செய்வது தொடர்பாக ஏதாவது ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாள்களுக்குள் தகுந்த ஆதாரங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது சின்னப்பு முருகையா மகள் ஜீவனா என்னும் பெயருக்குப் பெயர்மாற்றம் செய்வதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

மேலும் இப்பெயர் மாற்றத்தால் ஏற்படக்கூடிய எவ்விளைவுகளுக்கும் வலிகாமம் தெற்கு பிரதேச சபை எந்தவகையிலும் பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**தவிசாளர்,**
**வலிகாமம் தெற்கு பிரதேசசபை,**
**சுன்னாகம்.**

**01.10.2018** (CS20403)(11,17)

---

**Galaxy Star** வெற்றி வாரம் 272 / திகதி 07.10.2018

வெற்றி இலக்கங்கள் 09 13 23 24 38

அடுத்த ஞாயிற்றுக்கிழமை சுப்பர் பரிசுப்பொதி ரூ. 2,350,340/-

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB(space)LOT(space)GS என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

---

**ஜயோதா** உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1507 சீட்டிழுப்பு திகதி 08.10.2018

வெற்றி இலக்கங்கள் 12 20 52 68 ஆங்கில எழுத்து Z

அடுத்த வியாழக்கிழமை ஜக்பொட் ரூ 35, 735, 764/=

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB(space)LOT(space)JY என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

---

**சனிக்கிழமை அதிர்ஷ்டம்**
வெற்றி வாரம்: 3093 திகதி: 2018.10.08 திங்கட்கிழமை நீலம்
SATURDAY FORTUNE

வெற்றி இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து 01 43 60 66 X
போனஸ் இலக்கம் 28
அடுத்த புதன்கிழமைக்கான ஜக்பொட் 45,231,460/-

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB(space)LOT(space)AK என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

---

**அத கோடிபதி**
சீட்டிழுப்பு வாரம்: 397 வர்ணம் : சிவப்பு சீட்டிழுப்பு திகதி: 2018.10.08
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 58,247,685/-

வெற்றி இலக்கங்கள் 18 25 58 67 ஆங்கில எழுத்து R

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB(space)LOT(space)AK என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

---

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**சின்னத்தம்பி அப்புலிங்கம்**

பிறப்பு 02.10.1937
இறப்பு 09.10.2013

பக்தியுடன் பாசமூட்டி பார் போற்ற வாழ வைத்த உத்தமரே!
ஒளி விளக்கே ! குருவே! எங்கள் தந்தையே! எத்திசையில்
நாம் வாழ்ந்தாலும் உங்கள்
ஆத்மா சாந்திபெற ஆனந்தன் வைரவரை வணங்குகின்றோம்

**மானிப்பாய் வடகிழக்கு,**
**மானிப்பாய்.**
மகன் - முகுந்தன்

(CS/20406)(11,17)

---

## 21ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 17 . 01 . 1923



அம்மன் அடியில் 02 . 10 . 1997

**அமரர் நமசிவாயம் நடராசா**
திதி:- பிரதமை

அன்பான ஐயா! நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து
இருபத்தொரு ஆண்டுகள் ஆகி விட்டாலும்
எங்கள் இதயங்களில் என்றும் நீங்கள் குடியிருக்கிறீர்கள் ஐயா
பாலில் நெய் போல் எங்களுடன் கூட இருந்து
எங்களை வழிநடத்துவீர்கள் உங்கள் ஆத்மா
நிலையான பேரின்பத்தை அடைய அம்பாளை வேண்டுகின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தங்கள் அன்பான

**ஐயனார் கோயிலடி,**
**கல்வயல்,**
**சாவகச்சேரி.**

**மனைவி, மக்கள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்,**
**பூட்டப்பிள்ளைகள்**

---

## வேலையாள்கள் தேவை

லேபர் (கூலி) வேலையாள்கள் தேவை. உணவு, தங்குமிட வசதி இலவசம் சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**தொடர்பு - 077 0833 461**

## வேலையாள்கள் தேவை

சாவகச்சேரியில் உள்ள உணவகம் ஒன்றுக்கு றொட்டி தயாரிப்பதில் அனுபவமுள்ளவர் தேவை.

**077 248 0878, 076 794 9780**

(CS/20405)(11,17)

## வேலையாள்கள் தேவை

யாழ்.நகரில் இயங்கிவரும் மோட்டார் உதிரிப்பாக விற்பனை நிலையத்துக்கு

- கணினிக் கணக்காளர்
- கணக்காளர் (Accountant).
- விற்பனையாளர் தேவை.

35 வயதுக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

**075 632 8578** (CS/20405) (11,17)

---

## யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி

கந்தரோடை, சுன்னாகம்
முன்னாள் அதிபர்
அமரர் **வி.சிவசுப்பிரமணியம்** அவர்களின்



**22ஆவது ஆண்டு நினைவுப்பேருரை வைபவம் - 2018**

தலைவர் :- திரு.மு.செல்வஸ்தான் - அதிபர்
காலம் :- 10.10.2018 (புதன்கிழமை)
நேரம் :- மு.ப. 9.30 மணி
இடம் :- கந்தையா உபாத்தியாயர் மண்டபம்

தொடக்க உரை
திரு.S.பாஸ்கரா அவர்கள்
உறுப்பினர், மாநகரசபை, கொழும்பு.

நினைவுப் பேருரை
கௌரவ அமைச்சர் மனோகணேசன் அவர்கள்
(தேசிய கலந்துரையாடலுக்கான அமைச்சர்)

விடயம்
"முன்னோக்கி நகர்வு" (The way Forward)

நிறைவுரை
வைத்திய கலாநிதி S.சிவானந்தராஜா அவர்கள்

கல்லூரிக் கீதம்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
- விழா ஏற்பாட்டாளர்கள் -

---

## ES Printers




பனர் பிரிண்ட் (Banner), வியாபார மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கான பெயர் பலகைகள் (Name Board), மக் பிரிண்ட், ரீ-சேட், புத்தகங்கள், கையேடு (Handbills), நோட்டிஸ் (Notice) மற்றும் அனைத்து ஒவ்செற், டிஜிற்றல் அச்சக வேலைகளுக்கும் நாடவேண்டிய இடம்.

357. கஸ்தூரியார் வீதி.
யாழ்ப்பாணம்.
021 492 7471 / 021 492 7472
esprintersjaffna@gmail.com

# இனப்படுகொலை அரசின் ஆளுநரே! உடனே இலங்கைக்கு திரும்பிப் போ

## குரேக்கு எதிராக லண்டனில் ஆர்ப்பாட்டம்

இலண்டன் சென்றுள்ள வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரேக்கு எதிராக பிரித்தானிய புலம்பெயர் தமிழர்களால் பாரிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

இனப்படுகொலை அரசின் கோர முகங்களை மறைக்கப் பொது நிகழ்வுகளில் கலந்து மக்கள் மனங்களை மாற்றும் செயற்பாடுகளை செய்துவரும் வடக்கு ஆளுநர் இலங்கைக்கு திரும்ப அனுப்பப்பட வேண்டும் என்று கூறி புலம்பெயர் தமிழர்கள் எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

நாடுகடந்த தமிழீழ அரசின் ஏற்பாட்டில் வை.எம்.சி.ஏ. இந்திய மாணவர் விடுதிக்கு எதிரில் நேற்றுப் பிற்பகல் 1:30 தொடக்கம் இரவு 7மணி வரை நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் பெரும்திரளான புலம்பெயர் தமிழ் மக்கள் கலந்துகொண்டனர்.

ஆர்ப்பாட்டம்நடைபெற்றுக்கொண்டிருந்த போது அந்த விடுதிக்கு ஆளுநர் வருகை தந்தார் "இனப்படுகொலை சிங்கள அரசின் ஆளுநரே இலங்கைக்குதிரும்பிப் போ!" என ஆளுநருக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் ஆக்ரோசமாகக் கோசங்களை எழுப்பினர். இதனையடுத்து பெருமளவிலான பொலிஸார் சம்பவ இடத்தில் குவிக்கப்பட்டனர்.

ஆளுநருக்கு எதிராகக் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்திய நாடுகடந்த தமிழீழ அரசின் செயற்பாட்டாளர் ஒருவரும் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. (21)

# முல்லை.மாணவன் மட்டக்களப்பில் சடலமாக மீட்பு



முல்லைத்தீவைச் சேர்ந்த மட்டக்களப்பு கல்வியற் கல்லூரி மாணவன் கல்லூரி விடுதியில் சடலமாக மீட்கப்பட்டுள் ளான்.

முல்லைத்தீவு பொக்கணை பிரதேசத்தைச் சேர்ந்த மனுவேல்பிள்ளை பிரதீபன் (வயது-23) மாணவனே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டான். மட்டக்களப்பு ஆரையம் பதியில் உள்ள கல்வியற் கல்லூரியின் மாணவர் விடுதியில் தூக்கில் தொங்கிய நிலையில் மாணவனது உடல் மீட்கப்பட்டுள்ளது. பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (21)



யாழ்ப்பாண மாநகர முதல்வருக்கும் - இலங்கைக்கான பின்லாந்து நாட்டின் அரச உயர்ஸ்தானிகர் ஹரி காமாராயினன் தலைமையிலான குழுவினருக்குமிடையிலான சிறப்புச் சந்திப்பு ஒன்று அண்மையில் மாநகரமுதல்வர் அலுவலகத்தில் இடம்பெற்றுள்ளது. சந்திப்பில் யாழ் மாநகரத்தின் தற்போதைய நிலை மற்றும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பிலும், அபிவிருத்தித் திட்டங்களை அனைத்துத்தரப்பினரையும் இணைத்துக் கொண்டு வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு மேற்கொள்ளப்பட்டுவரும் நடவடிக்கைகள் தொடர்பில் முதல்வர் உயர்ஸ்தானிகர் தலைமையிலான குழுவினருக்கு விளக்கியிருந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது. (21)

# கட்டுரைப் போட்டி

பன்னாட்டு மாற்றுத்திறனாளிகள் தினத்தை முன்னிட்டு வரோட் அமையம் சமூகத்துக்கிடையிலான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் நடத்தும் கட்டுரைப் போட்டியோன்றை நடத்தவுள்ளனர்.

இந்தக் கட்டுரைப்போட்டியில் பாடசாலை மட்டத்திலிருந்து தரம் 10 - 13 மாணவர்கள், ஆர்வமுள்ள 18 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் பங்குபற்றலாம். பாடசாலை மட்டத்தில் பங்குபற்றும் போட்டியாளர்கள் தமது விண்ணப்பப்படிவத்தில் பாடசாலை அதிபரின் கையொப்பத்துடனும் ஏனையவர்கள் கிராம அலுவர் அல்லது மதக்குருமாரின் கையொப்பத்துடன் நிறைவேற்று இயக்குநர் வரோட் 4ஆம் கட்டை, மன்னார் வீதி, பம்பைமடு, வவுனியா எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு வரோட் அமைப்பினர் தெரிவித்துள்ளனர். மேலதிக தகவல்களுக்கு 0772207346, 0772363532 என்ற அலைபேசி இலக்கங்களுக்குத் தொடர்பு கொள்ளுமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (21)



மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்:
0773 788 654
WUSLEY
Wusley Lanka (PVT) Ltd
# 117, 1st Cross Lane, off Parakum Mw, Attidiya, Dehiwala
email: info@wusleylk.com
*நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

# ஏ.ரி.எம் அட்டை மோசடி; சந்தேகத்தில் ஒருவர் கைது

## இயந்திரத்தில் பணத்தை எடுக்கும் போது மாட்டிக் கொண்டார்.

யாழ்ப்பாணம், ஒக்.9

வேறு ஒரு நபரின் ஏ.ரி.எம் அட்டையைப் பயன்டுத்தி பணத்தை எடுத்தார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் யாழ்ப்பாணப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

தேசிய சேமிப்பு வங்கியின் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள கிளையில் நேற்று மாலை பணத்தை எடுக்கும் போதே, குறித்த நபர் மாட்டிக் கொண்டார். வங்கி ஊழியர்களால் மடக்கிப் பிடிக்கப்பட்ட அவர் யாழ்ப்பாணப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

சம்பவம்பற்றித்தெரிய வருவதாவது.

நபர் ஒருவரின் ஏ.ரி.எம் அட்டை அண்மையில் காணாமல் போயுள்ளது. அதில் பணத்தைப் பெற்றுக் கொள்ள உதவும் இரகசியக் குறியீடும் இருந்துள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் உரிமையாளர் ஏற்கனவே வங்கியில் முறையிட்டுள்ளார். அதன் அடிப்படையிலேயேகுறித்த நபர் பிடிக்கப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. சந்தேகநபர் அந்த அட்டையைப் பயன்படுத்தி ஒரு லட்சம் ரூபாவரை எடுத்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (21.7.26)

## அறிவித்தல்

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் ஜெ.ஜெயலன் ஆகிய எனது பெயரிலும் Sujjeevaah Ayurvedic Dispensary என்னும் பெயரிலுள்ள காசோலைப் புத்தகங்கள் மற்றும் சில ஆவணங்கள் அடங்கிய பை காணாமல் திருடு போய்விட்டது. இது தொடர்பாக உரிய வங்கிகளுக்கு அறிவித்ததுடன் பொலிஸ் முறைப்பாடும் செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**Dr. ஜெ. ஜெயலன், சுஜீவா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.**

## மரண அறிவித்தல்

### திருமதி பிரான்சிஸ் சேவியர் குலநாயகி



பிறப்பு 15.01.1935 | இறப்பு 08.10.2018

வசாவிளானைப் பிறப்பிடமாகவும், பத்தாவத்தை இளவாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பிரான்சிஸ் சேவியர் குலநாயகி நேற்று (08.10.2018) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சவரிமுத்து இராசம்மா தம்பதியரின் கனிஷ்ட புதல்வியும் காலஞ்சென்றவர்களான பிலிப்புப்பிள்ளை ஞானரட்ணம் தம்பதியரின் அன்புமருமகளும் காலஞ்சென்ற பிலிப்புப்பிள்ளை பிரான்சிஸ்சேவியரின் அன்புமனைவியும் காலஞ்சென்றவர்களான செல்வநாயகம், சொர்ணநாயகி, அமிர்தநாயகம், மரியநாயகம், லூர்துநாயகி, குலநாயகம் (கனடா) ஆகியோரின் அன்புச்சகோதரியும் திருமதி பாமலா சுரேந்திரன் (ஆசிரியர், மாதகல் சென் ஜோசப் ம.வி), ஜெயபாலன் (உரிமையாளர், ஜெயா ஸ்ரோர்ஸ் இளவாலை) ஆகியோரின் அன்புமாமியும் அருட்தந்தை எட்வின் நாதன் (புனித பத்திரிசியார் கல்லூரி), அருட்சகோதரி வேஜினா (திருச்சிலுவை கன்னிய மடம்) ஆகியோரின் அன்புச்சிறியதாயும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் பத்தாவத்தையில் உள்ள அவரது இல்லத்திலிருந்து நாளை (10.10.2018) புதன் கிழமை மு.ப. 10 மணியளவில் சேந்தாங்குளம் ஆரோக்கியநாதர் ஆலயத்தில் இரங்கல் திருப்பலியுடன் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் : அருட்தந்தை எட்வின்நாதன், அ. பரமநாயகம் (கனடா).**

## மரண அறிவித்தல்கள்

### முருகன் கிருஷ்ணன்



பிறப்பு 05.10.1924 | இறப்பு 07.10.2018

சிலும்பிலாசயடி நவிண்டிலைப் பிறப்பிடமாகவும். அம்பனையை வசிப்பிடமாகவும் தற்போது கொடிகாமம் இராமவிலை வசிப்பிடமாகவும் கொண்ட முருகன் கிருஷ்ணன் கடந்த (07.10.2018) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.10.2018)புதன் கிழமை இராமாவில் இல்லத்தில் நடைபெற்று மு.ப. 11 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக மீசாலை வடக்கு வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இராமாவில், கொடிகாமம்.**
**077 693 5772, 077 473 4071**
**தகவல் : குடும்பத்தினர்.**

### திருமதி அப்புக்குட்டி கனகம்மா



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும். சுழிபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அப்புக்குட்டி கனகம்மா நேற்று (08.10.2018) திங்கட் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கிருஷ்ணர் நாகம்மா தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்ற வேலன் சின்னக்குட்டி தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற அப்புக்குட்டியின் அன்புமனைவியும் கிளி (யாழ்ப்பாணம்), நல்லம்மா (யாழ்ப்பாணம்), தங்கராணி (யாழ்ப்பாணம்), விமலாதேவி (அச்சுவேலி) காலஞ்சென்ற சிவகுரு மற்றும் இராசையா, செல்லம்மா, மகிழம்மா, சிவபாக்கியம் ஆகியோரின் அன்புச்சகோதரியும் மாணிக்கம் (கொழும்பு), கந்தையா (திருகோணமலை), காலஞ்சென்ற வள்ளியாச்சி மற்றும் மாரிமுத்து, செல்லையா, நாகமணி, மார்க்கண்டு ஆகியோரின் அன்புமைத்துனியும் இராசமணி, சந்திரபாலு (அளவெட்டி), சற்குணராசா (சுண்டுக்குளி), சண்முகராசா (சுவிஸ்), சிறிதரன் (சுவிஸ்), உதயகுமார் (லண்டன்) ஆகியோரின் அன்புத்தாயும் சரோஜாதேவி (அளவெட்டி), தேவராணி (சுண்டுக்குளி), ரேகா (சுவிஸ்), ஆனந்தி (சுவிஸ்), சொப்சிகா (லண்டன்) காலஞ்சென்ற திருச்செல்வம் ஆகியோரின் அன்புமாமியும் சுமன் றஜிக்கா (கனடா), சுஜிக்கா, கீர்த்தி (சுழிபுரம்), கோகிலராஜ் (பிரான்ஸ்), பிரியங்கா, டிலானி, சிந்துஜா, சிலோஜினி (சுண்டுக்குளி), கிருஸ்னிகா, துளசிகா (அளவெட்டி) ஆதவன் டெனா (சுவிஸ்), லென்ஷா (சுவிஸ்), சணன் (சுவிஸ்), நிதின்ஷா (சுவிஸ்), அனுஷியா, அகீசன், சாகித்தியா (லண்டன்) ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.10.2018)செவ்வாய்க் கிழமை நண்பகல் 12 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல் : குடும்பத்தினர்.**

## ஆதி பராசக்தியின் அருள் பரப்பும்


# நவராத்திரி விரதம்

■ இ.குமாரசாமி சர்மா

அம்பிகையின் அருளை பெறுவதற்குப் பல விரதங்கள் கடைப்பிடிக்கப்பெற்றாலும் அவற்றுள் நவராத்திரி விரதமே மிகவும் சிறப்பானது என ஆகம நூல்கள் கூறுகின்றன.

அந்தவகையிலே ஆண்டு தோறும் புரட்டாதி மாதத்தில் 9 நாள்கள் அன்னை பராசக்தியை வீடுகளிலும், பாடசாலைகளிலும், ஆலயங்களிலும் பூஜை செய்து வழிபாடு இயற்றும் சாரதா நவராத்திரி விழா இன்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகின்றது.

முக்குணங்களுக்கும் மூலமான சர்வ லோக நாயகி, தமோ குண சஞ்சாரியான ஸ்ரீதுர்க்கா பரமேஸ்வரியாகவும், ராஜோ குண சொரூபியான ஸ்ரீ மகாலட்சுமியாகவும், சாத்வீகக் குண சொரூபியான ஸ்ரீ சரஸ்வதியாகவும், மூன்று அம்சங்களாக எமக்குத் தோற்றமளிப்பதுடன் அந்த மூன்று அம்சங்களும் மேலும் பல அம்சங்களாக தோற்றமளிக்கின்றன.



முக்குணங்களுக்கும் மூலமான சர்வ லோக நாயகியை ஒன்பது நாள்களும் பூஜிக்கும்போது, முதல் மூன்று நாள்கள் தமோ குண சஞ்சாரியான ஸ்ரீதுர்க்கா பரமேஸ்வரி வீரத்தையும், தைரியத்தையும் வேண்டியும், அடுத்த மூன்று நாள்கள் ராஜோ குண சொரூபியான ஸ்ரீ மகாலட்சுமியைச் சகல செல்வங்களை வேண்டியும், கடைசி மூன்று நாள்கள் சாத்வீகக் குண சொரூபியான ஸ்ரீ சரஸ்வதியை கல்வி, அறிவு, சகல கலை ஞானங்களை வேண்டியும் வணங்குகின்றோம்.

இந்தப் புண்ணியகாலமானது ஒன்பது தினங்களைக் கொண்டது.

அதனாலேயே நவராத்திரி என்னும் நாமம் பெற்று விளங்குகின்றது. ஒன்பது நாள்களிலும் லோகமாதாவாகிய பராசக்தி ஒன்பது வடிவங்களில் பூஜிக்கப்பெறுகின்றாள்.



அலைமகள், மலைமகள், கலைமகள் என முப்பெரும் தேவியரையும் துதித்து வழிபட்டு. இந்த உலக வாழ்கை சிறப்பாக அமைய முக்கியமான கல்வி, செல்வம், வெற்றி என்பவற்றை இறைவியிடம் வேண்டி இந்துக்கள் இந்தப் புனித நவராத்திரி விரதத்தைக் கடைப்பிடித்துவருகின்றனர்.

அதாவது வீரம், செல்வம், கல்வி என அனைத்தும் வாழ்வில் நிறைந்திருக்க வேண்டுமாயின். அவற்றை அருளும் நவராத்திரி விரதம் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என ஆகம நூல்கள் கூறுகின்றன. வாழ்க்கையின் எல்லாத் தேவைகளையும் அடைவதற்குப் பணம், பொருள் வேண்டும். இதற்காக மகாலட்சுமி தேவியை வணங்குகிறோம். பெற்ற பணத்தை பாதுகாப்பதற்கு மனவலிமை வேண்டும் அதற்காகத் துர்க்காதேவியை வழிபடுகிறோம். பணத்தை நல்வழியில் பயனள்ள காரியங்களுக்குப் பயன்படுத்துவதற்குக் கல்வியறிவு வேண்டும். அதற்குச் சரஸ்வதித் தாயை வணங்குகிறோம்.

இத்தகு சிறப்புடைய நவராத்திரி விழாவை ஆலயங்களிலும், பாடசாலைகளிலும், பணிபுரியும் அலுவகங்களிலும், தொழிற்சாலைகளிலும், இல்லங்களிலும் கும்பம் வைத்து, அதில் ஆதி பராசக்தியை ஆவாகணம் செய்து வழிபாடு இயற்றுவது வழக்கமாக இருந்துவருகிறது.

கொலுவைத்து ஒன்பது நாள்கள் பூஜை செய்து வீட்டுக்கு வரும் அனைவருக்கும் தாம்பூலம், தட்சணை, நைவேதியப் பொருள் கொடுக்க வேண்டும். ஒன்பது நாளும் பூஜை செய்ய இயலாதவர்கள் கடைசி மூன்று நாள்களான, 'சப்தமி, அஷ்டமி, நவமி' தினங்களில் பூஜை செய்யலாம். இதுவும் செய்ய முடியாதவர்கள் அஷ்டமி நவமியில் பூஜை செய்து விஜய தசமியில் முடிக்கலாம்.

பத்தாவது தினமான விஜயதசமி ஆலயங்களில் வெற்றித்தினமாகக் கொண்டாடப் பெறுகின்றது. அவாவது, விஜய தசமி தினம் என்பது அம்பிகை தவ வலிமையினால் பிரமதேவனிடம் பெற்ற வரத்தினால் அகங்காரம் கொண்டு தேவர்களையும், முனிவர்களையும் சித்திரவதை செய்து கொடுமைப்படுத்தி வந்த மகிஷாசுரனை 'துர்க்கா தேவி'யாக அவதாரம் எடுத்து சங்காரம் செய்த வெற்றித் திருநாளாக கொண்டாடப்பெறுகின்றது.

ஆக, ஆயிரம் இதழ்களையுடைய தாமரையில், இரண்டு கைகளிலும் தாமரை தாங்கி அபயம், வரதம் என்ற முத்திரைகளுடன் வீற்றிருந்து அருள்பாலிக்கும் ஆதிபராசத்தியின் அருளை நவராத்திரி காலத்தில் அடியவர்களாக வேண்டிப் பணிவோம். நல்லவர்களாக வாழ்ந்து நன்மக்கள்பேற்றுடன் இந்த மண்ணிலே மனிதப் பிறவி எடுத்ததன் பயனை அனுபவித்து வாழ்வாங்கு வாழ்வோமாக.

***தனம் தரும் கல்விதரும்***
***ஒரு நாளும் தளர்வறியா***
***மனம் தரும் தெய்வ வடிவம் தரும்***
***நெஞ்சில் வஞ்சம்.இல்லா***
***இனம் தரும் நல்லன எல்லாம் தரும்***
***அன்பர் என்பவர்க்கே***
***கனம் தரும் பூங்குழலாள்***
***அபிராமி கடைக் கண்களே!*** ■

# தபால் சேவகர்களைக் கௌரவிப்போம்!

■ அ. அச்சுதன்

ஆதி காலத்தில் செய்திப் பரிமாற்றம் என்பது, 'புகை எழுப்புதல், கூக்குரல் ஒலி, புறா, அஞ்சல் ஓட்டம்' ஊடாக இடம்பெற்றது. நாளடைவில், 'அஞ்சல், குதிரை வண்டி, றோயல் வான், ரயில், பேருந்து, வானூர்தி, கப்பல் ஊடாக' செய்திப் பரிமாற்றம் இடம்பெற்றது. தற்போது இந்தநிலை மாற்றம் கண்டுள்ளது. இன்று குறும் செய்தி, மின்னஞ்சல், தொலைநகல் என செய்திப் பரிமாற்றத்தின் போக்குகு வளர்ச்சி பெற்றுள்ளதை அவதானிக்க முடியும்.



பல ஆண்டுகளுக்கு முன்பு கடிதத் தொடர்பு ஐரோப்ப நாடுகளில் இருந்து மேற்கொள்ளப் பட்டது.



படிப்படியாக ஏனைய நாடுகளும் கடித தொடர்புகளை ஆரம்பித்த போது, அஞ்சல் கட்டணம் அறவிடுவதில் பல பிரச்சினைகள் ஏற்பட்டன. அதை நிவர்த்தி செய்யும் முகமாக அமெரிக்க அஞ்சல் மாஅதிபதி 1863 ஆம் ஆண்டு பாரிஸ் நகரில் 15 நாடுகள் இணைந்து செயலாற்றும் ஒரு கட்டமைப்பை ஆரம்பித்தார்.

1878.10.09 இல் பன்னாட்டு அஞ்சல் ஒன்றியம் உருவானது. இதை நினைவுகொள்ளும் விதமாக ஆண்டுதோறும் உலக நாடுகளில் ஐப்பசி மாதம் 09 ஆம் திகதியை உலக அஞ்சல் தினமாக கடைப்பிடித்துவருகின்றனர்.

பன்னாட்டு அஞ்சல் ஒன்றியத்தில் தற்போது 194 நாடுகள் அங்கம் வகிக்கின்றன.

இலங்கையைப் பொறுத்தவரையில், 200 ஆண்டுகள் கடந்து அஞ்சல் சேவை நடைபெற்று வருகின்றமை சிறப்பான விடயம். ஆரம்பகாலத்தில் கிழக்கிந்தியக் கம்பனிகள் கரையோர மார்க்கமாக அஞ்சல் சேவையை ஆரம்பித்தன. 1812ஆம் ஆண்டில் மக்கள் செறிந்து வாழ்ந்த திருகோணமலை, யாழ்ப்பாணம், மன்னார், கொழும்பு, காலி, மாத்தறை ஆகிய இடங்களில் தபால் அலுவலகங்கள் ஆரம்பிக்கப்பட்டன. 1921 ஆம் ஆண்டில் ஆனமடுவ, திவுலபிட்டிய ,கிரியெல்ல, அக்மீமன, மூதூர், சிலாவத்துறை ஆகிய இடங்களில் உப தபாலகங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

இலங்கையில் 1832 ஆம் ஆண்டில் குதிரை வ்ண்டி, 1805 ஆம் ஆண்டில் தொடருந்து, 1928 ஆம் ஆண்டில் வதனூர்தி, 1958 ஆம் ஆண்டில் பேருந்து மூலம் தபால் பரிமாற்றங்கள் இடம்பெற்றன. தற்போது கொழும்பு மத்திய தபால் தரம் பிரிக்கும் நிலையத்தை மையப்படுத்தி நாட்டின் பல பாகங்களுக்கும் தபால் பொருள்கள் அனுப்பி வைக்கப்படுகின்றன.

**இன்று உலக அஞ்சல் தினம்**

அதேபோன்று தற்காலத்தில் தொழில்நுட்பத்தின் மிகை வளர்ச்சி பல மாற்றங்களை கொண்டுவந்துள்ளபோதிலும், மூலப்பிரதிகள், காசேலைகள், கோவைகள் ,கடவுச்சீட்டு, ஆள் அடையாள அட்டை, பரீட்சை முடிவுகள், இரகசியச் செய்திகள் ஆகியவற்றைப் பரிமாற்றம் செய்வதற்கு மூடிய தபால்களே பயன்கொள்ளப்படுகின்றன. இவற்றுக்கு மாற்றீடு இந்த உலகில் இல்லை எனலாம்.

அந்தவகையிலே அஞ்சல் பொருள்களை விநியோகிப்பதில் பெரும் பங்காற்றி வருகின்ற தபால் சேவகர்களை இன்றைய உலக அஞ்சல் தினத்தில் கௌரவிப்போம்.



# இது புதுசு

புதிய வடிவமைப் பில் தோற் பைகள் அறிமுகமாகி யுள்ளன. இவை 5ஆயிரத்து 390 ரூபா முதல் விற்பனை செய் யப்படுகின்றன.





# கொழுப்பை கரைக்கும் கொள்ளு குழிப்பணியாரம்

**தேவையான பொருள்கள் :**

கொள்ளு - அரை கப்,
புழுங்கல் அரிசி - 1 கப்,
பச்சரிசி - கால் கப்,
வெந்தயம் - அரை டீஸ்பூன்,
பச்சைமிளகாய் - 2,
வெள்ளை எள் - சிறிது,
கொத்தமல்லி - தேவையான அளவு,
உப்பு, நல்லெண்ணெய் தேவைக்கு.

**செய்முறை :**

ப.மிளகாய், கொத்தமல்லியைப் பொடியாக நறுக்கிக் கொள்ளவும்.
வெள்ளை எள்ளை வெறும் கடாயில் போட்டு வறுத்து வைக்கவும்.
கொள்ளு, புழுங்கல் அரிசி, பச்சரிசி, வெந்தயம் சேர்த்து 4 மணி நேரம் ஊறவைக்கவும்.
அனைத்தும் நன்கு ஊறியதும் கிரைண்டரில் போட்டு அரைத்து உப்பு, வறுத்த எள் சேர்த்து பஜ்ஜி மாவு பதத்துக்குக் கரைத்துப் புளிக்க விடவும்.
சற்றுப் புளித்தவுடன் அதில் பச்சைமிளகாய், கொத்தமல்லி சேர்த்து கலந்து கொள்ளவும். குழிப்பணியாரச் சட்டியை அடுப்பில் வைத்துச் சூடானதும் நல்லெண்ணெய் விட்டு மாவை ஊற்றி இருபுறமும் வேகவைத்து எடுத்துப் பரிமாறவும். சுவையான கொள்ளு குழிப் பணியாரம் தயார்.




# புகைப்பிடிப்பதால் குறையும் ஆயுள்

புகைப்பிடிக்கும் ஒருவருக்கு அவரது வாழ்நாளில் சுமார் 13 முதல் 15 ஆண்டுகள் குறையும் நிலை ஏற்படுகிறது.
அந்தப் பழக்கத்தை அவர் நிறுத்தினால், குருதிக் குழாய்களில் படிந்திருக்கும் நிகோடின் முழுவதுமாக நீங்குவதற்கு 5 ஆண்டுகளாகும்.
புகைப்பிடிப்பதால், உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை அனைத்து உறுப்புகளும் பாதிக்கப்படும்.
தொடர்ந்து புகைப்பிடிக்கும்போது, .
உடலில் கெட்ட கொழுப்பின் அளவு (LDL) கூடுகிறது.
அதே நேரத்தில் நல்ல கொழுப்பின் அளவு (HDL) குறைகிறது.
மேலும், புகைபிடிப்பவர்களின் குருதி கட்டியாகி, கூட்டாகச் சேர்ந்து குருதிக் குழாயில் அடைப்பை ஏற்படுத்தி மாரடைப்புக்கு வழிவகுக்கிறது.
புகைபிடிப்பவரின் மனைவி உள்ளிட்ட குடும்பத்தினர் மற்றும் சுற்றி இருப்பவர்கள், அவர் விடும் புகையைச் சுவாசிக்கும்போது, அவர்களுக்கும் மாரடைப்பு ஏற்பட வாய்ப்புள்ளது.

# சைக்கிள் ஓட்டுவதால் ஏற்படும் நன்மைகள்

1. சைக்கிள் ஓட்டும்போது, இதயத்துடிப்புச் சீராகும். வயது முதிர்வு காரணமாக ஏற்படும் இதய வலுவிழப்பு, இதய அடைப்புப் போன்ற பிரச்சினைகள் தடுக்கப்படும்.
2. தினமும் அரை மணி நேரம் சைக்கிள் ஓட்டினால், மூளையின் செயல்பாடுகள் அதிகரித்துச் சுறுசுறுப்பு உண்டாகும்.
3. சைக்கிள் ஓட்டுவதால் கால் தசைகள், தொடைப்பகுதி தசைகள், எலும்புப் பகுதிகள், முதுகுத் தண்டுவடம், இடுப்புப் பகுதி போன்றவை வலிமைபெறும்.
4. குருதி அழுத்தம் தொடர்பான பிரச்சினைகள் வராது.
5. உடல் எடையைக் குறைக்க உதவும்.
6. சைக்கிள் ஓட்டுபவர்களது மூளையின் செயல்திறன் அதிகரிக்கும்.
7. மனதளவில் புத்துணர்ச்சி கிடைக்கும்.
8. மனஅழுத்தம், மனச்சோர்வு போன்ற பிரச்சினைகள் இருப்பவர்களுக்குச் சிறந்த தீர்வு கிடைக்கும்.
9. அதிக வியர்வை வெளிப்படுவதால், உடலிலுள்ள கெட்ட கொழுப்புகள் குறையும்.

# மனிதனை நிமிர வைத்த முதுகெலும்பு பற்றி அரிய தகவல்கள்



✦ நாம் பிறக்கும்போதே முதுகெலும்பு நல்ல வளர்ச்சி கண்டிருக்கும். அப்போது முதுகெலும்பில் 33 தனிப்பட்ட எலும்புகள் காணப்படும். இந்த 33 எலும்புகளும் ஒன்றுடன் ஒன்று இணைந்திருக்கும். பெரியவர்களாக முதிர்ச்சி அடைந்ததும் 26 எலும்புகளாக மாறிவிடும். சில எலும்புகள் ஒன்றிணைவதால் இந்த மாற்றம் நிகழ்கிறது.

✦ முதுகெலும்பின் அடிப்புறத்தில் இணைந்திருக்கும் முதல் நான்கு எலும்புகள் சிறு வால்போல வளைந்த தோற்றத்துடன் காணப்படும். இவை 'காக்சிக்ஸ்' எனப்படுகிறது.

✦ அதற்கு மேலுள்ள 5 இணைந்த எலும்புகள் 'சக்ரம்' எனப்படுகிறது. அடுத்த 5 எலும்புகள் இணைந்த பகுதி 'லாம்பர்' எனப்படுகிறது.

✦ லாம்பரைத் தொடர்ந்து ஏறத்தாழ செங்குத்தாக அமைந்த 12 எலும்புகள் இணைந்த பகுதி 'தோராசிக்' எனப்படுகிறது. அடுத் ததாக உச்சியில் கழுத்திற்கு நேர் பின்னால் அமைந்துள்ள 7 இணைந்த எலும்புப் பகுதியை 'செர்விகல்' என அழைக்கிறார்கள்.

✦ மனிதனைத் தவிர ஒட்டகச் சிவிங்கி, ஒட்டகம் ஆகியவற்றுக்கு மட்டுமே கழுத்து முதுகெலும்பு எண்ணிக்கை 7 என்ற எண்ணிக்கையில் உள்ளது.

✦ செர்விகல் முதுகெலும்பு தலைப்பகுதியை தாங்கும் அமைப்பாகவும் செயல்படுவதால் இதை 'அட்லஸ் எலும்பு' என்றும் கூறுவது உண்டு. கிரேக்க நம்பிக்கைப்படி உலகைத் தாங்கி நிற்கும் கடவுளாக அட்லஸ் கருதப்படுவதால் இதற்கு அந்தப் பெயர் ஏற்பட்டதாக சொல்வது உண்டு.

✦ முதுகெலும்பில் 120 தசைகள் உள்ளன. 220 தசை நார்கள் அவற்றை முதுகெலும்புடன் இணைக்கின்றன. இந்த இணைப்பே முதுகெலும்புக்கு உறுதித்தன்மை தருகிறது.
நரம்புகள் முதுகெலும்புடன் இணையவும், உணர்வுகள் கடத்தப்படவும் இது துணைபுரிகிறது.


✦ நூற்றுக்கும் மேற்பட்ட இணைப்புகள் இருப்பதால் முதுகெலும்பு நல்ல நெகிழ்வுத் தன்மையுடன் வளைந்து கொடுக்கிறது. இதுவே நமது பல்வேறு இயக்கத்துக்கு அடிப்படையாகவும் அமைகிறது.

✦ நாம் நன்கு வில்போல வளைவதால் ஒரு வட்டத்தில் மூன்றில் இரண்டு பங்கு வளைவை உருவாக்கும் அளவுக்கு முதுகெலும்பு வளைந்து கொடுக்கக் கூடியதாகும். இது அதன் நெகிழ்வுத்தன்மையின் பலத்தைக் காட்டுகிறது.

✦ இவ்வளவு நெகிழ்வுத்தன்மை கொண்டிருந்தாலும் அது உறுதியானது. 100 கிலோவுக்கு மேலான எடையையும், அழுத்தத்தையும் தாங்கும் திறன்கொண்டது முதுகெலும்பு.

✦ முதுகெலும்பில் இருந்து குருத்தெலும்பு உருவாகிறது. பஞ்சு போன்ற இந்த எலும்பு தண்டுவடத்துடன் இணைந்ததாக அதன் பின்னால் அமைந்திருக்கும்.

✦ குருத்தெலும்பு வளர்ச்சி அடையக்கூடியதாகும். ஈர்ப்பு விசை இல்லாத விண்வெளியில் இது வேகமாக விரிவடையும். விண்வெளியில் நீண்டகாலம் தங்கியிருந்து திரும்புபவர் உயரம் அதிகரித்திருப்பதற்கு குருத்தெலும்பு விரிவடைந்திருப்பதே காரணமாகும்.



# கோள்களை ஆளும் ஈர்ப்பியல்

பூங்குழலி

கற்களை மேலே எறிந்தால் கீழே விழுகின்றன. அலைகள் கடலில் பொங்கி எழுந்து அடிக்கின்றன. அண்டக் கோள்கள் பரிதியைச் சுற்றி வருகின்றன. நட்சத்திரக் கற்களின் ஒளிமந்தைகள் கோள்கள் போலச் சுற்றி வருகின்றன. இவற்றை எல்லாம் அகிலவெளியில் சீரான ஓரியக்கப் பண்பாட்டில் பில்லியன் ஆண்டுகளாக எது கட்டுப்படுத்தி ஆள்கிறது என்ற வினா எழுகிறது. உண்மையில் இத்தன்மை வெளிகளை நியூட்டன் ஈர்ப்பியல் உந்துசக்தி என்கிறார். ஆனால், அவர் கூற்று உலக முழுமையுமாகப் படியவில்லை. ஐன்ஸ்டைன் அதை வேறு விதமாகக் கற்பனை செய்து தன் ஒப்பியல் நியதியில் ஈர்ப்பியலைக் கால வெளியாகக் காட்டிப் பிரபஞ்சப் புதிர்களுக்குத் தீர்வு கண்டார்.

**அகிலவெளிப் பண்பாடு.**

ஐன்ஸ்டைன் விளக்கிய ஈர்ப்பியல் நியூட்டன் கூறியது போல் ஈரண்டங்கள் கவர்ந்து கொள்ளும் ஓர் ஈர்ப்புச் சக்தியில்லை. நான்கு பரிமாண அங்களவு உடைய அகிலவெளிப் பண்பாடு தான் ஐன்ஸ்டைன் விளக்கும் ஈர்ப்பியல் அண்டமோ, பிண்டமோ அல்லது ஒளி மந்தையோ அவை அகில வெளியை வளைக்கின்றன. அந்தக் காலவெளி வளைவே ஐன்ஸ்டைன் ஈர்ப்பியல் ஆக பரிணமிக்கிறது. அதை எளிமையாக இப்படி விளக்கலாம்.


கால வெளியைத் தட்டையான ஈரங்கப் பரிமாண ஓர் இறப்பர் தாளாக வைத்துக் கொண்டால், கனத்த பண்டங்கள் இறப்பர் தாளில் குழியை உண்டாக்கும். அந்த மாதிரி வளைவே ஐன்ஸ்டைன் கூறும் ஈர்ப்பியலாகக் கருதப்படுகிறது. ஈர்ப்பியல் சக்தியை மனிதன் பிற சக்திகளைக் கட்டுப் படுத்துபோல் மாற்ற முடியாது. சில சக்திகளைக் கூட்டலாம்; குறைக்கலாம் மற்றும் திசை மாற்றலாம். ஆனால், அண்டத்தின் ஈர்ப்பியலை அப்படிச் செய்ய இயலாது. ஈர்ப்பியலை எதிரொலிக்கச் செய்ய முடியாது. மெதுவாக்க முடியாது. விரைவாக்க இயலாது. திசைமாற்ற முடியாது. நிறுத்த முடியாது. அது ஒன்றை ஒன்று கவரும். ஆனால் விலக்காது.

**ஐன்ஸ்டைன் மாற்றி விளக்கிய ஈர்ப்பியல் நியதி**

1915 ஆம் ஆண்டு ஐன்ஸ்டைன் நியூட்டனின் ஈர்ப்பியல் விசையை வேறு கோணத்தில் நோக்கி அதை "வளைந்த வெளி" என்று கூறினார். அதாவது ஈர்ப்பியல் என்பது ஒருவித உந்துவிசை இல்லை. அண்டத்தின் திணிவுநிறை விண்வெளியை வளைக்கிறது என்று முதன்முதல் ஒரு புரியாத புதிரை அறிவித்தார். மேலும் இரண்டு அண்டங்களின் இடைத்தூரம் குறுகிய நேர் கோட்டில் இல்லாது பாதையில் உள்ள வேறோர் அண்டத்தின் ஈர்ப்பியல் குழியால் உள் நோக்கி வளைகிறது. சூரியனுக்குப் பின்னால் உள்ள ஒரு விண்மீனின் ஒளியைப் பூமியிலிருந்து ஒருவர் நோக்கினால், ஒளிக்கோடு சூரியனின் ஈர்ப்பியல் தளத்தால் வளைந்து காணப்படுகிறது. அதாவது ஒளியானது ஒரு கண்ணாடி வில்லையை ஊடுருவி வளைவது போல் சூரியனின் ஈர்ப்பு மண்டலம் ஒளியை வளைக்கிறது. அதாவது ஒளியைத் தன்னருகில் கடத்தும் போது சூரியனின் ஈர்ப்பியல் ஒரு "குவியாடி வில்லையாக" நடந்து கொள்கிறது. ஹபிள் தொலைநோக்கிக் காட்டிய அனைத்து கலக்ஸி மந்தைகளும் ஈர்ப்பியல் வளைவால் குவியப்பட்டு ஒளி மிகையாகி பிரமிக்க வைத்தன. அகில ஈர்ப்பியல் குவியாடி வளைவால் விளைந்த கலக்ஸிகளின் 'ஒளிமய உருப்பெருக்கம்' பொதுவாக 25 மடங்காகக் காணப்படுகிறது.

**ஐன்ஸ்டைன் புவியீர்ப்பினை ஆயும் விண்ணுளவி**


2004 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20 ஆம் திகதி நாசா 700 மில்லியன் டொலர் விண்ணு ளவியை 'போயிங் டெல்டா2' ரொக்கெட் மூலமாகப் பூமியை 400 மைல் உயரத்தில் சுற்றிவர அனுப்பியது. அந்த விண்ணுளவி ஓராண்டுகள் பூமியைச் சுற்றி ஐன்ஸ்டைன் புவியீர்ப்புக் கோட்பாட்டை நிரூபிக்க ஆய்வுகள் புரிந்தது. 'உளவி பி' ஐன்ஸ்டைன் புதிய விளக்கம் தந்த வெளி, காலம் ஆகியவற்றைச் சோதிப்பதுடன், அவற்றைப் புவியீர்ப்பு ஆற்றல் எவ்விதம் திரிபு செய்கிறது என்றும் உளவு செய்தது. ஐன்ஸ்டைன் கோட்பாடுகளின் இரண்டு பரிமாணங்களை உறுதிப்பாடு செய்ய நான்கு உருண்டைகள் கொண்டு சுற்றும் ஓர் ஆழி மிதப்பி விண்ணுளவியில் இயங்கி வருகிறது. உளவியானது ஒரு வழிகாட்டி விண்மீனை நோக்கித் தன்னை நேர்ப்படுத்திக் கொண்டு, கால வெளித் திரிபுகளைப் பதிவு செய்யும். ஓராண்டுகளாக ஆழிக் குண்டுகளின் சுற்றச்சுகள் எவ்விதம் நகர்ச்சி ஆகியுள்ளன என்றும் பதிவு செய்துள்ளது.




**ஈர்ப்பியல் 'பி - உளவி**

அமெரிக்காவின் ஸ்டான் போர்ட் பல்கலைக்கழகத்தின் பௌதிக விஞ்ஞானிகளும், பொறி நுணுக்காளரும் சேர்ந்து பூமியைச் சுற்றிவரும் ஒரு விண்ணுளவி மூலமாக நுணுக்க முறையில், ஐன்ஸ்டைன் வெளியிட்ட கால, வெளிப் பரிமாணத்தைச் சார்ந்திருக்கும் ஈர்ப்பியல் தத்துவத்தை நிரூபிக்க ஏறத்தாழ ஈராண்டுகளாகப் பெரு முயற்சி செய்து வருகிறார்கள். அதைச் செய்து கொண்டிருக்கும் அண்டவெளிக் கருவிதான், ஈர்ப்பியல் விண்ணுளவிபி. அந்தக்கருவி 2004ஆம் ஆண்டு முதல் பூமியைச் சுற்றிவந்து அந்தப்பணியைச் செய்து வருகிறது. 'விண்ணுளவிபி' என்பது ஈர்ப்பியல் பண்பின் பரிமாணங்களான காலம், வெளி ஆகியவற்றைப் பதிவு செய்யும் சார்பு நிலை சுற்றாழி மிதப்பியே அந்தக்கருவிக்குரிய அனைத்துப் பகுதிகளையும் உருவாக்கியவர்கள் நாசா, ஸ்டான் போர்ட் நிபுணர்களே.

பூகோளத்தை 400 மைல் உயரத்தில், துருவங்களுக்கு நேர் மேலே வட்டவீதியில் சுற்றிவரும் ஒரு விண்சிமிழில் அமைக்கப்பட்டுள்ள நான்கு கோள மிதப்பிகளின் மிக நுண்ணிய கோணத் திரிபுகளை உளவி துல்லியமாகப் பதிவு செய்ய வேண்டும். நான்கு கோளங்கள் ஆடும் அந்த மிதப்பி எந்த விதத் தடையும் இன்றி இயங்குவதால், ஏறக்குறைய பரிபூரணமாக கால வெளி மாறுதல்களை நுகர்ந்து அளந்து விடும் தகுதி பெற்றது.' உருளும் அந்த நான்கு கோளங்கள் எவ்விதம் காலமும் வெளியும் பூமியின் இருக்கையால் வளைவுபடுகின்றன என்பதைத் துல்லியமாக அளக்கும். மேலும் பூமியின் சுழற்சியால் அதன் அருகே காலமும், வெளியும் எப்படி அழுத்தமாகப் பாதிக்கப்படுகின்றன என்றும் அவை கண்டுபிடித்துப் பதிவு செய்யும். பூமியின் ஈர்ப்பியலால் ஏற்படும் இந்தக் கால, வெளி மாறுபாடுகள் மிகவும் சிறிதானாலும், அவற்றின் பாதிப்புகள் பிரபஞ்ச அமைப்பிலும், பிண்டத்தின் இருக்கையிலும் பெருத்த மாற்றங்களை உண்டாக்கவல்லவை. நாசா எடுத்துக் கொண்ட ஆய்வுத் திட்டங்களில் 'விண்ணுளவிபி' ஆராய்ச்சியே மிக்க ஆழமாக உளவும் , ஒரு நுணுக்கமான விஞ்ஞானத் தேடலாகக் கருதப்படுகிறது.



## இலங்கை...

அமைச்சர் மார்க் பீல்ட்டுக்கும் கொழும்பைத் தளமாகக் கொண்ட சிவில் அமைப்புப் பிரதிநிதிகளுக்கும் இடையில் கொழும்பில் கடந்த 6ஆம் திகதி சந்திப்பு இடம்பெற்றுள்ளது. இந்தச் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இலங்கை மீதான ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் விசாரணையின் அடிப்படையில் வெளியிடப்பட்ட அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு, ஐ.நா. மனித உரிமைகள் சபையில் 2015ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது. போர்க்குற்ற விசாரணைக்குப் பன்னாட்டுச் சமூகத்தையும் உள்ளடக்கிய கலப்பு நீதிமன்றப் பொறிமுறைக்கு அந்தத் தீர்மானம் பரிந்துரைத்திருந்தது. தீர்மானம் 2017ஆம் ஆண்டு மார்ச் மாதத்துடன் முடிவடைந்திருந்தது.

தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கை மீதான கண்காணிப்பை 2 ஆண்டுகள் நீடித்து 2017ஆம் ஆண்டு மார்ச் மாதம் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது. அந்தத் தீர்மானம் அடுத்த ஆண்டு மார்ச் மாதத்துடன் முடிவுறவுள்ளது.

இலங்கை அரசு, ஐ.நா. தீர்மானத்தின் பரிந்துரைகளை முழுமையாக நடைமுறைப்படுத்தியிராத நிலையில், இலங்கை மீதான கண்காணிப்பை இரண்டு ஆண்டுகளுக்கு நீடித்து மற்றொரு தீர்மானத்தைக் கொண்டு வர வேண்டும் என்று கொழும்பை மையமாகக் கொண்ட சிவில் அமைப்புக்கள் பிரிட்டன் அமைச்சரிடம் கோரியுள்ளன.

இலங்கை தொடர்பில் ஜெனிவாவில், அமெரிக்காவே கடந்த காலங்களில் தீர்மானங்களை முன்வைத்திருந்தது. பிரிட்டன் உள்ளிட்ட நாடுகள் அனுசரணை வழங்கியிருந்தன. ஐ.நா. மனித உரிமைகள் சபையிலிருந்து அமெரிக்கா வெளியேறியுள்ளமையால், பிரிட்டன் இந்தத் தீர்மான வரைவைக் கொண்டு வர வேண்டும் என்று கொழும்பை மையமாகக் கொண்ட சிவில் அமைப்புக்கள் பிரிட்டன் அமைச்சரிடம் கோரிக்கை முன்வைத்திருந்தன. அதனை அவர் ஏற்றுக் கொண்டதாக, சந்திப்பில் கலந்து கொண்ட சிவில் பிரதிநிதிகள் 'உதயனுக்குத்' தெரிவித்தனர். (5,10)

## விஜயகலா...

பிரிவுக்கு வருமாறு அழைக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் தமது சட்டத்தரணிகளுடன் நேற்றுக் காலை நாடாளுமன்ற விஜயகலா மகேஸ்வரன் முன்னிலையானார். அவரிடம் வாக்குமூலம் பதிவுசெய்யப்பட்ட பின்னர் விஜயகலா கைதுசெய்யப்பட்டார்.

அவர் கடும் பாதுகாப்புக்கு மத்தியில் குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் கொழும்பு தலைமை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

இதன்போது 5 இலட்சம் ரூபா சரீரப் பிணையில் அவரை விடுவிக்க நீதிமன்றம் உத்தரவிட்டது. அத்துடன், அவர் வெளிநாடு செல்வதற்குத் தடையையும் நீதிமன்றம் விதித்தது.

இந்த வழக்கு எதிர்வரும் டிசம்பர் மாதம் 7ஆம் திகதி மீள விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்றும் நீதிமன்றம் அறிவித்தது.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நிகழ்வின்போது தமிழீழ விடுதலைப்புலிகள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரன் வெளியிட்ட கருத்து தென்னிலங்கையில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்தன.

அவரை உடனடியாக அமைச்சுப் பதவியிலிருந்து நீக்குமாறு பொது எதிரணியினரான மகிந்த அணியினர் உள்ளிட்ட சில தரப்பினர் வலியுறுத்தினர். இதையடுத்து இராஜாங்க அமைச்சுப் பதவியை தாமாகவே முன்வந்து துறந்தார் விஜயகலா. ஐக்கிய தேசியக் கட்சியும் இது தொடர்பில் ஆராய விசாரணைக் குழுவொன்றை அமைத்திருந்தது.

விஜயகலாவின் உரை தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசனையின் பிரகாரம் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என நாடாளுமன்றில் சபாநாயகர் அறிவித்திருந்தார். (ற-21)

## விடுதலையை...

நடத்தப்பட்ட கவனவீர்ப்புப் போராட்டதையடுத்து, பல்கலைக் கழக மாணவர்களால் நடைபயணம் ஆரம்பிக்கப்பட்டது.

அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தியும், உணவு ஒறுப்பில் ஈடுபட்டுள்ள அரசியல் கைதிகளுக்குப் பலம் சேர்க்கும் வகையிலும் இந்த நடைபயணம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நடைபயணத்தில் தமிழ் மக்கள் அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என்று அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ற-21.106)

## வீட்டுத்...

அவற்றில் ஏற்பட்ட சிக்கல்கள் தொடர்பில் மாவட்டச் செயலருடன் அந்தக் குழு கலந்துரையாடியுள்ளது.

இந்தச் சந்திப்புத் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த கிளிநொச்சி மாவட்டச் செயலர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்ததாவது

கிளிநொச்சி மாவட்டத்துக்கு 16 ஆயிரம் வீடுகள் தேவை என்பதைச் சுட்டிக்காட்டியுள்ளோம். முன்னெடுக்கப்படவுள்ள வீட்டுத் திட்டத்தை 18 மாதங்களில் நிறைவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது என்று அவர்கள் தெரிவித்தனர். வீட்டுத் திட்டம் தொடர்பில் ஆய்வுகளை மேற்கொள்ளவே இந்தக் குழுவினர் வந்திருந்தனர்.

இந்திய அரசின் அனுசரணையுடன் முன்னெடுக்கப்படும் இந்த வீட்டுத் திட்டத்தால் கிளிநொச்சி மாவட்டத்தின் வீட்டுப் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும் என்று நம்புகின்றோம். இந்த வீட்டுத் திட்டங்களை கிளிநொச்சி மாவட்டச் செயலகம், பிரதேச செயலகங்களும் நேரடியாகக் கண்காணிக்கும்.

### குடிதண்ணீர்

கிளிநொச்சி மாவட்டத்தில் நீண்டகாலமாகக் குடிதண்ணீர்ப் பிரச்சினை காணப்படுகின்றது. நாம் பல வழிகளில் மக்களுக்குக் குடிதண்ணீர் வழங்கிவருகின்றோம். தற்போது 700 மில்லியன் ரூபா நிதிச் செலவில் பூநகரிக் குளம் அமைக்கும் திட்டம் வரையப்பட்டுள்ளது. அந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாகவும் இந்தக் குழுவினர் ஆய்வு செய்வர் - என்றார்.

அதன்பின்னர் கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட வீட்டுத் திட்டங்களை இந்தியக் குழுவினர் நேரில் சென்று பார்வையிட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-6)

## வானூர்திப்...

தரம் உயர்த்துவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது. அடிப்படைத் தேவைகளை மாத்திரம் முதலில் முழுமைப்படுத்தி தமிழகத்துக்கான வானூர்திச் சேவையை பலாலியிலிருந்து ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டி ருந்தது. தமிழகத்துக்கான வானூர்திச் சேவை ஆரம்பிக்கப்பட்ட பின்னர் பிராந்திய வானூர்தி நிலையத்துக்குரிய கட்டுமான அபிவிருத்திகளை மேற்கொள்வது என்று யாழ்ப்பாணத்தில் நடந்த உயர்மட்டக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டிருந்தது.

பலாலி வானூர்தி நிலையத்துக்கு வானூர்திகள் வருவதற்கான பாதை, பலாலி வானூர்தி நிலையத்திலிருந்து வானூர்திகள் வெளியேறும் பாதை என்பவற்றை வரையும் பணிகளை சிவில் வானூர்திப் பணியகம் ஓகஸ்ட் மாதம் ஆரம்பித்திருந்தது. பாதை வரையும் பணிகள் கடந்த வாரம் நிறைவு பெற்றுள்ளது.

பிராந்திய வானூர்தி நிலையத்துக்கு, வானூர்திகள் வருகை தரும், வெளிச் செல்லும் பாதைகள் மூன்று வரையப்பட வேண்டும் என்றும், தற்போது ஒரு பாதை மாத்திரமே வரையப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (5)

## ஓய்வுபெற்றோர்...

விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

ஓய்வூதியம் என்பது உரிமையா அல்லது சலுகையா என ஐயம் ஏற்பட்டுள்ளது. இதை வைத்துப் பட்டிமன்றம் ஒன்றைக் கூட நடத்தலாம். இங்கு பேசிய இரண்டு அதிகாரிகள் ஓய்வூதியம் வரப்பிரசாதம் என்று கூறினார்கள். அரச சேவையில் பல விடயங்கள் சலுகைகள் என வர்ணிக்கப்படுகின்றன. சம்பளத்தைத் தவிர அனைத்தும் சலுகைகள் என வர்ணிக்கப்படுகின்றது.

சம்பளம் என்பது உரித்து ஓய்வூதியம் என்பது சலுகை என ஒருவர் கூறுகின்றார். வரிச் சலுகையில் வாகனம் பெறுதல் சலுகை அது உரித்து அல்ல என்ற சர்ச்சையும் உள்ளது. பொது வெளியில் அது தொடர்பில் விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

எமது நாட்டில் ஓய்வூதியம் பெரும் வயதெல்லை தொடர்பில் மீளாய்வு இடம்பெற்று வருகின்றது. இது எமது நாட்டில் மட்டுமல்ல உலக நாடுகள் பலவற்றில் இடம்பெற்று வருகின்றது. 55 வயதுக்கு பின்னர் என இருந்து 60 வயதில் காட்டாயம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அவர்கள் அனுபவத்தில் உச்ச எல்லையில் இருக்கும் போது அவர்களுக்கு ஓய்வு வழங்குவது சரியா என்றும் பேசப்படுகின்றது. நான் இரண்டு தொழில்களைச் செய்கின்றேன். நான் சட்டத்தரணியாகவும், அரசியல் வாதியாகவும் உள்ளேன். இந்த இரண்டுக்கும் ஓய்வு வயதெல்லை கிடையாது. ஆனால் அரச பணிக்கு அப்படியல்ல. ஓர் வயதெல்லை இருக்கின்றது. எனினும் இந்த வயதெல்லையை மாற்றியமைக்க ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. அடுத்து வரும் வருடங்களில் மாற்றம் அடையலாம். இப்போது ஓய்வு பெற்றுள்ளவர்களுக்கு இது சாத்தியமாகாது விட்டாலும் இனி ஓய்வு பெறக்கூடியவர்களுக்கு சாதகமாக அமையலாம்.

ஓய்வு பெற்ற அரச உத்தியோகத்தர்களை அவர்கள் துறை சார்ந்த விடயங்களில் ஆலோசனைக்காகவும் பக்கபலமாகவும் ஈடுபடுத்த யோசனைகளை முன்வைக்க வேண்டிய தேவை உள்ளது. ஓய்வு பெற்றவர்கள் அவர்களின் துறையை விட்டு அரசியலுக்கு வரக்கூடாது. தொழில் புரிவது ஒருவருடைய மனிதத் தன்மையோடு பின்னிப்பிணைந்த விடயம். தொழில் செய்வதுதான் தன்னை சமூகத்துக்கு பிரயோசனமாக்குகின்ற செயற்பாடு. ஆக்கபூர்வமான செயற்பாட்டில் ஈடுபடுவது மாண்புக்குரிய விடயமாக இருக்கும். என்றார்.

நிகழ்வில் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சோ. சேனாதிராஜா தெரிவித்ததாவது

உள்நாட்டுப் போரின் காரணமாக பல திறமையான அரச உத்தியோகத்தர்கள் புலம்பெயர் நாடுகளுக்குச் சென்றுள்ளனர். இங்கிருந்து வெளியேறிய அரச உத்தியோகத்தர்கள், மருத்துவர்களை நாம் இந்த மண்ணில் சேவையாற்ற அழைக்கின்றோம். அவ்வாறு வருவோர்களை நாம் வரவேற்கத் தயாராக உள்ளோம். எமது நாட்டில் பணியாற்றும் அரச உத்தியோகத்தர்களுக்கும், மேற்குலக நாட்டு உத்தியோகத்தர்களுக்கும் பல வேறுபாடுகள் உள்ளன. மேற்குலகில் அவர்கள் தமக்கு மட்டும் உழைக்கின்றனர். ஆனால் இங்குள்ளவர்கள் அவர்களது ஒட்டுமொத்த குடும்பத்துக்குமே உழைக்கின்றார்கள்.

அங்குள்ளவர்களில் ஏராளமானவர்கள் அரச துறையை விட்டு தனியார் துறையில் ஆர்வமாகப் பணியாற்றுகின்றனர். இங்குள்ளவர்கள் பலர் அரச துறைகளிலேயே ஆர்வம் காட்டுகின்றனர். தனியார் துறைக்குச் செல்ல தயங்குகின்றனர். அரச துறைக்குச் செல்லாத பலர் தனியார் துறையில் ஈடுபட்டு அதிக ஊதியத்தைப் பெற்று வருகின்றனர். அவர்கள் உயர்ந்த தொழில்நுட்பம், அதிக வருமானம் என வாழ்கின்றனர். அதை இங்குள்ளவர்கள் புரிந்து கொள்கிறார்கள் இல்லை.

இங்குள்ளவர்களில் ஏராளமானவர்கள் விஞ்ஞானத் துறையில் ஆர்வம் காட்டப் பின்னடிக்கின்றனர். அந்தத் துறையின் வளர்ச்சி வீழ்ந்துள்ளது. எமது இளைய சமுதாயம் இதில் அக்கறை செலுத்த வேண்டும் - என்றார். (ற-8)

## பொலிஸாரின்...

தடை விதிக்க முடியாது என்றும், சட்டமா அதிபரிடம் ஆலோசனை பெறுமாறும் தெரிவித்த மன்று வழக்கை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 10ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது.

வல்வெட்டித்துறை நகர சபையில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைய கடந்த 5ஆம் திகதி தீருவில் பொதுப் பூங்காவில் தூபிக்கான அடிக்கல் நடும் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. தூபி அமைப்பதற்குச் சிலர் எதிர்ப்புத் தெரிவித்து எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டமையால் அடிக்கல் நடப்படவில்லை. வல்வெட்டித்துறைப் பொலிஸ் பொறுப்பதிகாரியாலும் தூபி அமைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. வல்வெட்டித்துறை நகர சபைத் தவிசாளர் கோ. கருணானந்தராசா பிரதிவாதியாகக் குறிப்பிடப்பட்டிருந்தார். அந்த வழக்கும் அன்றைய தினம் மதியம் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. விசாரணைகளை அடுத்து வழக்கு நேற்றுவரை ஒத்திவைக்கப்பட்டது.

நேற்று வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது. வல்வெட்டித்துறை நகர சபைத் தவிசாளார் கோ.கருணாகந்தராசா நீதிமன்றில் முன்னிலையானார். அவரது சார்பில் சட்டத்தரணி ந.சுஜீவன் முன்னிலையானார். விசாரணைகளை அடுத்து தடை உத்தரவு வழங்க முடியாது என்று தெரிவித்த நீதிவான் நளினி சுபாகரன் வழக்கை ஒத்திவைத்தார். (ற-26)

## சந்திப்புக்கு...

சீசெல்ஸ்க்கு பயணமாகியுள்ளார். இலங்கைக்கும் சீசெல்ஸ்க்கும் இடையிலான உறவுகளை மேலும் பலப்படுத்தும் நோக்கில் சீசெல்ஸின் அரச தலைவர் டெனி போவின் அழைப்பையேற்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, இரண்டு நாள் அரசமுறைப் பயணமாக நேற்றுக் காலை புறப்பட்டார்.

அநுராதபுரம் சிறைச்சாலையில் தமிழ் அரசியல் கைதிகள் கடந்த 14ஆம் திகதி உணவு ஒறுப்புப் போராட்டத்தை ஆரம்பித்திருந்தனர். அவர்கள் தம்மைக் குறுகிய கால மறுவாழ்வில் விடுவிக்குமாறு கோரிப் போராட்டத்தை தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றனர்.

இந்த விடயம் தொடர்பில் அரச தலைவருடன் பேச்சு நடத்துவதற்கு கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், கோரியிருந்தார். இதுவரை சந்திப்புக்கான நேரம் ஒதுக்கப்படவில்லை. இவ்வாறானதொரு நிலையிலேயே அரச தலைவர் வெளிநாடு பயணமாகியுள்ளார். (5)

## அதிகாலை...

இந்தச் சம்பவம் மீசாலையில் நடந்துள்ளது. புத்தூர்சந்தியில் உள்ள கமநலசேவைகள் திணைக்களத்துக்குப் பின்புறமாக உள்ள ஆசிரியர் ஒருவரின் வீட்டிலேயே கொள்ளைச் சம்பவம் நடந்துள்ளது

திங்கட்கிழமை அதிகாலை ஒரு மணியளவில் முகங்களை மூடிக் கட்டியவாறு சுமார் 10 பேர் மதில் பாய்ந்து வீட்டு வளவுக்குள் நுழைந்துள்ளனர். அவர்கள் கைகளில் வாள்கள், கூரிய ஆயுதங்களை வைத்திருந்துள்ளனர்.

கதவைத் திறக்குமாறு கூறியுள்ளனர். வாள்களை யன்னல் ஊடாகக் காட்டி அச்சுறுத்தியுள்ளனர். வீட்டிலிருந்தவர்கள் அபயக் குரலெழுப்பியுள்ளனர். வீட்டுக் கதவை உடைத்துக் கொண்டு கொள்ளைக் கும்பல் உள்நுழைந்துள்ளது.

வீட்டிலிருந்தவர்களை 6 பேர் வாள்களைக் காட்டி அச்சுறுத்தித் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்க ஏனையோர் வீட்டைச் சல்லடையிட்டுத் தேடுதல் நடத்தியுள்ளனர். சுமார் 8 பவுண் நகைகள், 4 ஆயிரம் ரூபா ரொக்கப்பணம் என்பன கொள்ளையிடப்பட்டுள்ளன.

சுமார் ஒரு மணி நேரமாக வீட்டைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொள்ளையர்கள் வைத்திருந்துள்ளனர். அபயக் குரல் கேட்டு வந்த அயலவர்களையும் கொள்ளையர்கள் வாள்களைக் காட்டி அச்சுறுத்தினர் என்று கூறப்படுகின்றது.

கொள்ளைச் சம்பவம் தொடர்பில் வீட்டு உரிமையாளரால் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கொள்ளைச் சம்பவம் தொடர்பில் உடனடியாக பொலிஸாருக்கு அறிக்கப்பட்டது என்றும் கொள்ளையர்கள் தப்பிச் சென்ற சிறிது நேரத்தின் பின்னரே பொலிஸார் சம்பவ இடத்துக்கு வந்தனர் என்றும் அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்தனர். (ற-9,159,37)

## அரசியல்...

"பயங்கரவாதத் தடைச் சட்டத்தை உடனடியாக நீக்கு", "இது தானா உங்கள் நல்லாட்சி", "அரசியல் கைதிகளை அரசியலுக்குப் பயன்படுத்தாதீர்", "பொய் வாக்குறுதிகளை வழங்கி ஏமாற்றாதே" போன்ற வாசங்கள் எழுதப்பட்ட பதாகைகளுடன் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கவும், புதிதாக நாடாளுமன்றில் நாளை (இன்று) கொண்டுவரப்படும் எதிர்ப்புச் சட்டத்தைப் புறக்கணிப்பதன் ஊடாக மாத்திரமே அரசியல் கைதிகளின் விடுதலை சாத்தியமாகும் என்று ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட யாழ்ப்பாணப் பல்கலைக் கழக சட்டத்துறைப் பேராசிரியர் குருபரன் தெரிவித்தார்.

பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்பட வேண்டும். அதனூடான அரசியல் தீர்வாலேயே இவர்களது விடுதலை சாத்தியமாகும். நாடாளுமன்றத்தில் சமர்பிக்கப்படவுள்ள பயங்கரவாத எதிர்ப்பு தடைச் சட்டம் பன்னாட்டுச் சமூகத்தின் கண்துடைப்புக்காகக் கொண்டுவரும் ஒரு விடயமாகும். புதிதாகக் கொண்டுவரப்படும் சட்டம் வேண்டாம் என்று சொல்வதற்கு எமது தமிழ் அரசியல் தலைமைகள் முன்வர வேண்டும். அரசியல் கைதிகளின் விவகாரத்தையும் இராணுவத்தின் விசாரணையும் ஒப்பிட வேண்டாம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

### அச்சுவேலி

அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி அச்சுவேலி பேருந்து நிலையத்துக்கு முன்பாக நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.

யாழ்ப்பாணம் மாவட்டப் பொது அமைப்புக்கள் மற்றும் அரசியல் கட்சிகள் இணைந்து இந்தப் போராட்டத்தை ஏற்பாடு செய்திருந்தனர்.

அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தும் பதாகைகளுடன் அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ஆர்ப்பாட்டத்தில் பொது அமைப்புக்களைச் சேர்ந்தோர், அரசியல் கட்சி உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பல தரப்பினர் கலந்து கொண்டனர். (ற-7-11)

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஒக். 9

**கால்பந்தாட்டம்**

ஆதிசக்தி விளையாட்டுக் கழகத்தின் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ரேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பொலிகை பாரதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**கூடைப்பந்தாட்டம்**

கே.எி.எி.எி. விளையாட்டுக் கழகம் நடத்தும் கே.எி.எி.எி. வெற்றிக் கிண்ணத்துக்கான கூடைப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கொக்குவில் இந்துக் கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 6 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கே.எி.எி.எி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஸ்கந்தாஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**கரப்பந்தாட்டம்**

நீர்வேலி காமாட்சி அம்பாள் விளையாட்டுக் கழகம் தனது மைதானத்தில் இரு பிரிவாகக் கரப்பந்தாட்டத் தொடர்களை நடத்தி வருகிறது. ஏ பிரிவில் இன்று இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் புத்தூர் வளர்மதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. பி பிரிவில் இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சண்டிலிப்பாய் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)



# மூன்று முறிப்பு ம.வி. இறுதிக்குச் சென்றது

யாழ்ப்பாணம், ஒக். 9

வவுனியா பாடசாலைகள் கால்பந்தாட்டச் சங்கம் நடத்திய கால்பந்தாட்டத் தொடரில் வவுனியா மூன்று முறிப்பு மகா வித்தியாலய அணி இறுதிக்குத் தகுதி பெற்றது.

வவுனியா நகரசபை மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அரையிறுதியாட்டத்தில் மூன்று முறிப்பு மகா வித்தியாலய அணியை எதிர்த்து வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலய அணி மோதியது.

ஆட்டத்தின் ஆரம்பம் முதல் இரண்டு அணிகளும் சிறந்த போராட்டத்தை வெளிப்படுத்தின. கோல்கள் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாவது பாதியும் கோல்கள் இல்லாமல் நகர்ந்து சென்றது.

ஆட்டம் நிறைவடைவதற்கு இரண்டு நிமிடங்கள் இருக்கையில் மூன்று முறிப்பு மகா வித்தியாலய அணியின் சார்பில் கோலொன்று பதிவானதை அடுத்து அந்த அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-422)

# வென்றது விண்மீன்

யாழ்ப்பாணம், ஒக். 9

நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் பலாலி விண்மீன் அணி வெற்றி பெற்றது.

நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பலாலி விண்மீன் விளையாட்டுக் கழக அணி மோதியது. 4:0 என்ற கோல் கணக்கில் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது. (ம-23)



இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனம் எவ்.ஏ. கிண்ணத் தொடரை தற்போது நடத்தி வருகிறது. இந்தத் தொடரின் ஆட்டமொன்று அரியாலை கால்பந்தாட்டப் பயிற்சி நிலைய மைதானத்தில் நாளை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. இதில் சிறைச்சாலைக் கால்பந்தாட்ட அணியை எதிர்த்து நாவாந்துறை சென். நீக்கிலஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)



# ரேஞ்சர்ஸ் அணி போராடி வெற்றி!

யாழ்ப்பாணம், ஒக். 9

ஆதிசக்தி விளையாட்டுக் கழகத்தின் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் ரேஞ்சர்ஸ் அணி வெற்றிபெற்றது.

வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் கொற்றாவத்தை ரேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது.

1:0 என்ற கோல் கணக்கில் கொற்றாவத்தை ரேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது. (ம-23)

# சென்றலைட்ஸ் அசத்தலாட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 9

கே.சி.சி.சி விளையாட்டுக்கழகம் நடத்தும் யாழ்ப்பாண மாவட்டக் கூடைப்பந்தாட்டச் சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் சென்றலைட்ஸ் அணி வெற்றிபெற்றது. சென்றலைட்ஸ் அணியை எதிர்த்து பற்றீசியன் அணி மோதியது.

ஒட்டுமொத்த புள்ளிகள் அடிப்படையில் சென்றலைட்ஸ் அணி 77:63 என்ற கணக்கில் வெற்றிபெற்றது. (ம-422)

## ஹமில்டன் மிரட்டல்

உலக கார்ப் பந்தயத் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஜப்பான் சுற்றில் வெற்றிபெற்றார் பிரிட்டன் வீரர் ஹமில்டன்.

ஒட்டுமொத்தப் புள்ளிகளின் அடிப்படையிலும் ஹமில்டன் முதலிடத்தில் உள்ளார். அவர் 331 புள்ளிகளை இதுவரை பெற்றுள்ளார். வெட்டல் 264 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தில் உள்ளார். போத்தாஸ் 207 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்தில் உள்ளார். (ம)





# டயமன்ஸ் அணி மகுடம் சூடியது

யாழ்ப்பாணம், ஒக். 9

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் 5ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அழைக்கப்பட்ட கால்பந்தாட்ட அணிகளுக்கு இடையில் நடத்தப்படும் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் டயமன்ஸ் அணி வெற்றிபெற்றது.

இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் மணற்காடு சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து டயமன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது.

நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரண்டு அணிகளும் தலா ஒரு கோலைப் பதிவு செய்ததை அடுத்து சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. முடிவில் 6:4 என்ற கோல்க் கணக்கில் டயமன்ஸ் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது. (ம-23)

## வோஸ்னியாக்கி மகுடம் சூடினார்

பன்னாட்டு முக்கியத்துவம் பெற்ற தொடர்களில் ஒன்றான சீனத்துத் தொடரில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் கிண்ணம் வென்றார் கரோலின் வோஸ்னியாக்கி.

பீஜிங் நகரில் இந்தத் தொடர் நடைபெற்றது. பெண்கள் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. பன்னாட்டுத் தரப்படுத்தலில் இரண்டாவது இடத்தில் உள்ளவரான வோஸ்னியாக்கியை எதிர்த்து லத்விய வீராங்கனை செவஸ்டோவா மோதினார்.

மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலாவது செற்றை 6:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றினார் வோஸ்னியாக்கி. அவர் தனது ஆதிக்கத்தைத் தொடர்ந்தும் தக்கவைத்து இரண்டாவது செற்றையும் 6:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றினார். இதையடுத்து அவர் 2:0 என்ற நேர்செற் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணம் வென்றார். (ம)



## ஜோசவாஸ் அணி அபார வெற்றி

யாழ்ப்பாணம், ஒக். 9

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் 5ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்டுவரும் கால்ப்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் மன்னார் ஜோசவாஸ் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.

இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் மன்னார் ஜோசவாஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழக அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களில் இரண்டு அணிகளும் தலா ஒரு கோலைப் பதிவு செய்ததை அடுத்து சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 4:2 என்ற கோல் கணக்கில் மன்னார் ஜோசவாஸ் அணி வெற்றிபெற்றது. (ம-23)



## மகாதீபம் வெற்றி

கிளிநொச்சி மாவட்டத் துடுப்பாட்டச் சங்கம் நடத்தும் கிளிநொச்சி பிறீமியர் லீக் துடுப்பாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் மகாதீபம் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.

கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அரையிறுதியாட்டத்தில் பப்ரிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மகாதீபம் விளையாட்டுக் கழக அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மகாதீபம் விளையாட்டுக் கழக அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய பப்ரிஸ் விளையாட்டுக் கழக அணி 13.3 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 57 ஓட்டங்களைப் பெற்றது.

பந்துவீச்சில் சுயன் 4 இலக்குகளையும், தனுசன் 3 இலக்குகளையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மகாதீபம் அணி 7.1 பந்துப் பரிமாற்றங்களில் இலக்குகளை இழக்காமல் 63 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்றது. (ம-23)



## ஜொலிஸ்ரார் முன்னேற்றம்

யாழ்ப்பாணம், ஒக். 9

கே.சி.சி.சி விளையாட்டுக் கழகம் நடத்தும் கூடைப்பந்தாட்டத் தொடரில் ஜொலிஸ்ரார் அணி முன்னேற்றம் கண்டது.

கொக்குவில் இந்துக் கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் ஜொலிஸ்ரார் அணியை எதிர்த்து ஸ்கந்தா ஸ்ரார் அணி மோதியது.

நான்கு கால்பாதிகளைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. 73:45 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது ஜொலிஸ்ரார் அணி. (ம-422)

# பாகிஸ்தான் வலுவான ஆரம்பம்

## ஆஸியும் அதே திசையில்

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான இரண்டு ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது ஆட்டத்தின் நேற்றைய இரண்டாம் நாள் நிறைவின் அடிப்படையில் பாகிஸ்தான் அணி வலுவான ஆரம்பம் கண்டது. ஆஸ்திரேலிய அணியும் சிறந்த ஆரம்பத்துக்குரிய சமிக்ஞைகளை வெளிப்படுத்தியது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. நேற்றுமுன்தின முதல்நாள் முடிவில் அந்த அணி 3 இலக்குகளை இழந்து 253 ஓட்டங்களைக் குவித்திருந்தது. சொகைல் 15 ஓட்டங்களுடனும், அப்பாஸ் ஓர் ஓட்டத்துடனும் இரண்டாம் நாளுக்காக நேற்றுக் களமிறங்கினர்.

பிறிதொரு ஓட்டத்தையும் பெறாமல் சிடிலின் பந்துவீச்சில் போல்ட் முறையில் ஆட்டமிழந்தார் அப்பாஸ். எனினும் சொகைல் மறுமுனையில் தடுப்புச் சுவராக அற்புதமாக விளையாடினார். சொகைலுடன் இணைந்து நீண்ட இணைப்பாட்டத்தை வழங்கினார் சபிக். பாகிஸ்தான் மேலும் வலுப்பெற்றது. இருவரும் ஆளுக்கொரு அரைச்சதங்களைப் பதிவுசெய்தனர். இணைப்பாட்டமாக 150 ஓட்டங்கள் பகிரப்பட்டிருந்த நிலையில் 80 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் சபிக். மறுமுனையில் சதம் கடந்தார் சொகைல். அவர் 110 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். பாகிஸ்தானின் பின்வரிசைப் பலமான அசாம் 4 ஓட்டங்களுடனும், அணித் தலைவர் அகமட் 15 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்து ஏமாற்றினார்கள். முடிவில் 482 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது பாகிஸ்தான்.

பந்துவீச்சில் சிடில் 3 இலக்குகளையும், லையன் 2 இலக்குகளையும் அதிகபட்சமாகக் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய ஆஸ்திரேலிய அணி நேற்றைய நாள் முடிவில் இலக்குச் சரிவில்லாமல் 30 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. (ம)





## ரி- 20 தொடரில் பாக். தோற்கும்

### ஸ்டேன்லேக் சபதம்

"பாகிஸ்தானுக்கு எதிரான ரி-20 தொடரில் அந்த அணியைப் பந்தாடத் தயாராக உள்ளோம்" என்று தெரிவித்தார் ஆஸ்திரேலிய அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஸ்டேன்லேக்.

இந்த இரண்டு அணிகளுக்கும் இடையில் தற்போது டெஸ்ட் தொடர் நடைபெற்று வருகிறது. இந்தத் தொடர் முடிந்த பின்னர் இரண்டு அணிகளும் மூன்று ஆட்டங்களைக் கொண்ட ரி-20 தொடரில் விளையாடு கின்றன. இந்தத் தொடர் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே ஸ்டேன்லேக் இவ்வாறு தெரிவித்தார்.

"நான் தற்போது ஏராளமான ஆட்டங்களில் விளைடியுள்ளேன். அதிக ஆட்டங்களில் விளையாடினால் நிலையான ஆட்டத்தை வெளிப்படுத்த முடியும். என்னால் தொடர்ந்து விளையாட உடல் ஒத்துழைக்கும் என நம்புகிறேன். சிம்பாப்வேயில் நடைபெற்ற முத்தரப்பு ரி-20 தொடரில் ஆஸ்திரேலியாவை வீழ்த்தி பாகிஸ்தான் கிண்ணம் வென்றது. அதற்குப் பதிலடி கொடுக்க இது சரியான நேரம். அவர்களை வீழ்த்த முடியும் என்ற நம்பிக்கை உள்ளது" என்று ஸ்டேன்லேக் மேலும் தெரிவித்தார். (ம)

**ஆள்கள் தேவை**

நகரின் மத்தியில் அமைந்துள்ள
பிரபல கல்வி நிறுவனம்
ஒன்றிற்கு இரவு நேர காவல்
வேலை செய்யக்கூடிய
ஆண் வேலையாள் தேவை
தகுதியுடையவர்கள் இத்தொலைபேசி
எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்

**071 777 5444**

**SPOKEN ENGLISH**
**WITH DIPLOMA CERTIFICATE**

இம்முறை A/L எழுதியோர், பல்கலை புகுமுக மாணவர்கள்
இளைஞர் , யுவதிகள் மற்றும் தொழில்புரிவோருக்கான

3 மாத சனி,ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் 13.10.2018 சனி

1. காலை 08.00-10.00   3.பி.பகல் 01.00-03.00
2. காலை 10.00-12.00   4.மாலை 03.00-05.00

கதைத்தலுக்கு தேவையான முழுமையான ஆங்கிலம் கற்பிக்கப்படும்

12.10.2018 வெள்ளிவரை முன்பதிவுகளைமேற்கொண்டு பயிற்சியில் இணையமுடியும்.

SAAMSON 403, வெலிங்டன் சந்தி, பெருமாள் கோயிலடி, யாழ்நகர். 077 621 4567 021 320 3313

# மேற்கிந்தியத் தீவுகள் அணியில் பிராவோ, பொலார்ட்டுக்கு இடம்

## விளையாடுவதற்கு கெய்ல் மறுப்பு



**அமெரிக்க லொத்தர் இலவச விசா**

உடனடியாக பதிவு செய்யுங்கள்

அமெரிக்க இலவச விசா வாய்ப்பு பெற விரையுங்கள் - இந்த வருடமே இறுதி வருடம்

0768226243

**V2 TRAVELS**

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் 0768226243 | கிளிநொச்சி 0768226240 |
| நெல்லியடி 0776699892 | சாவகச்சேரி 0768226242 |
| திருகோணமலை 0768226237 | மானிப்பாய் 0768226238 |
| சுன்னாகம் 0764550670 | யாழ்ப்பாணம் 0768226241 |
| பருத்தித்துறை 0768226230 | வல்வெட்டித்துறை 0776697960 |


இந்தியா - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடர் தற்போது நடைபெற்று வருகிறது.

அடுத்ததாக ஒருநாள், ரி20 தொடர்களில் இந்த அணிகள் விளையாடவுள்ளன. மட்டுப்படுத்தப்பட்ட ஆட்டங்களுக்கான மேற்கிந்தியத் தீவுகள் அணியில்பொலார்ட், பிராவோ ஆகியோர் சேர்க்கப்பட்டனர்.

ஒருநாள், ரி20 என்று இரண்டு வகைத் தொடர்களிலும் விளையாடுவதற்கு கெய்ல் மறுத்துவிட்டார். அவர் ஏன் மறுத்தார் என்பது தொடர்பான காரணங்கள் வெளியாகவில்லை. தனிப்பட்ட அலுவல்களுக்காகவே கெய்ல் விலகினார். உலகக்கிண்ணத் தொடரிலும், அதற்கு முன்னதாக நடைபெறும் இங்கிலாந்துக்கு எதிரான தொடரிலும் விளையாடுவதற்கு கெய்ல் ஆர்வமாக உள்ளார் என்று மேற்கிந்தியத் தீவுகளின் ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

பிராவோ, பொலார்ட் ஆகியோர் அணிக்குள் அழைக்கப்பட்ட போதிலும் அவர்கள் ஒருநாள் ஆட்டங்களுக்கான அணிக்காக அழைக்கப்படவில்லை. மாறாக ரி20 தொடருக்கான அணிக்கே அழைக்கப்பட்டுள்ளனர்.

அதேநேரம் சந்தர்போல் ஹேம்ராஜ், பேபியன் ஆலன் ஆகிய இரு வீரர்களும் இந்தியாவுக்கு எதிராக அறிமுகமாகவுள்ளனர். உலகக்கிண்ணத் தொடருக்கானதும், ரி20 உலகக்கிண்ணத் தொடருக்கானதுமான சிறந்த அணியைக் கட்டமைக்கவே இளம் வீரர்களுக்கு வாய்ப்பளிக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

**ஒருநாள் ஆட்டம்**

ஜேஸன் ஹோல்டர் (தலைவர்), பேபியன் ஆலம், சுனில் அம்பிரிஸ், தேவேந்திர பிஷூ, சந்தர்போல் ஹேம்ராஜ், சிம்ரன் ஹெட்மியர், சாய் ஹோப், அல்ஜாரி ஜோசப், எவின் லீவிஸ், ஆஷ்லே நர்ஸ், கீமோ போல், ரோவ்மன் பவெல், கீமர் ரோச், மார்லன் சாமுவேல்ஸ், ஓஸ்னே தோமஸ்

**ரி20 ஆட்டம்**

கார்லோஸ் பிரீத்வைட் (தலைவர்), பேபியன் ஆலன், டேரன் பிராவோ, சிம்ரன் ஹெட்மியர், எவின் லீவிஸ், ஒபெட் மெக்காய், ஆஷ்லே நர்ஸ், கீமோ போல், காரே பியரே, கிரான்ட் பொலார்ட், ரோவ்மென் பவெல், தினேஷ் ரம்டின், ஆன்ட்ரூ ரசல், ரூதர்போர்ட், ஓஸ்னே தோமஸ். (ம)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 09.10.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.